14 March 1940

ണ211, M15AB
N40 : 259
187550

296

REGD. No. M. 1190.







# ஆனந்த போதினி

## ANANDA BODHINI.

Vol. 25. பொருளடக்கம். No. 9.
பிரமாதி ஹு பங்குனிமீ 1உ

2 APR 1940
MADRAS





பக்கம்

1. கடவுள் வணக்கம் ... 611
2. இந்திய சுதந்திரக் கோரிக்கை 612
3. அபிஸீனிய சா[illegible] ... 618
4. இனி வரும் யுத்தம ... [illegible]
5. 'தந்தை மனம்' ... 627
6. "நம்மவர்கள்" ... 631
7. உடற் பயிற்சியும் அதன் பயன்களும் ... 635
8. கௌரியின் முடிவு ... 638
9. பாரதத்தாயின் மாண்பு ... 641
10. வாழ்க்கையின் வண்டி மாடுகள் 646
11. நியூஸ் பேப்பர் ... 650
12. பொதுவியலும் சிறப்பியலும் 653
13. ஹாலிவுட்டின் ஜாலக் காட்சிகள் ... 657
14. வித்தியார்த்தி ... 659
15. அண்ணல் கயட்டிய ஆண்மை 660
16. சாதிப்பேய் ... 664
17. ஞானசிந்தாமணி ... 667



## “ஆனந்தபோதினி”

### சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி உள்பட | இந்தியா, சிலோன் ... ... | 1—0—0 |
| | பர்மா ... ... | 1—4—0 |
| | பினாங், ஸிங்கப்பூர் தென் ஆப்ரிக்கா, பசரா, மெசபொடேமியா முதலிய வெளிநாடுகளுக்கு | 2—0—0 |
| நடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னுடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமாத முதல்தான் கணக்கு வைக்கப் பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3-அணுவோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினால் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக்கொள்வதே நலம், இதைக் கவனிக்கவும்

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம் மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில் லையாவது அனுப்பினாலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, ராஜத்துரோக விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாக வும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | பர்மா, முதலிய வெளிநாடுகளுக்கு | ,, | 25—0—0 |

Telephone No. 3005. *Telegram*:—“Ananda Bodhini”, Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், “ஆனந்தபோதினி” ஆபீஸ் [illegible] தபால் பெட்டி நெ. 167, சென்னை.

# கற்கோட்டை

நேர்த்தியான புதிய நாவல்.

இந்த அற்புதமான நாவல் ஏற்கனவே நமது ஆனந்தபோதினி சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப்பட்டு வந்தது. இதன் விசேஷத்தை யறிந்து நமது சந்தா நேயர்களில் அனேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தர வேண்டுமென்று பன்முறை கேட்டுக் கொண்டபடியால் இது வெளிப் படுத்தப்பட்டது.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாகக் கவர்ந்து கொள்ளும்; கதை முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இன்னும் இது சரித்திர சம்பந்தமான நாவல். இதில் தேசப் பிரஷ்டமடைந்த சில உயர்குல மகுடவர்த்தனர்கள் தலைமறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக் கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக்கொள்வதும் அவற்றினின்று தப்பித்துக் கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும், சொல் லொணா வியப்பையும் சோகத்தையும் வீரசத்தையும் காட்டும். சில ஸ்திரீ களின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதல ரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட் டாய் எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தி யுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். இக் கதையிலுள்ள கதா பாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும் அவற்றின் பயன் களும் மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சி யோடு புகட்டுவதேயாம்.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களெல்லாம் விளக்கிக் காட்டி எழுதப்பட் டிருக்கிறது. இதில் நூலாசிரியர் திருவுருவப்படமும் அமைக்கப்பட் டிருக்கிறது.

விலை ரூபா 2—0—0

வெளியாகிவிட்டது! வெளியாகிவிட்டது!!

# சம்பூர்ண இரேகை சாஸ்திரம்

சக்திதாசன் எழுதியது.

எல்லாம்வல்ல முருகன் திருவருளால் இந்நூல் வெளியாகிவிட்டது. தமிழ் மக்கள் தங்கள் எதிர்கால வாழ்வின் மர்மங்களை எளிதில் தெரிந்து கொள்ளலாம். உங்கள் கை ரேகை தேவபாஷை. அதை இந்த சாஸ்தி ரம் விளக்குகிறது. முருகன் திருவருள் பெற்ற சக்திதாசன் மிக்க எளிய நடையில் பாமரரும் தெரிந்துகொள்ளும்படி எழுதியிருக்கிறார். சோதி டத்தில் மயங்கித் திகைக்கிறவர்களுக்கு இது தெளிவைத் தரும். தமிழில் இதுவே முதன்மையானது, 416-பக்கம், 31-அத்தியாயம், 384-சித்திர விளக்கம் இன்னும் படித்ததை ஒப்பிட்டுப் பார்க்க. உலகப் பிரமுகர்களில் மகாத்மா காந்தி, கவிசிரேஷ்டர் ரவீந்திரநாத் தாகூர், முஸ்லோனி, போர்டு, இஃதன்றி சினிமா நடிகர் முதலிய 40-நபர்களின் கை ரேகைப் படங்களும், சரித்திரச் சுருக்கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த கிளேஸ் பதிப்பு. இன்றே ஆர்டர் செய்க.

இவ்வளவு பெரிய சாஸ்திரத்தின் விலை ரூபா 3 தான்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி 167, மதராஸ்.

காதலருக்கு இன்பந்தரும் நூதன நூல்

# இன்பவாழ்க்கையின் இரகசியங்கள்

அழகிய சீமை கலிகோ பைண்டு செய்யப்பட்டு கண்ணைக் கவரத்தக்க அநேக ஆப்டோன் படங்களுடன் **400** பக்கங்களுக்கு மேல் அழகிய பெதர்வெயிட் பேபரில் சுத்தமான எழுத்தில் அச்சிடப்பட்டது.

**(நான்காம் பதிப்பு)** **இதன் விலை ரூபா 2.**

*ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1—8—0.*



*இது காதலர்க்கு இன்பந்தரும் நூதன நூல்; போகானந்தத்தை விரும்பும் பூமான்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஆனந்த இரகசிய சாஸ்திரம்.*

*இது காதல் இன்பத்தை உள்ளவாறுணர்ந்து அனுபவித்து, இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாக நடத்திப் பேரானந்தக் கடலில் மூழ்கி நற்சந்ததிகளைப்பெற்று, மறுமைப் பயனையும் அடைதற் கேதுவாயிருக்கும்படி பற்பல இன்பமார்க்கங்கள் நிறைந்த இந்நூல் இப்போது இனிய தமிழ்நடையில் வெளியிடப் பெற்றிருக்கிறது. இதில் நமது பூர்வீக கொக்கோக சாஸ்திரத்தின் சாராம்சங்களும், அகப்பொருள் நூல்களின் கருத்துகளும், தேக தத்துவ சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரங்கள் முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் பல அரிய விஷயங்களும், நாகரம். தெலுங்கு, கன்னடம், மாராட்டி, அரபி, இந்துஸ்தானி, பார்ஸீ, இங்கிலீஷ், பிரென்ச் முதலிய பாஷைகளிலுள்ள இன்பரச நூல்களின் கொள்கைகளும், இன்ப வாழ்க்கையின் இரகசிய முறைகளும், அவற்றிற்குப் பொருத்தமான மனத்தையும் கண்ணையும் கவரும் ஆப்டோன் படங்களும், லயன் பிளாக்குகளும், இன்னும் இல்வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாகிய அநேகம் விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதனை வாங்கிப்படிப்போர் உண்மைக் காதல் என்பது இன்னதென்பதையும், இன்னவிதமானவர்களை மணம் புரிந்தால்தான் இன்பம் ஏற்படுமென்பதையும், இல்வாழ்க்கையில் இன்னவித மணக்கிரமங்களை அனுசரித்தால்தான் அளவற்ற ஆனந்தமுற்று அழகிய சந்ததிகளைப் பெற்று ஜீவித்திருக்கலா மென்பதையும் உணர்ந்து இவ்வுலகத்தில் அடைய வேண்டிய இன்பத்தையும், வறுமை இன்பத்தையும் அடைவார்கள். இதனை ஒவ்வொரு குடும்பத்தினரும் வாங்கி வாசிக்கலாம்.*

ஷை தெலுங்கு பதிப்பு விலை ரூபா 2.

## மதனபூஷணம் அல்லது இறந்தவள் பிழைத்தது

ஒரு துப்பறியும் நாவல்.

*ஸ்திரீகளுக்கு அளவுமீறிய சுயாதீன மளிப்பதால் உண்டாகும் தீமைகள் இதில் நன்றாய் விளக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பல நீதிகளும் இதில் விளங்கும். குற்றவாளி எவ்வளவோ தந்திரமாயும், முன் யோசனையோடும் குற்றத்தைச் செய்திருக்க, துப்பறிபவர் அதைக் கண்டுபிடிப்பது வாசிப்பவர்களுக்கு அதிக ஆச்சரியத்தையும், பிரமையையும் உண்டாக்கும், நிரபராதியான ஒருவன், சந்தர்ப்ப சாக்ஷியங்களாலும் மெய்யான குற்றவாளி செய்த தந்திரத்தாலும் ஆபத்தில் சிக்கிக்கொண்டு மரண தண்டனையடையும்தறுவாயிலிருப்பது வாசிப்பவர்களுக்கு மிக சோகத்தை யுண்டாக்கும். விலை ரூபா 1.*

## ஜெகத் ஜோதி அல்லது மாணிக்கத்தின் மர்மம்

துப்பறியும் தமிழ் நாவல்.

*எளிய நடை, இனிய மொழி, ஆற்றின் ஒழுங்கு, ஆனந்த வாரி, உலகியல் விளக்கும் ஒப்பற்ற கற்பனை, மனம் கவர்ந்து எழாவகை மயக்கிடும் விற்பனம், நவீனகாலத்துப் புதிய சந்திரோதயம்! காதலர் மனங்களி சோலை, நீதிகள் பலவுள நிலையம், தேவன் கருணை தெரிவிக்கும் வேதம், கற்பனைச் சித்திரம் கணக்கிலா மியூசியம், திடுக்கிடும் சம்பவம் அடுக்கி வருவது என்று சொல்வது இந்நூலை யன்றி எந்நூலை?*

335 பக்கத்துக்கு மேற்கொண்ட இன்பவூற்று! விலை ரூபா 1—4—0

## உயிரின் உண்மை

*ஈரூர் சச்சிதானந்த சுவாமிகள் பரம்பரை இனியார்க் கினியன்* T. S. *ராஜூப் பிள்ளை இயற்றியது. விலை அணா 8. (10 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒரு பிரதி அனுப்பப்படும்.)*

*தெள்ளிய நடையில் உயிர், உலகு, இறை மூன்று பொருளையும் விளக்குகிறது. —சுத்தானந்த பாரதியார்.*

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

187550

# ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும்

# ஜாதக கணித சாகரம்.

இது வேத புருஷனுடைய அங்கங்கள் ஆறினுள் நேத்திர அங்கமாயெ. சோதிட சாஸ்திரமானது நம்மவர் எளிதிலறியும் வண்ணம் ஆரம்ப சோதிடர் முதல் பஞ்சாங்க கணித ஆராய்ச்சிவரையில் துர்பிக்ஷகால மூண்டாகும் விபரம், சர்வதேச அக்ஷாம்சம் செய்யும் முறை, சாஸ்திர உபயாதிகள். வர்கோத்தமம். தசவர்க்கம் பிரிக்குமடைவு வக்கிர. ரிஜு அஸ்தமயமறிதல். துவாதசாம்ச சக்கிர நிர்ணயம், உச்சாதி கிரகசங்கியை, கேந்திர திரிகோணாதிஸ்தானங்கள், பார்வைஸ்தான பலம், திரியிரண சக்கிரமறியும் விதம், மற்றும் ஜாதக கணிதத்திற்காயவேண்டிய லக்னஸ்புடம்—நக்ஷத்திரஸ்புடம், பாவகஸ்புடம், கிரகங்களில் ஆக்ஷி, உச்சநட்பு நீச்சம்பகை முதலிய பலம்; மண்டல சமயசார பருவம், மனையையளந்து ஆயம் சொல்லும் மார்க்கம்; ஆரூடபாவம், விஷயத்தை யறிந்தபிறகு முடியும் முடியாதெனக் கூறும் வகை; காலசக்கிரம், அஷ்டக வர்க்கம்; கோசாரம்; லக்னபாவம்; சகோதரபாவம்; மாதுருபாவம்; புத்திர்பாவம்; நோக பாவம்; களத்திரபாவம்; ஆயுள்பாவம்; பிதுர் பாவம்; தொழில், லாபம், விரய முதலியவைகளும்; ருதுகாலபலாபலன்களை விளக்கும் மார்க்கமும் பலன் முதலியவைகளையும் செவ்வனே விளக்கி சோதிட வித்வசிகாமணிகளின் வேண்டுகோளால், சாஸ்திர சம்பந்தமான குதர்க்க வார்த்தைகளாடுபவருடன் சாஸ்திரசம்பந்தமான உண்மையைத் தெள்ளிய நடையினுலெடுத்துக் காட்டும் புராதனகணிதசாஸ்திர மூலமாய் ஒவ்வோர் விஷயங்களுக்கும் சந்தேகநிவர்த்தியாக, போதுமான காரணங்களுடன் எடுத்துக்காட்டி, ஜாதகாமிருத பலவிமர்சம் என்னும் ஜாதக கணிதசாகரம் என்னும் புதுப்பெயர் சூட்டி உலபரோபகாரமாக குறைந்த விலையில் தயார் செய்திருக்கிறோம். இப் புத்தகத்தைக் கையாள்வோர் பெரிதும் பயன்படுவாரென்பதற்கு சிறிதேனு மையமில்லை.

இதன் விலை ரூபா 1—8—0

நிமித்தியகுறி சாஸ்திரம் இதன் விலை அணு 2.

## ஸ்திரி புருஷ ஜாதகத் திறவுகோல்

ஜோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், 9 கிரகங்களை 12 இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக்கண்டு பலாபலன் சொல்லவும்; இராசியில் 7 கிரகங்கள் ஒன்றாகக் கூடி யிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறியிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் இதனுல் தெரிந்து கொள்ளலாம். இதன் விலை அணு 8.

ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்
C. G. ராஜன் B. A., அவர்களால் எழுதிய ஜோதி நூல்கள்.

"ஜாதக சிரோன்மணி" என்னும் "பிருஹத் ஜாதகம்" விலை ரூபா 2.

"ஜாதக கணிதம்" என்னும்

ஜோதிட கிரகசட்பலம் ஆயுள் கணிதம் விலை ரூபா 2—4—0.
இரண்டாம் பாகம் விலை ரூபா 2-12—0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# ஜாதக சாகரம் இதன் விலை ரூ 5—14—0.

ஆனந்தபோதினி 25-வது வருஷ
வெள்ளிவிழாக் கொண்டாட்டத்திற்காக

## தற்கால விலை ரூபா 3.

பல திசைகளிலுமிருந்து வீசும் காற்று என்னும் வாயுவின் சக்தியை, வான சாஸ்திரீகர்களின் உத்தேசப்படி வடக்கிலிருந்து வீசும் காற்றே தீவிர வேகத்துடன் செல்வதென மேல்நாட்டவராலும் கீழ்நாட்டவராலும் சம்மதிக்கப்பட்டுள்ளன. இவ் வானுலகத்தை 5 தினங்களில் மேகங்கள் சுற்றுமெனவும், 9 தினங்களில் இடி யோடி நிற்குமென்றும், 10 தினங்களில் மின்னல் ஓடி நிற்குமெனவும், 10 தினத்தின் 12 செவி மழைபெய்து நிற்கலாம் எனவும் கூறியுள்ளனர். இவை உலக சுபாசுப வேறுபாட்டைக் கண்டறிய ஏதுவானதாகும். ஆனதால், இவை வருஷ விசாரமேயன்றி உலக விசாரமன்று. இவ்வாறான வருஷ விசாரத்தையும், பண்டைய சாத்ரீக கணிதத்திற்கு வான ஜோதியையும் பிரத்தியக்ஷமாய் பரிக்ஷித்துத் தெளிவடையத் தகுந்த பஞ்சாங்கங்களும் வெளிவந்துள்ளன. அவற்றுள் தலை சிறந்துத் தாண்டவமாடும் பஞ்சாங்கம் திருக்கணிதமேயாகும். என்னில்? சித்திரை முதலாயுள்ள 12 மாதங்களின் தேதி பேதம், வார பேதம், வாரவிகாரம், துருவம் முதலியவற்றை வான ஜோதியின் உண்மை பரீக்ஷையின்படி தெளிவாய் கணித்து வெளியிட்டிருப்பதனுலேயாகும். திதி, வாரம், யோகம், கரணம், நக்ஷத்திதம் என்னும் ஐந்தும் அடங்கிய பஞ்சாங்கத்துள்ள திதியினும் வலிது வாரம். தினத்தினும் வலிது நாட்கள் என்பதாலும், நன்கறிக. ஆனதால் இவ்வாறான ரகஸ்ய விஷயங்களை நம் பண்டைய சாத்திர வல்லோர் அனேகமாய் வடமொழியிற் செய்தனரேயன்றி தமிழ் மொழியிற் காண்பது மணற் சோற்றில் கல் ஆராய்வது போலவே யிருந்துள்ளன. ஆயினும் தற்கால சாத்திர நூற்களுள் தமிழறிந்த சகோதரர்களும், சகோதரிகளும் முன்சொன்னவான சாஸ்திர கணித ரகஸ்யங்களையும், ஜாதக கணித ரகஸ்யங்களையும் எளிதிலறியும் வண்ணம், தெள்ளிய பதத்தால் தென்மொழியாலாக்கிய நூல் ஜாதக சாகரமேயாகும். இதனை பற்பல செய்யுளாலும், பல மேற்கோள்களாலும், பொழிப்புரை, விருத்தியுரை, மேற்கோள், உதாரண பதகம் (Table) இவ்வாற்றால் நன்கு விளக்கி சோதிடம் பயிலவிரும்புவோருக்கும், சோதிடத்தில் வல்லவர்களுக்கும் நன்றாய் விளங்குமாறு மூன்று தரங்கங்களாயும், 17 மணித்திரள்களாயும், 300 அரிய பெரிய விஷயங்களாயும் பல நூலாசிரியர்களும் சம்மதிக்கத்தக்க நடையில் எழுதி டெம்மி கிளேஸ் 14 பவுண்டு காகிதத்தில் அச்சிட்டு, தமிழ்நாட்டு சோதிடர்கள் கண்டு மகிழ்ச்சிபெருமாறு வெளியிட்டுள்ளனம்.

இவற்றுள் எண்வகை ஆயுர்த்தாய கணிதத்தையும், மய, யவன, மணித்த, ஜீவசர்ம சித்தசேன, வராக மிகிராதியோர் முதலியவர்களின் அபிப்பிராயங்களையும், இவர்களது முக்கிய கொள்கையான, நைசர்க்கிய ஆயுர்த்தாயத்தையும், பிண்டாயுர்த்தாயம், அமிர் சாயுர்த்தாயத்தையும் தெளிவாய் விளக்கியுள்ளதுடன், ஜாதக பலம் சொல்வோரின் மனச் சந்தேகங்களை நீக்கத்தகுந்த முறையில் எழுதி அச்சிட்டு வெளியிட்டதுடன், எட்டயாபுரம் சோதிட சங்கத் தலைவர் S. குருதாஸப் பிள்ளையவர்களால் மதிக்கப்

பட்டதும், மற்றுமனேக தமிழ் வல்லவராலும், பல சோதிட சாஸ்த்ரீகர்களும் சம்மதிக்கும் வண்ணமாய்ப் பல்லாண்டுகளாய்ப் பல்லோர் கூறிய பலவேறு வழிகளாற் கண்டு சோதித்து அதனுட் கிடந்த பலவேறு மொழிகளையும் தெள்ளிய செந்தமிழில் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. இதனுள் அடங்கியுள்ள விஷயங்களில் முதற குறிப்புகளைக் கீழே விளக்கிக் காட்டியுள்ளன.

இவை, வராஹமிஹிராச்சாரியார் கணி தசாத்திர முறைப்படியும் ஓராசாரம் முதலிய வடமொழி நூற்களைத் தழுவியும், சாதக சிந்தாமணி, குமாரசாமியம், வீமேசுர உள்ளமுடையான், சந்திரகாவியம் முதலிய தமிழ் நூற்களைத் தழுவியும்அச்சிட்டு வெளியிட்டுள்ளனம்.

6300 வருஷ ஸ்புடம். நவக்கிரக ஸ்புட கணனம் இராஜ ஜோதிட கணிதம் என்னும் சித்தாந்த இராஜ சிரோன்மணி (கிரக காணம்) இங்கிலீஷில் விலை ரூபா. 5. தமிழில் ரூபா. 5.

ஸ்ரீமத்

# விவேகானந்த சுவாமிகள்

## விரிவான திவ்ய சரித்திரம்

**(2-ம் பதிப்பு)** **இதன் விலை ரூ 4.**

**ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு விலை ரூ. 3.**

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும், அரிய உபதேசங்களும் அனுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பூசஞ்சாரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை.

# கைவல்ய நவநீத வசனம்.

ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்கள் எழுதியது.

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும் பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருள்களைத் தழுவிப் பல மகான்கள் பல நூற்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இதன் நடை செய்யுளாகவும் மிகவும் கடினமாயிருப்பதால் எவரும் எளிதில் வாசித்துணரும்படி இதை வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்தி மார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

**இதன் விலை ரூபா 1—8—0.**

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

# இரத்தினபுரி இரகசியம்

## ஓர் மகா அற்புதமான புதிய நாவல் (9-பாகங்கள்)

இது நாவல் எழுதுவதில் ஒப்புயர்வற்றவரென்று உலகப் பிரசித்தி பெற்ற G. W. M. ரெய்னால்ட்ஸ் என்பவரால் வரையப்பெற்ற அதியற்புதமான நாவல்களில் முதன்மைபெற்ற நாவலின் மொழிபெயர்ப்பு. இது காறும் ஒருவராலும் தமிழில் எழுதப்படாதது. தற்காலத்தில் தமிழ் நாவல்கள் எழுதுவதில் பிரக்யாதிபெற்றவரும் தமிழில் அநேக நாவல்கள் மொழிபெயர்த்தெழுதியவருமாகிய ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியது.

இந்த நாவலில்தான் கிரந்தகர்த்தா தமது இணையற்ற சாமர்த்திய முழுவதும் வெளியிட்டிருக்கிறார் என்பது ஆங்கிலத்தில் அவர் நாவல்களை வாசித்த யாவரும் அறிந்ததோருண்மையாகும். இதில், வேறு எக் கதைகளிலும் நாம் கேட்டிராத அற்புதங்களும் நெஞ்சுதிடுக்கிட்டுத் திகைக்கக்கூடிய சூட்சிகளும் நிறைந்திருப்பதோடு, ஆடவர்களின் பலபேதமான நடவடிக்கைகளும், அவற்றாலடையும் பலன்களும், ஸ்திரீகளின் குணபேதங்களும், கற்புடைய ஸ்திரீகள் தங்கள் கற்பைக் காக்கும் விஷயத்தில் உபயோகிக்கும் துணிகரமான வீரதீர சாமர்த்தியச் செயல்களும் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தற்கால நாகரீகத்தை யொட்டி நமது நாட்டாருக்கு இன்னின்ன ஆசாரங்கள் நன்மைபயக்குமென்றும், இன்னின்ன ஆசாரங்கள் தீமை பயக்குமென்றும், நமது மாதர் கடைப்பிடிக்க வேண்டிய ஆசார வொழுக்கங்கள் இன்னின்னவை யென்றும் அந்தந்தச் சமயங்களில் மனதிற் றரிக்கும் வண்ணம் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இது ஆதிமுதல் அந்தம்வரையில் மனதை முழுதும் கவரக்கூடியதென்பது கூறாமலே விளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| முதல் இரண்டு பாகங்கள் | விலை | ரூபா | 4—0—0 |
| 3-முதல் 6-வரை 4 பாகங்கள் | ,, | ,, | 7-10—0 |
| 7-ம் பாகம் | ,, | ,, | 2—4—0 |
| 8-ம் பாகம் | ,, | ,, | 2—4—0 |
| 9-ம் பாகம் | ,, | ,, | 2—0—0 |

# பத்மாசனி

(இது ஓர் அதிசயமான துப்பறியும் நாவல்)

இதில் கூறப்படும் கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக் கள்ளர் எண்ணங்களை நிறைவேறவொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை தவறு என்று ருசுப்படுத்தி அவனைச் சிறை மீட்பதும் படிக்கப்படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும். இது நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 14.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.**

# இந்திராபாய்

அல்லது

## இந்திரஜாலக் கள்ளன்

## (இரண்டாம் பதிப்பு.)

இதில் ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்திராபாய் பன்முறைகளில் முஷ்டிக்காரத்தினிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத விதமாய்ப் பிராணபத்துக்களிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டுபிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை அவ்சியம் வாசிக்கவேண்டும். உள்ளே சாரமொன்று மில்லாமல் பகட்டுப் பெயர் கொடுத்து 'இதுவே இணையற்ற நாவல்' எனப் படாடோப விளம்பரங்களுடன் வெளிவந்து, ஜனங்கள் ஏமாந்து பணங் கொடுத்து வாங்கிப் படித்தபின் மனவருத்த மடையும்படி தாண்டவமாடித் திரியும் போலி நாவல்களைப் போன்றதல்ல இது. மிகுந்த துன்பங்களுக்குள்ளாகி மனத்தில் ஆருத் துயரங்கொண்டு அழுதுகொண்டிருப்பவர்களும்கூட இதை யெடுத்துப் படிக்க ஆரம்பித்தால் அத் துயரம் மாயமாய் மறைந்துவிடும். அவர்களுடைய மனத்தில் திடீரென ஓர் ஆனந்தத் தோன்றி அவர்களைப் பரவசப் படுத்திவிடும். புத்தகம் படித்து முடிந்த பின்பே அவர்கள் வேறு காரியங்களில் புத்தியைச் செலுத்துவார்கள். இன்னும், இந்நாவல் மேல்நாட்டு அசட்டுத்தனமான பழக்கங்களை நன்கு விளக்கிக் காட்டி மனிதர்க்கு நல்ல விவேகத்தை உண்டாக்கும். பெண் மக்களுக்கு உயர்ந்த ஒழுக்கங்களைப் போதிக்கும். இது நாவல்களுக்கெல்லாம் நாயகமானது; ஆனந்த சிந்தாமணி; அற்புத பொக்கிஷம்; விவேகக் களஞ்சியம்; மெய்ப்பொருள் விளக்கும் இரத்தின தீபம்; மனமினிக்கும் வாயினிக்கும் மகா இனிமை பொருந்தியது.

இதன் விலை ரூ. 2.

## பவளத்தீவு அல்லது குடும்ப சாபம்

இக் கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை அனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவது ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக் கதை ஆரம்பமுதல் முடிவு வரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்துகொண்டு மிக்க களிப்பை யளிக்கும். இதன் விலை 2-பாகம் ரூ. 3.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

கவனிப்பு:—ஸிலோன், பர்மா, பினங், சிங்கப்பூர், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு எமது கம்பெனியில் உள்ள புஸ்தகங்களும், மருந்து சாமான்களும், எதாயிருந்தாலும் அனுப்பப்படமாட்டாது.


உ

ஓம்

பரப்பிரஹ்மணே நம:


# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)


| தொகுதி 25 | பிரமாதிஞு பங்குனிமீ கஉ 1940ஞு மார்ச்சுமீ 14உ | பகுதி 9 |
|---|---|---|


12 APR 1940 MADRAS

## கடவுள் வணக்கம்.

—:0:—

கோவாய் முடுகி அடுதிறல்
 கூற்றங் குமைப்பதன் முன்
பூவார் அடிச்சுவடு என்மேல்
 பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண்டாய்
 முழங்குர் தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்து
 உறையுஞ் சிவக்கொழுந்தே. (1)

---

காய்ந்தாய் அனங்கன் உடலம்
 பொடிபடக் காலனை முன்
பாய்ந்தாய் உயிர்செகப் பாதம்
 பணிவார் தம்பல் பிறவி
ஆய்ந்து ஆய்ந்து அறுப்பாய் அடியேற்கு
 அருளாய் உன் அன்பர் சிந்தை
சேர்ந்தாய் திருச்சத்தி முற்றத்து
 உறையுஞ் சிவக்கொழுந்தே. (2)

---

பொத்தார் குரம்பை புகுந்து
 ஐவர்நாளும் புகல் அழிப்ப
மத்தார் தயிர்போன்று மறுகும்
 என்சிந்தை மறுக்கொழிவி
அத்தா அடியேன் அடைக்கலம்
 கண்டாய் அமரர்கள் தம்
சித்தா திருச்சத்தி முற்றத்து
 உறையுஞ் சிவக்கொழுந்தே. (3)

# அரும்பொருள் விளக்கம்

(இ-ள்.) திருச்சத்தி முற்றம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவக்கொழுந்தே! இரைந்து எரியும் அனலைக் கரத்தில் தாங்கிய தேவர்பிரானே!—கொலை புரியும் வன்மைவாய்ந்த எமன் பெரிய வாயைப் பயங்கரமாகத் திறந்து நசுக்குவதற்கு முன்பு, மலர் நிறைந்த தேவரீருடைய திருவடியின் அடையாளத்தை என்மீது பொறித்தருள்வீராக; அவ்விதஞ் செய்யாது புறக்கணிப்பீராயின், பெரும் பழி உம்மைச் சாரும் என்பதை அறிவீராக. (எ-று.)

சிவதீட்சை செய்து கொள்வது அவசியமென்பதை இப்பாட்டு வற்புறுத்துகிறது. திருவடி தீட்சை செய்துவைத்தால், எமன் இவன் சிவபெருமானுக் கடியான் என அறிந்து பாசவலை வீசாமல் பயந்துசென்று விடுவானென்பது கருத்தாம். (1)

(இ-ள்.) திருச்சத்தி முற்றம் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்தே! உன்மீது மலரம்பு தொடுத்து யோகநிலையைக் கலைக்க முயன்ற மன்மதன் தேகத்தை, சாம்பராகும்படி நெற்றிக் கண்ணால் எரித்தாய்; முன்னர் மார்கண்டனுக்காக, எமதருமனை உயிர் நீங்குமாறு உதைத்தாய்; உன் திருவடிகளை இறைஞ்சும் அடியார்களின் பிறவிகள் பலவற்றையும் ஆராய்ந்து ஆராய்ந்து வேரற அறுப்பாய்; உன் பக்தர்களின் உள்ளங்களில் குடிகொண்டிருப்பவனே; அடியேனுக்கு அருள் புரிவாயாக. (எ-று.)

தமது அடியவர்களுக்காக எக் காரியதையுஞ் செய்பவன் சிவபெருமான் ஒருவனே என்பார், 'காய்ந்தாய்........சேர்ந்தாய்'' என்றார். (2)

(இ-ள்.) திருச்சத்தி முற்றம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருக்கும் சிவக்கொழுந்தே! தேவர்கள் தம்மால் சிந்திக்கப்பெற்ற தலைவனே! துவாரங்கள் நிறைந்த தேகத்தில் புகுந்து ஐம்புல வேடர்கள் தினந்தோறும் அநியாயஞ் செய்யவும், மத்தில் அகப்பட்ட தயிர்போல் வாடும் அடியேனது உள்ள மயக்கத்தை யொழித் தருள்வாய். தந்தையே! அடியேன் உன்னைத் தஞ்சமாக அடைந்தேன்; அறிவாயாக. (எ-று.)

ஐம்புல சேஷ்டையினால்தான் உள்ளமும் உணர்வும் ஒரு வழி நில்லாது நெறி கெட்டுப்போய் உடம்புக்கே விபத்தை விளைக்கிறது என்ற உண்மையை இப்பாட்டில் விளக்கி யிருப்பது குறிப்பிடத் தக்கது. (3)




## இந்திய சுதந்திரக் கோரிக்கை

"தனக்கொரு நியாயம்; அயலாருக்கு ஒரு நியாயம்" கூறும் சுபாவம் மக்களில் சிலரிடையே இருந்து வருகிறது. இத்தகைய பாரபட்சமான குணம் பிரிட்டிஷ் சர்க்காரிடம் மிகுந்திருக்கிறதென்பது, அவர்கள் இந்தியா கோரிக்கை விஷயத்தில் காட்டும் மனோபாவம் நன்கு விளக்குகிறது. பிரிட்டனும் பிரான்ஸும் ஆறு மாதத்துக்கு முன் ஜெர்மன்மீது போர் தொடுத்திருந்தபோது, 'உலகில் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் நிலைநிறுத்தவே தாங்கள் போர் தொடுத்திருப்பதாக'ப் பறை சாற்றினார்கள். போலந்து போன்ற சிறு நாடுகளின் சுதந்திரத்துக்கு ஆபத் தேற்படாமல் காப்பது தங்கள் கடமையென்றும், கடமையைச் செய்து நியாயத்தை நிலைநிறுத்த தாங்கள் எத்தகைய தியாகம் புரியவும் தயாரென்றும் அவர்கள் கூறினர். இந்த யுத்த நோக்கத்தையே பிரிட்டிஷ் சர்க்கார் சார்பில் பேசியவர்க ளெல்லாம் வலியுறுத்திக் கூறி வந்தனர். சென்ற மாதக் கடைசியில் பிரதம மந்திரி சேம்பர்லேன் பேசியபோது கூட மேற்குறித்த கொள்கையையே மீண்டும் வலியுறுத்திப் பேசியிருக்கிறார். "நமது இலட்சியம் கை கூடுமென நாம் நம்புகிறோம். மற்றவர்களை அடிமைத்தனத்திற் குட்படுத்தாமல் இதனைச் சாதிக்க முடியும் என்பது நமக்குத் தெரியும். தனிப்பட்ட மனிதர்களின் மனசாட்சி, சுதந்திரம் ஆகியவற்றிற்காக நாம் போராடுகிறோம். எங்கு துன்புறுத்தல் காணப்பட்டபோதிலும், அதனை எதிர்த்துப் போராடுகிறோம்" என்று கூறியிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

இவ்விதம் சிறு தேசங்களின் சுதந்திரத்தையும், தனிப்பட்ட மனிதர்களின் மன சாட்சி சுதந்திரம், மத சுதந்திரங்களையும் காப்பாற்றுவதில் கருத்துடையவர்களான பிரிட்டிஷ் சர்க்கார், இந்தியா சுதந்திர விஷயத்தில் மட்டும், மேற்குறித்த கொள்கைக்கு முற்றும் மாறுபாடான மனோபாவத்தைக் கொண்டிருப்பானேன்! இதற்குக் காரணந்தான் என்ன? உலகிலுள்ள சிறு

தேசங்களுக்கெல்லாம்—முக்கியமாக ஐரோப்பாவிலுள்ள சிறு தேசங்களுக்கெல்லாம்-மட்டும் சுதந்திரம் வேண்டும்; அது நிலைத்திருக்க வேண்டும்; இந்தியாவுக்கு மட்டும் அத்தகைய சுதந்திரம் வேண்டவே வேண்டாம்; சுதந்திரம் பெறுவதற்கு இந்தியா லாயக்குடையதே யில்லை. அது இப்போதுள்ள நிலையிலேயே அடிமை நாடா யிருக்கவேண்டியதுதான் என்பது பிரிட்டனின் எண்ணமா? என்பதும் நமக்குத் தெரியவில்லை. பிரிட்டன் நம் தேசத்தின் விஷயத்தில் காட்டிவரும் மனோபாவம் பெரும் புதிராகவே இருந்துவருகிறது.

ஆகவே, நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருகிறது. யுத்த விஷயத்தில் இந்தியா ஒத்துழைப்பதாக வெளிக்குக் காட்டிக்கொள்ள பிரிட்டிஷ்—இந்திய சர்க்கார் அதற் கநுகுணமான காரியங்களையும் பாதுகாப்புகளையும் செய்துவந்தாலும், காங்கிரஸ் தமது சுதந்திரக் கோரிக்கைக்குச் சரியான பதிலளிக்கப்படும்வரை தாங்கள் யுத்த விஷயமாக ஒன்றும் ஒத்துழைக்க முடியாது என்று தெரிவிக்கு முறையிலேயே, எட்டு மாகாணங்களில் ஆட்சி செலுத்திவந்த காங்கிரஸ் மந்திரி சபைகளை ராஜிநாமா செய்யும்படி வைத்தனர். அதற்குப் பிறகும், காங்கிரஸ், இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்க, பிரிட்டிஷ் சர்க்காருக்குப் போதிய அவகாசத்தை யளித்து மிகப் பொறுமை காட்டியே வந்தது. பொறுமைக்கும் ஒரு எல்லை யுண்டல்லவா! பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய கோரிக்கை விஷயத்தில் தகுந்தபடி சிரத்தை காட்டாது, ஏதேதோ சால்சாப்பு கூறி மழுப்பிக் காலங் கடத்தி வருவதைக் கண்ட காங்கிரஸ் சமீபத்தில் பாடலிபுரத்தில் காரியக் கமிட்டியைக் கூட்டி, தேச மக்களின் சார்பில் தமது இலட்சியமும் கொள்கையும் இதுதான் எனத் தீர்மான ரூபமாக வெளியிட்டிருக்கிறது. "பூரண சுதந்திரத்திற்குக் குறைந்த எதையும் இந்திய மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாதென காங்கிரஸ் அறிவிக்கிறது. ஏகாதிபத்திய சுழலுக்குள் இந்தியா சுதந்திரத்துடன் வாழ்வதென்பது சத்தியமல்ல. எனவே, குடியேற்ற நாட்டந்தஸ்தோ அல்லது ஏகாதிபத்திய முறைக்கு உட்பட்ட வேறு எந்த அந்தஸ்துமோ இந்தியாவுக்குச் சிறிதும் பொருந்தாது. அத்தகைய அந்தஸ்து ஒரு உன்னதமான தேசத்தின் கௌரவத்துக்கு ஒத்ததன்று. அவ்வந்தஸ்து இந்தியாவை பல வழிகளில் பிரிட்டிஷ் அரசியலுடனும் பொருளாதார முறையுடனும் பிணைப்பதாகும்.

"வயது வந்தோர் அனைவர்க்கும் வாக்குரிமை அளித்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு அரசியல் நிர்ணய சபையின் மூலம் இந்திய மக்களே தங்களுக்குத் தேவையான ஒரு அரசியலை, சரியான முறையில் அமைத்துக்கொள்ளவும் உலகி



லுள்ள பிற நாடுகளுடன் தங்களுடைய உறவை நிர்ணயித்துக் கொள்ளவும் கூடும்......................

"இந்தியாவின் அரசியல், சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் தேசிய ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்டதாயிருக்கவேண்டும். இந்தியாவைத் துண்டாடவோ, இந்திய ஜாதியைப் பிரிவினை செய்யவோ செய்யப்படும் முயற்சியை, காங்கிரஸ் அடியோடு எதிர்க்கிறது...............

"இந்தியச் சுயேச்சைக்குக் குறுக்கே நிற்க, சமஸ்தானாதிபதிகளுக்கோ அல்லது விசேஷ பாத்தியதைகளைக் கொண்டாடும் வெளிநாட்டவர்க்கோ உரிமை யிருப்பதாகக் கூறப்படுவதை காங்கிரஸ் ஏற்க முடியாது. இந்தியாவின் அரசுரிமை ஜனங்களுக்கே இருக்கவேண்டும். அவர்கள் மாகாணங்களில் வசிப்பவர்களாயினும் சரி; சமஸ்தானங்களில் வசிப்பவர்களாயினும் சரி; அதைப்பற்றி அக்கரையில்லை. அவர்களுடைய ஜீவாதார நலன்களைத்தான் பிரதானமாகக் கவனிக்கவேண்டும்......இந்தியரின் நன்மைகளுக்குக் கேடுண்டாக்காத அன்னியரின் நன்மைகள் பாதுகாக்கப்படும்..........

"காங்கிரஸ் ஜாதிமத பேதமின்றி எல்லோருக்கும் உழைக்க விரும்புகிறது. இந்தியாவிலுள்ள பலருக்குமே சுயேச்சை கிடைக்க அது உழைக்கிறது. ஆகவே எல்லா வகுப்பாரும் சட்டமறுப்பில் கலந்து கொள்வார்கள் என காங்கிரஸ் நம்புகிறது" என்று, ஏகாதிபத்திய அமைப்பில் இந்தியச் சுதந்திரக் கொள்கை அடங்கியில்லை யென்பதையும், இந்தியாவை அந்நியர் ஆட்சியினின்றும் விடுவிக்க, காங்கிரஸ் உறுதி கொண்டிருப்பதால், அதை வற்புறுத்தவும், காங்கிரஸ் யுத்தத்தில் கலக்கவில்லை என்பதைக் காட்டவும் காங்கிரஸ் மந்திரிகளை ராஜிநாமா செய்யும்படி செய்ததற்கு அடுத்தபடியாக, சட்டமறுப்பைத் தொடங்கத் தீர்மானித்து விட்ட தென்பதையும் பட்டவர்த்தனமாக விளக்கிவிட்டது.

இச் சுதந்திரக் கோரிக்கை தீர்மானம் உலகையே கதிகலங்கச் செய்திருக்கிறது. எந்த நிமிஷத்தில் இந்தியாவில் என்ன நேருமோ, என்ன நெருக்கடி ஏற்படுமோ என்று பொதுநலம் நாடும் ஒவ்வொருவரும் எண்ணி ஏங்குகின்றனர். ஆனால், மகாத்மாவும் காங்கிரஸும் சமரஸத்துக்கான வழியை அடியோடு அடைத்து விடவில்லை. அதற்கு இன்னம் இடம் வைத்தே யிருக்கின்றனர். பிரிட்டிஷ் சர்க்கார்தான் நிலைமையை யுணர்ந்து ராஜதந்திரத்துடனும் புத்திசாலித்தனமாகவும் நடந்து கொள்ளவேண்டும். இதையும் மகாத்மா தெளிவாக எடுத்துக் கூறி விட்டார். பாடலிபுரத்தில் நிறைவேறிய தீர்

மானத்துக்கு வியாக்கியானஞ் செய்யும் முறையில் வெளியிட்ட ஒரு அறிக்கையில் அவர், "அந்நிய நாட்டினர் ஆதிக்கத்துக்கும் அவர்கள் இந்தியாவின் செல்வத்தைச் சுரண்டுவதற்கும் இந்தியா திக்கற்ற நிலையில் உடந்தையாக இருக்க முடியாது. பிரிட்டனைப்போல் இந்தியாவும் சுதந்திர நாடாகும் வரை காங்கிரஸ் வாளா இராது......

"........இந்தியா மீண்டும் ஒருமுறை சிறைக் கூடமாக விளங்க வேண்டுமோ? இதை முடிவு செய்யும் பொறுப்பு பிரிட்டனுடையதே யன்றி, காங்கிரஸுடைய தன்று. இன்னும் அதிக கஷ்டத்தைத் தாங்க நேர்ந்தாலும் இந்தியர்கள் கைதிகளாகவாவது இருப்பார்களே யொழிய, அவர்கள் நாடு நிரந்தரமாக பிரிட்டனுக்கோ மற்ற நாட்டுக்கோ அடிமைப்பட்டிருப்பதை, திக்கற்ற நிலையில் நின்று பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள்" என்று கூறியிருப்பது குறிப்பிடத் தக்கது.

பாடலிபுரத் தீர்மானத்தையே ராம்கார் காங்கிரஸ் உறுதி படுத்தப் போகிறது. ஆகவே, இந்த இடைக்காலத்திற்குள் பிரிட்டிஷ் சர்க்கார் இந்திய சுதந்திரக் கோரிக்கைக்கு இணங்கக் கூடிய வகையில் ஒரு சமரஸத்தை யுண்டுபண்ண முன் வருவார்களாயின், காங்கிரஸ் ராம்கார் காங்கிரஸில் தன் முடிவை மாற்றிக்கொள்ள சௌகரியமாக இருக்கும். பிரிட்டிஷ் சர்க்கார் தங்கள் பிரித்தாளுந் தந்திரத்தின் மீதே பெரு நம்பிக்கை வைத்து, பொய்க் கௌரவத்தை விட மனமில்லாது பழைய மனோபாவத்தோடேயே இருப்பார்களாயின் விபரீதமான நிலைதான் ஏற்படும் என நாம் எச்சரிக்க விரும்புகிறோம். இது சம்பந்தமாக, காங்கிரஸ் தலைவர் ராஜன் பாபு வெளியிட்டுள்ள அறிக்கையின் ஒரு பகுதியை இங்கு சமர்ப்பிக்கிறோம்:— "இந்தியாவின் கோரிக்கையையும் உலகத்தினரின் அபிப்ராயத்தையும் அங்கீகரித்து பிரிட்டன் அந்தப் போராட்டம் நேராமல் தடுக்கலாம். அதற்கு இப்போதும் இட மிருக்கிறது. சுமார் 150 வருஷங்களாக இங்கிலாந்து இந்தியாவிலுள்ள லட்சக்கணக்கான பேர்களை நடத்தி வருவது போலத்தான், ஜெர்மனி ஐரோப்பாவிலுள்ள சிறு தேசங்கள் சிலவற்றையும் நடத்த விரும்புகிறது. அதற்காக ஜெர்மனியைக் குறை கூறுவானேன்? இந்தியாவை இங்கிலாந்து அடிமைப்படுத்தி வைத்திருக்கையில் இந்த யுத்தத்தில் இங்கிலாந்து வெளியிடும் கொள்கைக்கு ஆதாரமிருக்கிறதா? அக் கொள்கை அடியோடு அழிந்து விடும். இந்தியாவுக்குச் சுதந்திரம் வழங்கி விட்டால் பிரிட்டனின் நிலையை உலகத்தில் ஒருவரும் அசைக்க முடியாது. பிரிட்டன் தன் சொந்த நன்மையை யுத்தேசித்து தக்க சமயத்தில் தகுந்த காரியத்தைச் செய்ய வேண்டும்."

பத்திரிகை உலகில் அதிசயம்!

**தமிழ் மக்களுக்கு இலக்கிய விருந்து**

# ஆனந்தபோதினி

## வெள்ளி விழா நினைவு மலர்

☆

## சித்திரையில் வெளிவருகிறது

சுவாமி சுத்தானந்த பாரதி —தமிழர் முன்னேற்றம்.
டி. கே. சிதம்பரநாத முதலியார், B. A., B. L., —தமிழ் வளர்ந்த மன்றங்கள்.
பண்டிதை அசலாம்பிகை அம்மையார் —பெண் உள்ளம்.
பெ. நா. அப்புஸ்வாமி ஐயர் B. A., B. L., —பிள்ளை விளையாட்டு.
"ஜீவா" —சர்வபரித்தியாகம்.
ராவ் சாகிப்- எஸ். வையாபுரி பிள்ளை B. A., B. L., —சந்திரா பழி வாங்கியது.
ஸ்ரீமதி ஞானம்பாள் M. A. —பெண்ணின் சாகசமா? அன்பின் திண்மையா?
என். தங்கவேலன் B. A., —காதலர் பாதை.
ஸ்ரீகண்ட ராமன் M. A., L. T., —எனது புதிய கடியாரம்.
P. N. வைத்தியநாதஸ்வாமி B. SC., —புருஷனில்லாமல் புத்திர பாக்கியம்.
கீ. வை. சிவசுப்பிரமணியம் B. A., —தமிழ்மொழியாக்கம்.
"ஸ்ரீமதி" —சிவகாமியின் விடுதலை.
வித்வான். கி. வா. ஜகந்நாதன் —ஆலங்காயம்.
T. S. ராஜகோபாலன் B. A., L. T., —பாரதியாரும் காந்தியடிகளும்.

மற்றும் தமிழ்மொழி மலர்ச்சிக்காகச் சேவை செய்யும் பேரறிஞர்களும் எழுத்தாளர்களும் இம் மலரை அலங்கரித்திருக்கிறார்கள்.

**200-பக்கங்கள் கொண்டது**

**விலை அணா 8**

இப்போதே ஆர்டர் செய்து வையுங்கள்.



# அபிஸீனிய சரித்திரம்

(துரை)

★

## II

### எதியோபிய மக்கள்

எதியோபிய மக்களின் சரித்திரம் புராதனமானது. அவர்களுடைய சரித்திரம் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஆரம்பமாகிறது. எதியோபியரையும், ஆசியாக் காரர்களையும் சரித்திராசிரியர்கள் "கருப்பு மனிதர்கள்" என்று அழைத்து வருகிறார்கள். அரேபியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்குக் குடியேறிய 'ஹபாஷா' அல்லது 'அதஷியர்' என்ற வகுப்பினரே இன்று எதியோபியர் என்று சரித்திராசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால், இவ் எதியோபிய மக்களைச் சரித்திராசிரியர்களும், மற்றவர்களும் அபிஸீனியர் என்ற பெயராலேயே பெரும்பாலும் வழங்கி வருகின்றனர். எதியோபிய நாடு கூட பூகோள சாஸ்திரத்திலும் சரித்திரங்களிலும் அபிஸீனியா என்றே குறிக்கப்பட்டு, பிரபல மடைந்திருக்கிறது, இருந்தாலும், அபிஸீனியா என்னும் பெயர் கலப்பு என்னும் பொருளைத் தந்து, அபிஸீனியர் என்றால் கலப்பு ஜாதியினர் எனப் பிறநாட்டார் இழிவாகக் கருதக் கூடியதா யிருக்கிறது. எனவே, அம் மக்கள் தங்களை அபிஸீனிய ரென்றும், தங்கள் நாட்டை அபிஸீனியா என்றும் அழைத்துக் கொள்ள விரும்ப வில்லை. சில காலமாகவே, அவர்கள் தன் மதிப்புணர்ச்சி மேலீட்டால், தங்களை எதியோபிய ரென்றும், தங்கள் நாட்டை எதியோபியா என்றுமே அழைத்து வருகிறார்கள். இம் மனப்பான்மை கொண்ட அம் மக்கள் பிறரும் தங்களை அவ்வாறே அழைக்க வேண்டுமென்று விரும்புவது எதிர்பார்ப்பதும் இயற்கையே யல்லவா! ஆகவே, நாமும் அம் மக்களையும், அந் நாட்டையும் முறையே எதியோபியர், எதியோபியா என்றே குறிப்பிட்டு அழைத்து வருவோமாக! இவ் வீர மக்கள் விரும்பி யழைத்துக் கொள்ளும் எதியோபியர் என்ற பெயரை இவர்களுக்கு முதலில் யார் கொடுத்தது! எவ்வாறு ஏற்பட்டது? என்பன போன்ற கேள்விகளுக்கு இன்னும் பதிலே கிடைக்கவில்லை. சிரியர்கள் கிரேக்க பாஷையிலிருந்த வேதத்தை ஒருவித பாஷைக்கு மொழி பெயர்த்தபோது, அப் பாஷையை 'எதோபிக்' என்று அழைத்தனராம். அவ் வேதத்தை இம் மக்கள் தங்களுக்குரியதாகக்



கொண்டு அதில் கூறியுள்ள விதிவிலக்குகளுக்குக் கட்டுப்பட்டு நடந்து வருவதால், எதியோபியர் என்று அழைக்கப்பட்டனராம்.

### ஜாதிப்பிரிவு

எதியோபிய மக்களில் முதல் பிரிவினர் அம்ஹாரிஸ் என்று கூறப்படுகிறவர்களாவர். எதியோபியர் அல்லது அபிஸீனியர் என்றால் இந்த வகுப்பார் தான் குறிப்பிடப்படுவர். இவர்கள் பேசுவது அமாரிக் என்னும் பாஷையாகும். இதுவே தேசபாஷையுமாகும். ஏனென்றால், அம்ஹாரிஸ் ஜாதியார் தான் அரச பதவியை வகித்து வருகிறார்கள். அவர்களது தொகை 25 லட்ச மிருக்கலாம். அவர்கள் பெரும்பாலும், ஷோவா, அமாரா, டைகர் ஆகிய மாகாணங்களில் காணப்படுகின்றனர். இவர்கள் பண்டை நாளில் அரேபிய தேசத்தின் தென் பகுதியிலிருந்து வந்ததாக ஊகிக்கப்படுகிறது. இவர்கள் திடகாத்திர தேகமும், நீக்ரோ ஜாதியாரை விடக் குறைவான கருப்பு நிறமும் உடையவர்களாக இருக்கின்றனர்.

இரண்டாவது பிரிவினர் காலாஸ் என்ற ஜாதியார், இவர்கள் சற்றேறக்குறைய 40 லட்சம் பேரிருக்கிறார்கள். இவர்கள் தெற்கிலும் கிழக்கிலும் அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் நாகரிகத்தில் சிறந்தவர்களென்றோ அல்லது நாகரிகத்தில் குறைந்தவர்களென்றோ சொல்வதற்கில்லாமல் பலவகையான போக்குடையவர்களாய்க் காணப்படுகின்றனர்.

மூன்றாவது பிரிவினர் சோமாலியர், டான்கில்ஸ் என்று கூறப்படுவோராவர். இவ் விரு கூட்டத்தாரும் வெவ்வேறு பாஷை பேசினாலும் ஒரே வகுப்பினராவர். இவர்கள் வடகிழக்கு மண்லரணியத்திலும், கிழக்கிலும் வசிக்கிறார்கள்.

எதியோபியாவுக்கு மேற்கில் நீக்ரோ ஜாதியார் வசிக்கின்றார்கள். யுகந்தா, சூடான் ஆகிய இரு தேச மக்களிடமிருந்து இவர்களை வித்தியாசத்தால் வேறு பிரித்துவிட முடியாது. இங்ஙனம், பல ஜாதியார் எதியோபியாவிலிருந்தும், இந்தியராகிய நம்மைப்போல் உயர்வு தாழ்வு காண்பிப்பதில்லை. காலடைவில் அவர்கள் ஒன்றாகக் கலந்தே வருகின்றனர்.

### சமயவுணர்ச்சி

அம்ஹாரிஸ் ஜாதியார் யாவரும் காப்டிக் கிறிஸ்தவர்கள் அதாவது கிரேக்க கிறிஸ்துமதக் கோவில்களைப் பின்பற்றுபவர்களாவர். காலாஸ் ஜாதியாரில் ஒரு பகுதியாரும் கிறிஸ்தவர்களே யாவர். சோமாலியர், டான்கில்ஸ் முதலியோர் முஸ்லிம்களாவர்.

### ஜனத்தொகை

இன்று வரை எதியோபியாவில் ஜனகணிதம் எடுக்கப்பட்டதே யில்லை. ஆகவே, அந் நாட்டில் எவ்வளவு மக்கள் வசிக்கிறார்கள் என்று திட்டமாகக் கூற முடியாது. ஆயினும், சுமார் ஒரு கோடி மக்கள் வசிப்பதாக எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். இவ்வொரு கோடியில் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேர் அடிஸ் அபாபாவில் வசிக்கிறார்கள். முப்பதாயிரம் பேர் ஹாராரிலும், இருபதாயிரம் பேர் டெரிலாடாவிலும் வசிக்கின்றனர்.

இவ்விடங்களைத் தவிர வேறு எப்பட்டணத்திலும் பத்தாயிரம் பேருக்கு மேல் நிலைபெற்ற குடிகளில்லை. பொதுவாக எதியோபியர் எல்லோரும் நாடு முழுதும் சிதறிப் பலவிடங்களில் வசிக்கின்றவர்களே யாவர். மலைக் குகைகளிலும், வனாந்திரங்களிலும் கூட இம் மக்கள் பலர் வாழ்கின்றனர். இதனாலேயே இந்நாட்டு மக்களின் ஜனசங்கியை எடுக்க முடியாமலிருந்து வருகிறது.

## மக்கள் இயல்பு

புத்தி சாதுரியம், பொறுமைக்குணம், உபசரிக்கும் பெருந்தன்மை இவைகளே எதியோபிய மக்களின் பொதுக்குணங்கள் என்று கூறின் மிகையாகாது. எதியோபிய நாட்டுப் பெருங்குடி மகன் அந்நாட்டுச் சாமானிய மக்களினும் மேம்பட்டவனே யாவன். அவனது உயர்ந்த தகுதியை யாராலுங் குறைக்க முடியாது. செல்வக் குடும்பத்தில் பிறந்த அவன் வெளிச் செல்லுங்கால், பணியாளர் பின்தொடர, துப்பாக்கி தாங்கிக் குதிரையேறிச் செல்வான். நடுத்தர தகுதியுள்ளவன் கூட குதிரை மீது செல்லாவிடினும், கோவேறு கழுதை மீதாவது சவாரி செய்வான். அந்நாட்டு மக்கள் நடந்து செல்வதை மிகவுங் கேவலமாகக் கருதுகின்றனர்.

பெருங் குடிமக்கள் தங்கள் தகுதிக்கேற்ப, டாம்பீகமாகவே உடையுடுத்துவார்கள். 'சாம்பிரேரோ' என்னும் ஒருவகை அங்கியும், வெள்ளைக் குடுத்துணியும், இறுக்கமுள்ள கால் நிஜாரும், சப்பாத்தும், மேற்சட்டை போன்று காணப்படும் பெரிய சால்வை ஆகியவைகளையே பொதுவாக அவர்கள் அணிவார்கள்.

சாதாரணமக்கள் கணுக்கால்வரை தொங்கும் குடுத்துணியை அணிவார்கள். தொப்பி தரிப்பதில் அதிகமாகக் கவனஞ் செலுத்தமாட்டார்கள். ஆனால் பட்டு பாரசீகக் கம்பளங்கள் முதலிய விலை யுயர்ந்த ஆடைகளை எப்போதாவது உபயோகிப்பார்கள். அவர்கள் கஷ்டப்பட்டு வேலை செய்வார்கள். சிக்கனமாகச் செலவு செய்வார்கள். சட்டத்திற்கு அடங்கி நடக்குங் குணம் அவர்களிட முண்டு. கூரை போட்ட வீடுகளில் வசித்து வருவார்கள். அவ்வீடுகள் அநேகமாய் வட்டமாக இருக்கும். அதிக நாகரிக மில்லாத ஆப்பிரிக்கர்களின் வீடுகள் போன்றிருக்கும்.

எதியோபியாவில் சில கிராமங்கள் முழுவதும் ஒரே குடும்பத்தினர் இருப்பார்கள். ஒரே சமயத்தில் 4, 5 தலைமுறைக்காரர்கள் உயிருடனிருப்பார்கள்.

வீடுகளிலுள்ள சாமான்கள் மிகவுஞ் சாதாரணமான முறையில் இருக்கும். இவைகளைத் தவிர அவர்கள் வீடுகளில் யுத்தச் சின்னங்களும் ஆயுதங்களும் தான் அதிகமா யிருக்கும்.

எதியோபிய மக்கள் ஒருவருக்கும் அநாவசியமாகத் தீங்கிழைக்க மாட்டார்கள். விருந்தினர்களை மிகவுந் தாராளமாக உபசரிப்பார்கள். ஆனால் அவர்களைச் சரியானபடி நடத்தவேண்டும்.

பீட பூமிகளில் வசிக்கும் எதியோபியர்களெல்லாம் அநேகமாக விவசாயத்தில் ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள் சோளம், பார்லி, கடலை முதலிய தானியங்களையும், உருளைக்கிழங்கு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, மூலிகைகள், அத்தி, வாழை, பூசணைச்செடி முதலியவைகளையும் பயிரிடுவார்கள். பெண்கள், தானியங்களை மாவாக அரைத்து ரொட்டி சுடுவார்கள். இத் தானியங்களை மாவாக அரைப்பதற்கு நம் நாட்டுக் கிராமங்களில் இருந்துவருவது போன்ற கல் யந்திரங்களைத்தான் உபயோகிப்பார்கள். இம் மக்களுக்கு அவசியமான கால் நடைகளை வளர்த்து வருவார்கள். மலைப்பிரதேசங்களில் ஏராளமான ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. கால் நடைகளெல்லாம் நன்கு கொழுத்திருக்கும்.



கிராமங்களில் வசிப்பவர்களுக்குக் கவலை யென்பதோ கஷ்ட மென்பதோ கொஞ்சமுங் கிடையாது. தங்களுக்குரிய வேலைகளைச் செய்து நிம்மதியாய்க் காலங்கழித்து வருகிறார்கள். இவர்களின் குதூகல வாழ்க்கை, வெளிநாட்டு யாத்ரீகர்களுக்குப் பெரும் பொறாமை யுண்டுபண்ணு மென்பதில் ஐயமில்லை.

எதியோபியர்கள் கள் குடிப்பதில்லை. பொதுவாக "டெல்லா" எனப்படும் ஒருவகை பானத்தையே அனைவரும் பருகுவார்கள். இந்தப் பானம் பார்லியி லிருந்தும், ஜெஸ்கா என்னுந் தழையிலிருந்தும் இறக்கப்படும் ஒருவகை சாராயமாகும்.

எதியோபியர்கள் வாலிப பருவம் வந்ததும் தங்கள் ரத்தம் பரிசுத்தமான உயர் குலத்தினுடையதே என்பதைக் காட்ட சிங்கவேட்டை யாடுவது வழக்கம். தன் இளமையிலேயே ஒரு சிங்கத்தைக் கொன்று அதன் பிடரி மயிர்களைத் தங்கள் தொப்பிகளில் அலங்கரித்துக் கொள்வதையே ஒவ்வொரு வாலிபனுங் கௌரவமாகக் கருதுகிறான். சில வேடர்கள் மட்டும், சிறுத்தைகளைக் கூடுகள், பத்தயங்கள் வைத்துப் பிடித்து, அதன் தோலைத் தலைநகருக்கு அனுப்புகிறார்கள். பின்னர் அத் தோல் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

ஆண்களைப்போல் பெண்மணிகளும் வீரமும் அஞ்சாமையு முடையவர்களே யாவர். தங்கள் நாட்டில் எதிரிகள் படை யெடுத்து வந்தால் அவர்கள் தங்கள் கணவன்மாரோடு யுத்தத்துக்குச் செல்வார்கள். நாற்பது வருடங்களுக்கு முன்னர், இரண்டாவது மெனலிக் மன்னரின் நான்காவது மனைவியான டெய்டோ அரசியார் இத்தாலியருடன் சண்டை செய்து வெற்றி கொண்டதும், சமீபத்தில் 1935-36-ல் இத்தாலிக்கும்—எதியோபியாவுக்கும் ஏற்பட்ட சண்டையில் எதியோபிய பெண்மணிகள் போர்க்களத்துக்குத் துணிவுடன் சென்று சண்டை செய்து இத்தாலிய வீரர்களைக் கதிகலங்கச் செய்து விரட்டி யடித்ததுமே அவர்களது வீரத்துக்குப் போதிய சான்றாகும்.

## விவாக முறை

எதியோபிய மக்கள் விவாகஞ் செய்து கொள்ளும் முறையே ஒரு விநோதமாக இருக்கும். அவர்களுக்கு விவாகமென்பது சர்வ சாதாரணமான காரியம். அதில் அவர்கள் புனிதத்தன்மையை—தெய்வீகத்தைக் கற்பிப்பதில்லை. அவர்கள் விருப்பப்பட்டால் உடனே விவாகஞ் செய்து கொள்வார்கள். விருப்ப மில்லாவிட்டால் விவாகவிலக்கு செய்து கொள்

வார்கள். எதியோப்பிய மகனொருவன், தான் விவாகஞ் செய்துகொண்ட பெண்ணைவிட்டுப் பிரிந்துவிட வேண்டுமென்று கருதினால், உடனே எவ்வித சிரமமுமின்றி விவாகவிலக்கு செய்து கொள்ளலாம். வெள்ளையர்களைப்போல், விவாகவிலக்கு செய்து கொள்வதற்கு விபசார தோஷத்தையோ வேறெதையோ காரணமாகக் காட்டவேண்டியதில்லை. அவ்விதஞ் செய்யவேண்டிய அவசியமுமில்லை.

மனிதனுடைய இயற்கையான குற்றங்குறைகளுக்கு இடங்கொடுத்தே எதியோப்பியாவில் விவாகச்சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும், எல்லாவிதமான கலியாணங்களுக்கும் அச் சட்டங்கள் இடங்கொடுக்கின்றன. விவாகவிலக்கு செய்துகொள்ளும் உரிமையைத் தருவதற்கேதுவாகிய ஸிவில் விவாகமுறையும் இருக்கிறது. சோதனையாகவும் (பரீக்ஷார்த்தமாகவும்) விவாகங்கள் செய்யப்படுகின்றன. ஒரு பெண்மணி ஆடவனொருவனிடம் நிலையாகக் கூடிவாழ வேண்டுமென்ற அவசியமில்லாமலே, அவன் குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும், அவ்வாறே செய்து கொள்ளலாம்.

எதியோப்பிய மக்கள் பெரிதும் நான்கு வகையாக விவாகங்கள் செய்து கொள்கிறார்கள். இந்நான்கு வித விவாகங்களையே அவர்கள் போதிய வழியில் நடக்கும் விவாகங்கள் எனக் கருதுகின்றனர். அவைகளில் முதலாவது விவாகம், கிறிஸ்தவ தேவாலயங்களில் சடங்கு முறைப்படி நடைபெறும். பாதிரிகளால் ஆசீர்வதிக்கப்படும் தம்பதிகள் எக்காலத்தும் எக் காரணத்தைக்கொண்டும் பிரியக் கூடாது. எவ்வளவு துன்பங்களும், மனக்கசப்பும் தம்பதிகளுக்கிடையே ஏற்பட்டாலும், அவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு வாழ்நாள் முழுவதும் ஒன்று சேர்ந்தே வாழவேண்டும். இவர்களில் ஒருவர் இறந்தால் மற்றொருவர் விவாகஞ் செய்து கொள்ளக்கூடாது. நம் இந்தியாவைப்போல் ஆண்கள் மறுவிவாகஞ் செய்து கொள்ளலாம்;பெண்கள்தான் செய்துகொள்ளக் கூடாது என்ற பாரபட்சமான விதி (ஆணுக் கொரு நீதி; பெண்ணுக்கொரு நீதி) கிடையாது. இருபாலாரும் இவ் விஷயத்தில் சமத்துவமாகவே பாவிக்கப்படுவார்கள். அவர்கள் ஒரே தடவைதான் விவாகஞ் செய்துகொள்ளலாம். ஆனால், இவ் விவாக முறையை மேற்கொள்வோர் மிகச் சிலரே யாவர்.

இரண்டாவது 'பர்ச்சா' அல்லது ஸிவில் (தேசார்) விவாகம் ஆகும் இது மிகவும் பிரபலமானது. இம் முறைப்படி விவாகஞ் செய்து கொள்பவர்கள், ஒரு குடும்ப விருந்தின்போது, தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்கள். அச் சமயம், மனைவியை அன்பாக நடத்தி யாதொரு குறைவுமின்றி வைத்திருப்பதாக மணமகன் வாக்குறுதி யளித்து உத்தரவாதமும்செய்து தரவேண்டும். விவாக ஒப்பந்தத்தை மீறினால் பெண்ணின் மனக்குறை நீங்கும் வரையில் புருஷன் அவளுக்கு ஒவ்வொரு டாலர் கொடுத்து வரவேண்டும். தம்பதிகளின் பொருள்கள் இருவருக்கும் பொதுவான சொத்தாகவே கருதப்படும். ஆனால், இவர்களிடையே விவாக விடுதலை யேற்பட்டால், அச் சொத்து சரிசமத்துவமாக அவ் விருவருக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்படும். வயதான பிள்ளைகள் தகப்பனுக்கும், சிறு குழந்தைகள் தாய்க்குஞ் சொந்தமாவார்கள்.



மூன்றாவது விவாகம், சில குறிப்பிட்ட நிபந்தனைகளின் மீது ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான் நீடித்திருக்கும். மணமகன் தனது உண்மைத் தன்மைக்கும், மணமகளின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமாக மூன்றாம் மனித னொருவனைப் பொறுப்பேற்றுக் கொள்ளச் செய்யவேண்டும். பின்னர், தம்பதிகள் தங்கள் விருப்பம்போல் விவாக பந்தத்திலிருந்து விடுவித்துக் கொள்ளலாம்.

சிலருக்கு குழந்தை வேண்டுமென்ற ஆவல் ஏற்படுகிறது. ஆனால், விவாக பந்தத்தில் சிக்கிக்கொண்டு துன்பப்பட அவர்களுக்கு விருப்பமில்லை. அதற்கு வேண்டிய சௌகரியங்களோ, வசதிகளோ அவர்களுக்கில்லை. அப்பேர்ப்பட்டவர்களது விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு வேறு வழி என்ன? அவர்களுக்காகவே, இந் நான்காவது விவாகமுறை அந்நாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. குழந்தை பெறும்வரை இருவரும் கூடி வாழ்வதற்காக விவாகஞ் செய்து கொள்வதாம். குழந்தை பெறுமளவும் ஒருவரோ டொருவர் அன்புடன் கூடி வாழ்ந்து வருகிறார்கள். குழந்தை பிறந்ததோ இல்லையோ உடனே, அவர்களது மணவாழ்க்கை முற்றுப்பெற்றது.

இவ்விதஞ் செய்யப்படும் விவாகங்களின் போது, மணமகன் தன் மனைவிக்கு எத்தனையோ விதமான வெகுமதிகளை மனமுவந்து அளிக்கிறான். ஆனால், பொதுவான விவாக வெகுமதி, மணமகன் மணமகளுக்கு என ஒரு ஏக்கர் நிலம்விட்டு வைப்பதுதான் எனக் கருதப்படுகிறது.

பொதுவாக, எதியோப்பிய மகளிர் தங்களுடைய கூந்தலின் மீதுதான் மிகவுங் கவனஞ் செலுத்துகிறார்கள். அவர்கள் உணவருந்தாது பட்டினி கிடந்தாலுங் கிடப்பார்களேயொழிய, மாதத்துக் கொருமுறையாவது தலைமயிரை வெட்டிக்கொள்ளா திருக்கமாட்டார்கள். அவ்வாறிருக்க நேரிட்டால் அவர்கள் உயிரே போய்விடும்.

(தொடரும்.)



# இனி வரும் யுத்தம்

(பி. என். வைத்தியநாத சுவாமி பி. எஸ். ஸி.,)

★

என் அன்புள்ள விமலா,

உன் அருமைக் கடிதம் கிடைத்தது. சகலமும் தெரியலானேன். மிகவும் சந்தோஷம்.

யுத்தம் நின்று விடுமா என்று சந்தேகிக்கிறாய்! உன்னைப் பயித்தியமென்றே இதற்காக பலர் சொல்லுவர். என் விமலா! இனிதான் யுத்தமிருக்கிறது. அதுதான் உண்மையான யுத்தம்.

பட்டு படாரென்று குண்டுமாரி பொழிந்தது; ஆயிரக்கணக்கில் பீரங்கிகள் அரைக்கணமும் ஓய்வின்றி வேலை செய்தன; தினமும் டஜன் கணக்கில் கப்பல்கள் மூழ்கின;—இது யுத்த ஆரம்பத்தில் இருந்த நிலை. ஆனால் மூடு பனி அதிகமாகி விட்டது. சென்ற சுமார் 70-வருஷங்களாகவே இதையொத்த பனியை அங்கு மனிதன் கண்டதில்லையாம். இதன் காரணமாக இன்று போர் முனையில் சிறிது சாந்தம் நிலவுகிறது.

பதுங்கின புலி அதிகமாய் பாயும். ஒவ்வொரு தேசமும் இன்று பின்னடைந்து நிற்கிறது. எதற்காக? நன்மைக்கா? இல்லவேயில்லை. அதிக கோரப் பற்களைக் கொண்டு வருவதற்கே.

யுத்த ஆரம்பத்தில் நாம் கண்டதென்ன? இரண்டு பெரிய இருப்புக் கோட்டைகளே-மாகினுட் அரண், ஸீக்பிரட் அரண். இதன் இரகசியங்களை ஆண்டவனே அறிவன். ஒன்றை மற்றொன்று நன்றாக தெரிந்து கொண்டதாக ஜம்பம் பேசலாம். ஆனால் அதெல்லாம் வீண் வார்த்தைகளே. ஸீக்பிரட் அரண் அழிய வேண்டுமா? சரி பிரான்சின் ஒவ்வொரு வீர மகனும் தன்னுயிரை பலியிடவேண்டும். இதே போல்தான் மாகினுட் அரண் சாய வேண்டுமா? ஒவ்வொரு ஜர்மன் புத்திரனும் அதன் முன் மடிந்தாக வேண்டும். இது உறுதியான விஷயம். இல்லாவிடில் இரண்டு அரண்களின் இரும்பும் அசையாமல் நிற்கும்.

இந்த அபாயத்தோடு யுத்த மூள்வதைக் கண்டோம். ஆனால் இப்பொழுதோ—நினைக்கும் போது பயமாக விருக்கிறது-அம்மாதிரி விஷயங்கள் பல தோன்றிக் கொண்டிருக்கிறது.

ஒருநாட் காலை; திடீரென்று "டார்பீடோ"வைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளும் பேசின. ஏதோ மீன் ஒன்றின் செய்கையை விஞ்ஞானி ஒருவன் கண்டானும்; அவன் மூளை வேலை செய்தது; டார்பிடோவைக் கண்டு பிடித்து செய்தான்; அதன் முடிவென்ன; பல கோடி ரூபாய் சிலவு செய்து பல வருஷங்கள் கட்டின கப்பல்கள், இன்று சில நிமிஷங்களில் நாசமாகின்றன.

இனிவரும் யுத்தத்தில் டார்பிடோவின் நாசவேலை நசித்துப் போகுமென இங்கிலாந்து நம்புகிறது. ஆனால் எல்லோரும் இதை ஏற்றுக்கொள்ள முடியுமா? டார்பிடோவை சேர்ந்த கம்பிகளை நறுக்க இங்கிலாந்து ஏற்



பாடு செய்து வருகிறது. ஆனால் ஜெர்மன் சும்மா இருந்து விடுமா! அறுந்த கம்பிகள் மறுபடி பிணைத்துக்கொள்ள அது மார்க்கம் தேடும். டார்பிடோ என்றும் கப்பல்கட்கு யமனாக விளங்கும். சில சமயங்களில் அதன் சக்தி சிறிது குறைவு படலாம். ஆனால் அதன் நாசவேலை அடியோடு நின்று போகாது.

'புது ஆயுதமொன்று வைத்திருக்கிறேன்; அதை உபயோகித்தால் உலகம் தாங்காது; அவசியமாயின் அதை செய்தே தீருவேன்; பிறகு என்மேல் குற்றம் கூறக்கூடா' தென்கிறார் சாதுப்பிள்ளை ஹிட்லர். இதைக் கேட்டு பயப்படவில்லை என்கிறது இங்கிலாந்து. இன்னும் சிலர் இதுதான் சமயமென கயிறு விடுகின்றனர். டார்பிடோதான் ஹிட்லரின் புது ஆயுதம் வேறொன்றுமில்லை என்று சொல்கிறார். இதன் கருத்தென்ன? இப்படி சொல்லி பார்ப்போம்; ஜெர்மன் ஏற்றுக் கொள்கிறதா; அல்லது தனது புது ஆயுதம் வேறொன்று இருக்கிறது என்று வெளியிடுகிறதா; இதனால் ஏதாவது விஷயம் வெளியாகட்டும் என்பதே இவர்களின் கவலை. இந்த சூதுகளை அறியாத பரமாத்மாவா ஹிட்லர்? அவர் வாய் திறக்கவில்லை.

விமலா இன்னொரு விஷயம் சொல்கிறேன். பயப்பட்டு விடாதே. ஒரு விஞ்ஞானி இருந்தானும்; அவனைக் கொசுக்கள் கடித்ததாம். இந்தப் பூச்சிகளைக் கொல்ல அந்தப் பெரியார் ஒருவித ஒளி யொன்றைக் கண்டு பிடித்தானும். அதாவது, இது பட்ட மாத்திரத்தில் அது எரிந்து போவது. பார் விமலா! நாம் செய்த பாவம். இந்த கொசுக்களாவது விஞ்ஞானி யாயிற்றே என்று அவனைக் கடிக்காது இருந்திருக்கக் கூடாதா! அல்லது அவன்தான் பாவம் சிறு ஜந்துக்களென்று மன்னித்து விட்டுப் போயிருக்கக் கூடாதா? இருவரும் பிசகு செய்தனர். இன்று "ஒளி" வந்துவிட்டது. இப்பொழுது இதைப்பற்றின அதிக ஆராய்ச்சிகள் செய்யப் பட்டதாம். இந்த ஒளியைக் கொண்டு பெரும் சைனியங்களையும் சாம்பலாக்கிவிட முடியுமாம். ஐயோ, விமலா! இதென்ன பார். இந்த பாழும் ஆகாய விமானம் சென்ற மகா யுத்தத்தால் சிறப்பாக வந்தது. இதனால் நாம் படும் துயரம் கொஞ்சமல்ல. எந்த சமயத்தில் எந்த ஜெர்மன் விமானம் நம்மேல் பறக்குமோ என்று பயந்து தரைக்குள் மறைகிறோம். இந்த ஒளி வந்து விட்டால் எங்கே போய் மறைவது? மண்ணும் உருகி நாம் வெந்துபோக வேண்டியதுதான் போல் தோன்றுகிறது.

இந்த ஒளி ஒன்று மாத்திரமல்ல. இன்னும் இதைப்போல் பல அதிசய ஆயுதங்கள் தோன்றும். எல்லாம் மனிதன் செய்ததே, தன் சகோதர மனிதனைக் கொல்ல. இம் மாதிரி ஒரு காலம் வந்தால் உலகம் எப்படி இருக்குமென்று யோசிக்கிறாயா, விமலா! ஆம், இது தான் அநேகரின் கவலையும். ஜெர்மன் ஒரு ஒளியைக் கொண்டு வந்தால் இங்கிலாந்து ஒரு வாயுவைக் கொண்டு வரலாம். இந்தக் காற்றை சுவாசித்த மனிதனெல்லாம் பிணமாய்ச் சாயலாம். இந்த ஆபத்துக்களிலிருந்து நீங்கும் வழிகளும் பிறகு தானாக பிறக்கும். இனி வரும் யுத்தத்தால் இதை யெல்லாம் பிழைத்திருக்கும் மக்கள் அறிந்து கொள்வார்கள்.

ஜெர்மனிக்கோர் ஸீக்பிரட் அரண்; பிரான்சுக்கோர் மாகினுட் அரண்; இனி இத்தாலி சும்மா இருக்குமா! அது என்ன ஏமாந்த தேசமா அல்லது சாமார்த்தியத்தில் குறைவு பட்டதா; அல்லது இனி வரப்போகும்

கடுமையான யுத்தத்தில் அது கலந்து கொள்ளாமலிருக்க முடியுமா! யோசித்தார் தலைவர் முசோலினி. தனது பெயராலேயே ஒரு அரண் அமைக்க துணிந்து விட்டார். அரண் வளரும்; அதன் முடிவு எங்கு போய் நிற்குமோ!

இன்று நேச தேசங்கள் என்று சொல்லிக் கொள்கின்றன. இவைகள் போர் முனைக்கு போக வில்லையாம். ஆனால் படுகளத்தில் பாரபக்ஷமுண்டா? இவர்களின் கப்பல்களும் தான் நாசமகின்றன. இருந்தும் இவர்கள் பொறுமைசாலிகள் தான். ஏதோ உளறினாலும் கையில் துப்பாக்கி எடுக்க வில்லை. இனி வரும் யுத்தத்தில் இந்த நேச தேச வேஷம் பலிக்காது. இவைகள் சிறு நாடுகள். பெரிய மதயானைகளை எதிர்க்க முடியாது. ஒன்று தலை வணங்கி உதவி செய்ய வேண்டும்; அல்லது துணிந்து எதிர் நின்று போர் செய்ய வேண்டும். இன்று பின்லாந்து; நாளை வேறொரு லாந்துமேல் ஸ்டாலின் கை வைப்பார். அப்பொழுது நேசப் பான்மை என்ன செய்யுமோ!

என் அன்புள்ள விமலா! இன்னும் உனக்கு எவ்வளவோ விஷயங்களை எழுத வேண்டுமென்று மனம் துடிக்கிறது; பேனாவும் தானாக ஓடுகிறது; ஆனால் பாழும்............தடை செய்து நிற்கிறது. விஷயத்தை உள்ள படி சொல்ல பயமாக இருக்கிறது.

இதை நிச்சயமாக நம்பு. ஒன்று சமாதானம் ஏற்படுதல். அப்பொழுது ஐரோப்பாவில் சாந்தி தோன்றும். இல்லையேல் மூடு பனி மறைய வேண்டியது தான் தாமதம். யுத்த பனி மூடிக்கொள்ளும். ஒவ்வொரு நாடும் யுத்தத்தில் கலந்து கொள்ள வேண்டியே ஏற்படும். எந்த வேஷத்திலும் எந்த நாடும் தனித்துப் போய்விட முடியாது, இனி வரும் யுத்தத்தின் முடிவு எப்படியாகும் தெரியுமா! இரண்டு கத்தி கட்டிய பெருஞ் சேவல்கள் சண்டை போட்டன; ஒன்று மடிந்து வீழ்ந்தது; மற்றொன்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு கிடக்கிறது. இந்நிலை தான் ஐரோப்பிய யுத்தத்தில் நீ காண்பாய், நமது இங்கிலாந்து ஜெயமடையலாம், எப்பொழுது? தனது ரத்தினங்களை எல்லாம் தத்தம் செய்த பின்பே.

இனி வரும் யுத்தத்தில் இந்தியா பாதிக்கப்படுமா! இதைப் பற்றின சந்தேகமே வேண்டாம். நாம் சும்மா இருக்கலாம். ஆனால் யுத்தம் விடாது. நம்மில் பலர் யுத்தப் பேய்க்கு பசி தீர்க்கப் போவோம். ஆனால் இதன் முடிவு மிக நன்மையாகவே இருக்கும். ஓர் புது உலகம் பிறக்கும்.

என் அன்பின் விமலா! கடைசியாக ஒரு வார்த்தை. ஆண்டவனை தினமும் வேண்டு—யுத்த மேகங்கள் மறைய வேண்டுமென்று. சத்தியம் ஜெயிக்கட்டும்.

உன் கணவருக்கு என் அன்பான வந்தனத்தைச் சொல்; உன் குழந்தைகட்கு என் அன்பான ஆசீர்வாதம்.

இப்படிக்கு,
கமலினி.

---

# 'தந்தை மனம்'

(நா. ஆறுமுகம்.)

ஓர் இராஜபுத்திர இளைஞன் ஒரு குதிரையின்மேல் வாயுவேக மனோ வேகமாய் ஜயபுரியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய உடைகள் தூசி படியப்பட்டிருந்தன. குதிரையின் வாயிலிருந்து நுரை தள்ளிக்கொண்டிருந்தது. சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே குதிரையை இன்னும் துரிதப்படுத்தினான். அடிக்கடி தனது மடியைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்.

அவன் ஜயபுரியை அடைந்தபொழுது மாலை ஐந்து மணி. ஜய்புரி அரண்மனைக்கு வந்து சேர்ந்ததும் குதிரை, வாயிலும் மூக்கிலும் நுரை தள்ள 'தடால்' என்று விழுந்து இறந்தது. ஜயபுரி மன்னன் உதயசிங் தர்பாரில் வீற்றிருந்தான். நமது இராஜபுத்திர வாலிபன் உதயசிங்கை வணங்கி விட்டு, தன் மடியிலிருந்த ஒரு லிகிதத்தை எடுத்துக் கொடுத்தான். அந்த லிகிதத்தில் இராஜ முத்திரை போடப்பட்டிருந்தது. உதயசிங் அவ் வாலிபனது தூசி படியப்பட்ட உடையையும், அவன் உடல் நடுங்குவதையும் பார்த்து, "நீ யார்? எங்கிருந்து வருகிறாய்," என்று கேட்டான்.

"வீரவர்ம்புரி இளவரசி துர்க்காதேவியால் அனுப்பப்பட்டவன்," என்று பதட்டத்துடன் கூறினான். "என்ன!! துர்க்கையால் அனுப்பப்பட்டவனா?" என்று ஆச்சரியம் ததும்பும் குரலில் கேட்டவனாய், உடனே, ஆவல் மிகுதியால், கடிதத்தைப் பிரித்து வாசிக்க ஆரம்பித்தான்.

வீரவர்மபுரி
......................

அன்பிற்குரிய காதலா,

உங்கள் அன்பைக் கொள்ளை கொண்டவளான நான் வேண்டிக்கொள்வது என்னவென்றால்......அதாவது......என் மனம்......தயங்குகிறது......நான் தங்கள் உதவியை நாடுகிறேன். மகமதியர்கள் எனது பிதாவின் மேல் படை யெடுத்து வந்திருக்கிறார்கள். இரு திறத்தாருக்கும் கொடிய போர் மூண்டுளது. யுத்தம் மிகவும் பயங்கரமா யிருக்கிறது. பிதாவின் சேனைகள் ஏராளமாய் அழிந்துவிட்டன, எனது பிதாவிற்கு நீங்கள் ஜன்ம சத்துருவா யிருந்தாலும்......இந்தச் சமயத்தில் தங்கள் உதவி யில்லாவிட்டால், எங்கள் நாடு மகமதியர் வசம் ஆய்விடும். ஆகையால் பிதாவின்

பகையைச் சிறிது பாராட்டாமல்......உங்கள் காதலி வேண்டுகோளுக்காவது சிறிது கருணை செய்யவேண்டும். மிகவும் அவசரம்!! அவசரம்!!

தங்களுக்கு அனுப்பும் முத்தம்!! !!

இப்படிக்கு
தங்கள் காதலி
தூர்க்கை.

உதயசிங் மறுமுறை காகிதத்தைப் படித்துப் பார்த்தான். காதலியால் எழுதப்பட்ட கடிதத்தை எத்தனை தடவை படித்தாலும் சலிப்பு உண்டாகுமா? தனது காதலியால் எழுதப்பட்ட கடிதத்தை அநேக தடவை முத்தமிட்டான். உதயசிங் எழுந்து நின்று, "சபையோர்களே! நான் வீரவர்மபுரிக்கு அவசரமாய் போகவேண்டி யிருக்கிறது. எனது காதலி தூர்க்கையின் நாட்டை மகமதியரிடமிருந்து காப்பாற்றவேண்டும்" என்று கூறினான். தர்பார் கலைந்தது. அன்று இரவே தூர்க்கையின் மேலுள்ள பாசத்தால் உதயசிங் ஏராளமான சேனைகளோடு ஜயபுரி நோக்கி செல்வானான்.

* * * *

பீம்சிங் சேனைகள் வீராவேசத்துடன் மகமதியரோடு சண்டை செய்து கொண்டிருந்தனர். மகமதியர் சேனைகள் ஏராள மாதலால், பீம்சிங் சேனைகள் ஏராளமாய் அழிந்துவிட்டன. பீம்சிங் என்ன செய்வதென்று தோன்றாமல் திகைத்தான்.......ஆனால் ஒரு வழி......தனது சேனையை புறங்காட்டி ஓடும்படி சைகை செய்து, தனது கோட்டைக்குள் சென்று, கோட்டை வாயில்கள் நான்கையும் மூடும்படி உத்தரவிட்டான். மகமதியர்கள் கோட்டையைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். பீரங்கிக் குண்டுகளை, கோட்டைமேல் பிரயோகம் செய்தனர். கோட்டை தகடு பொடியாகும் சமயம் உதயசிங் ஏராளமான சேனையோடு வந்து சேர்ந்தான். மகமதியர்களுக்கும் உதயசிங் சேனைக்கும் கொடிய போர் மூண்டது. பீம்சிங் எஞ்சிய சேனையும் கோட்டை வாயிலிலிருந்து மகமதியரைத் தாக்கியது. மகமதியர்கள் சின்னாபின்னமாக்கப்பட்டு புறங்காட்டி யோடினார்கள். பீம்சிங் இவ்வாறாக தன் நாட்டைக் காப்பாற்றினான்.

* * * *

அக்கொடிய பாதகன் பீம்சிங் உதயசிங்கிடம் ஏதாவது நன்றி செலுத்தினானா? உஹூம்;—உதயசிங் முகத்தை ஏறிட்டுப் பார்க்கக்கூட கிடையாது. அவ்வளவு பகை அவனுக்கு. பாவம்! உதயசிங் தகப்பனாருக்கும் அவனுக்கும் பகையா யிருந்தால், உதயசிங் என்ன செய்வான்? இந்த ராஜபுத்திர ஒற்றுமை யின்மை......அவர்களது ஜன்மப் பகை யல்லவோ......அவர்களது க்ஷீண திசைக்குக் காரணம். எவ்வளவு மேம்பட்ட குணங்களிருந்தும் என்ன பயன்! அந்தப் பகை......ஐயோ......கொடிய பிசாசு.

உதயசிங்கிற்கோ மனது வெடித்துவிடும் போலிருந்தது. தனது காதலி தூர்க்கையைப் பார்த்துவிட்டு நாடு திரும்ப உத்தேசித்தான்.

* * * *



தூர்க்கை நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். அவள் பின்னே ஒரு உருவம் சென்று அவளது கண்களை மிருதுவாய்ப் பொத்தின. தூர்க்கை திடுக்குற்று திரும்பிப் பார்த்தாள். "உதயசிங்!! நீங்களா," என்று கூறியவண்ணம் உதயசிங்கைத் தழுவினாள். என்னே! காதலரின் பாசம்!! உதயசிங் கண்களிலிருந்து இரு துளிகள் கீழே விழுந்தன. "தூர்க்கை! இவ்வுலகத்தில் உன் அன்பிற்கு ஈடாக எதுமுளதோ! உன் பாசம்போல் உனது தகப்பனாருக்கு என்மேல் கடுகளவுகூட கிடையாது! என் முகத்தைப் பார்க்கக்கூட அவருக்குப் பிடிக்கவில்லை" என்றான். அவனது தொனியில் ஆழ்ந்த துக்கம் நிறைந்திருந்தது. "என்ன!!!...உங்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லையா? நன்றிகூட செலுத்தவில்லையா!" என்றாள். அவளது தொனியில் ஆத்திரம் கலந்திருந்தது. ஆத்திரம் அழுகையாய் மாறியது. அவளது கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகியது.

"தூர்க்கை! ஏன் வருந்துகிறாய்? நீ என்மேல் வைத்திருக்கும் பாசமே மேலானது. அதுதான் என்னை ஆனந்தக் கடலில் அமிழ்த்துவது ......அதுதான் என்னை மெய் மறக்கச் செய்வது......"

"உதயசிங்!"

"என்ன தூர்க்கை?"

"நமது கதி எவ்வாறு முடியுமோ! எனது பிதாவின் கன்னெஞ்சம் உருகாது போலும். உங்கள்மேல் அவர் தீராப் பகை கொண்டிருக்கிறார். ஐயோ...அதை நினைக்கும்பொழுது...என் உடல் நடுங்குகிறது" என்று நீர் கொண்ட மேகம்போல் கண்ணீர் வடித்தாள்.

"தூர்க்கை! கவலைப்படாதே...நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று அவளைத் தேற்றி விடை பெற்றுச் சென்றான் தன் நாட்டிற்கு.

* * * *

வீரவர்மபுரி அரண்மனை:—

"அப்பா! இது நியாயமா! நம்மை ஆபத்திலிருந்து மீட்டவரை இப்படியா அவமதிப்பது? இது தர்மமாகுமா! இது நம் குலத்திற்கு அழகா! ஜன்மப் பகைஞரா யிருந்தாலும், ஆபத்தில் காப்பாற்றியவரை ஏழேழு ஜன்மமும் புகழவேண்டி யிருக்க, நீங்கள் இப்படிச் செய்தது நன்றா யில்லை" என்றாள் தூர்க்கை பீம்சிங்கைப் பார்த்து.

"தூர்க்கை! நான் அந்தத் துரோகியின் உதவியை நாடினேனா? நானா அப்பாதகனை அழைத்தேன்? அந்த ஜன்ம சத்ரு உதயசிங்கின் உதவியையா!......எனது உயிரையேனும் இழந்திருப்பேன். மேலும், நானா உன்னை அவனுக்கு லிகிதம் அனுப்பச் சொன்னது? நீ உதயசிங்கைப் பற்றி சிலாகித்துப் பேசுவது எனக்கு மிகவும் வெறுப்பைத் தருகிறது. மேலும் அவனை மணக்க வேண்டுமென்ற எண்ணத்தையும் இப்பொழுதே கொன்று விடு" என்று வீராவேசத்துடன் பேசினான்.

"அவரை மறக்க முடியாது! நான் அவரையே மணப்பேன். எனது காதலன் உதயசிங்கைத் தான் நான்......மண...ப்..." என்று கூறி முடிக்கு

முன்னே, "என்ன ! அத் துரோகி உதயசிங்கையா ! சம்மதியேன். ஒருக்காலும் சம்மதியேன். இப்பொழுதே உன் நாவைத் துண்டிப்பேன். உதயசிங்......ஜன்ம சத்ரு...எனது மந்திரியின் மகனைச் சீக்கிரம் உனக்கு மணமுடித்து வைப்பேன்—உன் சம்மதம் வேண்டியதில்லை" என்று கூறிவிட்டு அகன்றான். துர்க்கையின் கண்களிலிருந்து, மலை யருவிபோல் கண்ணீர் பெருகியது. அவளுக்கு விமோசனம் ஒரு வழிதான்.

* * * *

நடு நிசி. வீரவர்மபுரி கோட்டை வாயிலிலிருந்து ஒரு உருவம் குதிரையின்மேல், ஜயபுரியை நோக்கி சென்றுகொண்டிருந்தது. யார் அது? ஆம்......துர்க்காதான்......தன்னந் தனியில் சென்றுகொண்டிருக்கும் அந்த வீர வனிதைதான். காலையில் ஜயபுரியை அடைந்தாள். தர்பாரில் வீற்றிருந்தான் உதயசிங். துர்க்கை 'விறுவிறு' என்று தர்பாரை யடைந்து, உதயசிங் கால்களில் வீழ்ந்தாள். "ஆ, துர்க்கை," என்று அலறியவனாய் அவளைத் தழுவினான்.

* * * *

அந்தப்புரம்:—

துர்க்கை ஆதியோடந்தமாக, நடந்தவற்றைச் சொன்னாள்.

"காதலி துர்க்கை ! என் மேலிருக்கும் பாசமல்லவா உன்னை இவ்வளவு தூரம் வரவழைக்கச் செய்தது" என்று உதயசிங், துர்க்கை தலையைத் தடவிய வண்ணம் கேட்டான்.

"ஆம், நாதா ! சந்தேகமில்லாமல்," என்று கூறி, உதயசிங் மார்பில் துர்க்கை தலையைச் சாய்த்தாள்.

* * * *

துர்க்கை காணப்படவில்லை என்ற செய்தி வீரவர்மபுரி முழுதும் பரவிற்று. குடிகள் அலறினர். பீம்சிங்கிற்கு மாத்திரம் அவள் எங்கு போயிருப்பாள் என்று தெரியும். அவன் மனம் வேதனைப்பட ஆரம்பித்தது. இப்பொழுதுதான் அவன் தன் குற்றத்தை உணர ஆரம்பித்தான். அவனது மன சாட்சி, "ஏ துரோகி! ஜன்ம சத்ருவா யிருந்தாலும், உன்னை ஆபத்திலிருந்து மீட்டவனன்றோ ! அவனைத் துரோகி யென்று சொல்லும் நீதான் கொடிய துரோகி ! உனது ஒரே மகள் ! அவள் இஷ்டப்பட்ட கணவனை மணக்க அனுமதிக்கக் கூடாதா! உன் மனைவியிடம் அவள் சாகுந் தருவாயில், என்ன சத்தியம் செய்தாய்? துர்க்கைக்கு அவள் விரும்பும் கணவனை மண முடிப்பேன் என்றாயல்லவா! இப்பொழுது உன் புத்தி மாறுட்டமடைந்துவிட்டதா ! சீ ! மூடா ! ஜயபுரி சென்று உனது மகளையும் உதயசிங்கையும் ஆசீர்வதி," என்று கூறிற்று. பீம்சிங் இப்பொழுதுதான் தன் நிலையை உணர்ந்தான். தனது பரிவாரங்களுடன் ஜயபுரி சென்று உதயசிங்கிற்கும், துர்க்கைக்கும் மணமுடித்து வைத்தான்.

---



# "நம்மவர்கள்"

(சி. தணிகாசலன்)

★

"கிழக்கு கிழக்குத்தான்; மேற்கு மேற்குத்தான்" என்று கீழ் நாட்டில் பிறந்த ஒரு மேற்குக் கவி—அதாவது இரண்டுங் கெட்டானாய்ப் பிறந்தவர்—கூறினார். "அட பாவமே! நரியைப் பரியாக்கிய அந்த ஆலவாய்ப் பெம்மானின் திருவருளால் அவனது அறுபத்தைந்தாவது, இல்லை, இல்லை, அறுபத்தாறாவது திருவிளையாடலாக—அறுபத்தைந்தாவது திருவிளையாடல்தான் 'பாழாய்ப்போன' (ஒரு காலத்தில் மதுரைச் சநாதனிகளின் தயவு வேண்டியிருந்தால்.........? அதற்காகத்தான் இந்த வார்த்தையைப் போட்டு வைக்கிறேன். 'காக்காய்' பிடிப்பதற்காக வல்ல.) ஹரிஜன ஆலயப் பிரவேச (இல்லை, இல்லை, 'ஆக்ரமிப்பு')மாய்விட்டதே !—இனிமேல் சூரியன் மேற்கு—இப்போது அவ்வாறு அழைக்கப்படும்—திக்கில் உதித்தால். "யாது செய்வம்" என்றுதானே கவலையும் ஆச்சரியமும் கொள்கிறீர்கள் ? அதற்கென் செய்வது ? நமது பாலபாட புஸ்தகங்களில் தான், 'சூரியன் காலையில் மேற்கில் உதித்து மாலையில் கிழக்கில் மலைவாயில் விழுவான்' என்று எழுதவேண்டுமே தவிர, அதற்காக மேற்கு கிழக்காகவும், கிழக்கு மேற்காகவும் மாறுமா என்ன ?

இக் கவி மேலும், 'கிழக்கும் மேற்கும் சந்திக்கவே சந்திக்காது' என்று திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். இந்த இடத்தில் தான் கீழ் நாட்டில் பிறந்திருந்தும் அவரது ஜோதிடத் திறன் அவரைக் கைவிடுகிறது—ரஷியா சமீபத்தில் உலக சோதிடர்களின் வாயில் மண்ணை வாரிப்போட்டது போல—. கிழக்கும் மேற்கும் சந்திக்காமலேயா ஆறாயிரம் மைலுக்கப்பாலிருந்து 'கும்பினியான் இந்தியாவுக்கு வந்து ராஜ்யம் பிடிச்சான் ?'

ஆனால் கிப்ளிங்கின் சோதிடத்திலும் சிறிது உண்மையிருக்கத்தான் செய்கிறது. எப்படியெனில், மேனாட்டாருக்கும் நமக்குமுள்ள குண பேதங்கள் மட்டும் (நடையுடை பாவனை—நம்முடையதுதான்—தான் எற்கனவே தலை கீழாய் கால் மேலாய் மாறிவிட்டிருக்கின்றதே !) ஒருநாளும்—சந்திர சூரியர் திசை மாறிடினும் மாறப்போவதில்லை. இதற்கு சில

உதாரணங்கள் காண்பிப்போம். அதாவது இனிமேல்தான்—ஆசிரியரும் நீங்களும், தலைப்பை ஏதோ போட்டுவிட்டு விஷயத்தை ஏதோ வரிந்து தள்ளுகிறாரே !...ஆசாமி ஒருவேளை முற்றும் குணமாகாத கீழ்ப்பாக்கம் வாசியா யிருக்குமோ என்று நினைத்து விடாதிருக்க வேண்டியும், இது ஆசிரியரின் குப்பைக் கூடை 'விஸிட்' பண்ணுதிருக்க வேண்டியும்—'நம்மவர்களை'ப்பற்றி எழுத ஆரம்பிக்கிறேன்.

மேனாட்டான் எதற்கும் தன் கையையே எதிர்பார்ப்பான். தன் இனத்தாரையே நோக்குவான். அவன் செஸ்டர்டனையோ, ஷாவையோ, வெல்ஸையோ பற்றி நாம் சொல்லித் தெரிந்து கொள்வதில்லை. ஆனால் நம் நாட்டானோ...?! எட்மண்ட்காஸ் எடுத்துக்காட்டா விட்டால் நமக்கு சரோஜினியின் பாடல்களின் பெருமை விளங்காது. ஆங்கிலேய அமெரிக்கா கவிதா ரஸிகர்கள் நம் கோகிலத்தைக் கொண்டாடா விட்டால் நமக்கு அவளின் சிறப்பு தெரியப்போவதில்லை. சில வருடங்கட்கு முன் தொடுக்கப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்ய கவிதைக் கொத்தில் சரோஜினியின் 'சாம்ராஜ்யப் பாடல்'களும் இடம் பெற்றன. (ஆனால் அக் காலத்திலோ அவள் அச் சாம்ராஜ்யத்தாராலேயே சிறை பிடிக்கப்பட்டிருந்தாள்) தாகூரின் கவிதாப் பெருமையை தாமஸ்ஸூம் ஈட்ஸூம் எடுத்துக்காட்டா விட்டால் அவர் நோபல் பரிசு பெறுவதேது? அவருடைய கவிதைகளில் ஒரு வரியும் படிக்காத நீரும் நானும், "ததாகவீநாம் கணநப் பிரசங்கே கனிஷ்டிகா நிஷ்டதி கவி ரவீந்திரஹ" என்று கொம்மாள மடிப்பதும் அவரது பெருமையைப் பற்றி வானமளாவப் புகழ்வதும் நடக்கிற காரியமா?

சர். சி. வி. ராமனின் பௌதிக சாஸ்திர வன்மையைத் தான் உண்மையாக அறிந்தவர் நீரா, நானா, அவனா? நக்கும் உண்மையைப் பார்க்கலாம்?

ஸ்ரீ பாஷ்யத்தையும் ஸ்ரீமத் பகவத் கீதையையும் பற்றி பெயரளவில் மட்டுமே தெரிந்தவனெல்லாம்—சில சமயங்களில் அது கூட தெரியாதவனும்— ஸ்பென்ஸர், பெர்க்ஸன் ஆகியவர்களின் வேதாந்தத்தைப் பற்றி வானமளாவப் பேசுகிறான். இன்னுஞ் சில கற்றறி மேதாவிகளோ காளிதாஸனின் 'சாகுந்தலத்'தை மிகவும் புகழ்ந்து அம் மகா கவியை 'இந்தியாவின் ஷேக்ஸ்பியர்' என்று வர்ணிக்கிறார்கள். எங்கே ஒரு ஐரோப்பியனாவது (அல்லது இந்தியனாவது) மில்டனை 'ஐரோப்பாவின் வால்மீகி' என்று சொல்லுகிறானா பாருங்கள்.

இலக்கியத்திற்கு மேற்காவது கிழக்காவது கிடையாதென்பதும் எந்நாட்டு இலக்கியமா யிருந்தாலும், அது உயர்ந்ததா யிருந்தால் சகலரும் கற்றுக் கொள்ளலாம் என்பது சரியான வாதமே. ஆனால் முதலில் நம் நாட்டு இலக்கியங்களில் அல்லவா தேர்ச்சி பெறவேண்டும்? பிற நாட்டு இலக்கியக் கலைகளில் தேர்ச்சி பெற்று அதில் வல்லுநர்களாய் விளங்கும் நம் மேதாவிகளின் திறமை மெச்சத் தக்கதுதான். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் தம் இலக்கியக் கலைகளை தங்களுக்கே தெரியாம லடித்துக்கொண்டிருக்கிறார்களே! அவைகளின் அருமையை மேனாட்டார் அறிவதெங்



கானோ! எங்கே ஒரு மேனாட்டானாவது முதலில் தன் இலக்கியங்களைக் கற்றுணராது பிற நாட்டு இலக்கியங்களை கற்கத் தொடங்குகிறானா பாருங்கள்.

சரி, அது போகட்டும், நம் நடையுடை பாவனைகளைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்? 104, 105 டிகிரியுமாக வெயில் எரிக்கும் சித்திரை மாதத்திலும் கீழே இரண்டு ட்ரௌஸர், மேலே ஒரு பனியன், ஷர்ட், வெயிஸ்ட் கோட், டபிள் பிரஸ்ட் கோட், கழுத்துக்கு ஒரு சுருக்கு (டைதான்) காலுக்கு காற்று சிறிதும் புகாவகையில் மேஜோடு, பூட்ஸ் முதலியவைகளை பகல் முழுவதும் அணிந்து மினுக்கிக்கொண்டு அவஸ்தைப்படும் நம் 'வான் கோழி'களைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்? எங்கே, ஒரு மேனாட்டானாவது அவனது நாட்டிலாயினுஞ் சரி, இந் நாட்டிலாயினுஞ் சரி நம்மவர்களைப்போல உடை யணிகிறானா பாருங்கள். அப்படித் தப்பித் தவறி ஒருவன் நம்மைப்போல (ஒரு வேளை சுகாதாரத்தையும் சௌகர்யத்தையும் கருதி) உடை யணிந்துவிட்டால் அவனைப் பிரமாதமாக புகழ்கிறோம். ஒரு காலத்தில் நம்மவர்கள் தம் இந்திய உடைகளுடன் அரசாங்க உத்யோகஸ்தர்களை—முக்கியமாக, ஐரோப்பியர்களை-பேட்டி காண்பது மரியாதையல்ல, அகௌரவம் என்ற மனப்பான்மை மக்களிடம் பதிந்து கிடந்தது. முன்பொரு நாள் மகாத்மா தம் சொந்த உடையில் ராஜப்பிரதிநிதியைப் பேட்டி கண்டதற்கு 'வின்னி' (வின்ஸ்டன் சர்ச்சில்) 'அரை நிர்வாணப் பக்கிரி' என்று காடியாய்க் கத்தினார். அவருக்கு அடி வயிறு பற்றிக்கொண்டு எரிந்தது. ஆயினும் காலம் மாறிவருகிறது. நம்மவர்களின் இம் மோகமும் மறைந்து வருகிறது. அதற்குக் காரணம் நம் காங்கிரஸ் மஹா சபையே.

"மண்ணைத்தான் பொன்னைத்தான் பறிகொடுத்தோ
மென்றெண்ண வேண்டாம்—மாநிலத்தீர்
மண்டையையும் பறிகொடுத்தோம்
பறிகொடுத்தோமே! நாம் பாதவித்தோமே."

கெட்டிலில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. அதன் மூடி மேலே எழும்பி எழும்பி (நீராவியின் சேஷ்டையினால்) விழுந்தது. அதைக்கொண்டு நீராவி என்ஜினைக் கண்டுபிடித்தானாம் ஜேம்ஸ் வாட். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்ட சமாச்சாரம்! நம் சிறுவர்களும் இம்மாதிரி ஒன்றும் கண்டு பிடிக்காததில் ஆச்சரியமொன்றுமில்லை. நம் தாய்மார்கள்தான் அவர்களை அடுப்பண்டையிலேயே விடுவதில்லையே! கிற்க, சுதந்திரத்திற்காகவும், ஆண்களுடன் சரிசமத்துவத்திற்காகவும் பாடுபடும் சகோதரிகளே! நீங்களுந்தான் மண்டையில் மயிர் முளைத்த நாளாய் அடுப்பூதி வருகிறீர்களே! இம்மாதிரி நீங்கள் எதையாவது கண்டு பிடித்ததுண்டோ? அல்லது அவ்வாறு சாதித்த ஒரு இந்திய ஆராய்ச்சியாளனையாவது உங்களுக்குத் தெரியுமா? என்ன, நீராவியில் இட்டிலி வேகவைக்கும் முறையைக் கண்டுபிடித்தவரை மறந்தே விட்டீர்களோ? அதுதான் போகிறது, தோசையையும், அதற்கென ஒரு மிளகாய்ப் பொடி கல்லெண்ணையையும் கண்டுபிடித்த நிபுணரைப்பற்றி நீங்கள் சிறிதா

வது சிந்தித்ததுண்டோ? அரிசியையும் உளுந்தையும் அரைத்து கலந்தால் தோசை சுடலாம் என்பதைக் கண்டுபிடிக்க என்னென்ன ஆராய்ச்சி செய்திருப்பார்? எத்தனை இரவு தூக்கமின்றி கஷ்டப்பட்டிருப்பார்? கொள்ளையும் மொச்சைக் கொட்டையையும், உளுந்தையும் ஊமத்தங்காயையும், எள்ளையும் வேப்பங்கொட்டையையும் மாற்றி மாற்றிப் போட்டு அரைத்தல்லவா பார்த்திருக்க வேண்டும்? அவரைப்பற்றி சிறிதாவது சிந்திக்கா திருப்பது உங்களுக்கு தகுமா தருமந்தானா?

நிற்க, கடைசியாக நம்மவர்கள் எதிரி வாழ்ந்தால் எட்டு நாளைக்கு பட்டினி கிடப்பார்கள். தனக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை. தன் எதிரிக்கு இரு கண்ணும் அவியவேண்டும் என்னும் கொள்கையை யுடையவர்கள். சாக்ஷாத் மத்சரத்தின் அவதார மகா புருஷர்கள். மேனாட்டு பிரபல எழுத்தாளன் கார்லைலை (Carlile)ப் பற்றிய ஒரு கதையுண்டு. அதாவது, அவனது வீட்டுக்கடுத்த வீட்டில் ஒரு சேவல் இருந்ததாம். அதிகாலையில் கோழி கூவுமே என்று நினைத்தாலே அவனுக்கு இராவெல்லாம் தூக்கம் பிடிக்காதாம். ஆனால் அந்தச் சேவலோ இராவெல்லாம் கூவிக் கொண்டே யிருக்குமாம். ஒருநாள் அவன் இதைப்பற்றி அதன் சொந்தக்காரனுக்கு புகார் செய்தான். அவனோ இவன் கூற்றை மறுத்து தன் சேவல் அதிகாலையில் மட்டுமே கூவுவது வழக்கமென்று எடுத்துரைத்தான். அப்போதுதான் அவனுக்கு விளங்கிற்றாம் உண்மை. அதாவது அவனது பிரமையினால் அவனுக்கும் இராவெல்லாம் சேவல் கூவுவதாக கேட்டுக் கொண்டிருந்ததே தவிர சேவல் கூவவேயில்லை. இந்தச் சேவலைப் போலவே எங்கள் ஊர் கோவிலிலும் ஒரு மணி உண்டு. அதை சாமத்திற் கொரு தரம் காவற்காரன் அடிப்பான். ஊரிலுள்ளோரை யெல்லாம் அந்தச் சத்தம் எழுப்பிவிடும். காளடைவில் ஊராரும் கார்லைலின் நிலையை யடைந்தார்கள். இராவெல்லாம் தூங்குவதேயில்லை. இந்தத் தொல்லை ஒழியாதா வென்றே பலரும் ஏங்கினர். ஒருநாள் அதிர்ஷ்டவசமாக ஒரு வீர ஆராய்ச்சியாளன் அந்த மணியை இரவில் அடிக்கவொட்டாமல் செய்துவிட்டான். ஆனால் மணி மட்டும் இருந்தது. அவன் தானாகவே வெளிப்படவில்லை. ஆனால் மறுநாள் ஊராரெல்லாரும் சேர்ந்து அவனைப் பிடித்துவிட்டார்கள். ஆனால் அவனுக்கு ஏதாவது மரியாதை செய்தார்களென்று நினைக்கிறீர்களா? அதுதானே யில்லை. அதற்கு மாறாக இந்த வாழைப் பழ வீரர்களும், வெண்ணெய் வெட்டிச் சிப்பாய்களும், புல் தடுக்கி வஸ்தாத்களும் அவனைக் கட்டி வைத்து கண்ணிரண்டையும் தவிர்த்து உரி உரியென்று உரித்து விட்டார்கள். கடைசியில தங்கள் செய்கைக்கு சமாதானமாக "அவன் மணியின் நாக்கைத் திருடிவிட்டான்!" என்று சமாதானம் வேறு கூறிக் கொண்டார்கள். வெட்கக்கேட்டைப் பார்த்தீர்களல்லவா? .........கடைசியாக நான் இதை எழுதியதற்காக கோபம் கொள்வதைப் பார்க்கிலும் நானும் உங்களில் ஒருவனே என்று நினைத்து சினம் ஆறுவதே நல்லது.



# உடற் பயிற்சியும் அதன் பயன்களும்

—(0)—

(ஜி. கே. ராமஸ்வாமி.)

"நாம் அடிமை. நாம் தோன்றிய இந்தியநாடு அடிமை. நம் இந்தியத் தாயின் கை கால்களில் பிணைக்கப்பட்டிருப்பவை, அடிமைச் சங்கிலிகள்" இந்தச் சொற்றொடர்களை அடிக்கடி பயன்படுத்தி வந்தவர் நம் கவி சுப்பிரமணிய பாரதியாரே. அவர் கூறிப் போந்ததேபோல் அன்னியரால் ஆட்சி செய்யப்பட்டு பெரிதும் உழன்றுவரும் இவ்வடிமை இந்தியாவை விடுவிக்கும் மாபெரும் பொறுப்பு நம்மைச் சார்ந்ததே. ஆதலின் நமது விடுதலைக்காகப் போராடும் நம்மவரது உடலமைப்பு எவ்வாறிருத்தல் வேண்டும்? மகத்தாகிய போராட்டத்தி லிறங்கும் நம் வீரமும் உறுதிப்பாடும் எவ்விதமிருத்தல் நலம்? இவைகளை நாம் சற்று ஊன்றிப் பார்த்தல் வேண்டும்.

"வீரம்—மானம் இல்லாத மக்களைப் பெற்ற நாடு எப்பொழுதும் அடிமை நாடாக இருந்து உழலவேண்டியதுதான்" எனக் கூறினார் ஐரோப்பாவை முக்கால் பங்கு வென்ற மகா வீரன் நெப்போலியன். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வீரம் வேண்டுவது இன்றியமையாததாகும். அப்பேர்க் கொத்தவனின் உடலமைப்பு மிகவும் வலிமையுள்ளதாகத்தான் இருக்கவேண்டும். நன்றாக உடற்பயிற்சி செய்வதால் மிக வலிமை பெற்றும், வீரம் பொருந்தியும் விளங்க முடியும் என்பது வெளிப்படை. சுவரை வைத்துக்கொண் டல்லவோ ஓவியம் தீட்ட முடியும்! எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ளும் வாழ்க்கையாகிய ஓவியத்தை கட்டுமஸ்தான நம் உடல் என்னும் சுவரின்மே லல்லவோ வரைதல் வேண்டும்?

இனி உடற்பயிற்சி செய்வதற்குரிய காலம் யாதென்பதை ஆராய்வதற்கு முன் நம் பாரதியாரின் 'பாப்பாப் பாட்டில்' வரும் சில அடிகளை நோக்குங்கள்:

"காலையி லெழுந்த வுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
பழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா".

என்று கூறி யிருக்கின்றனர். ஆதலின் தேகப்பயிற்சிக்குரிய காலம் மாலையே எனத் தெரிகிறதன்றோ? மாலைக் கதிரவனின் கிரணங்கள் நம் தேகத்தில் தோய்வதால் நம்மைப் பற்றின வியாதிகள் நீங்கி விடுகின்றன. மேலும்

மேல்நாட்டு ஆராய்ச்சி நிபுணர்களும் மாலைச் சூரியனின் கிரணங்களில் தொத்து வியாதிகளை அறவே யொழிக்கும் ஒருவித சக்தி கலந்த கிரணங்கள் (அல்ட்ரா வயலெட் கிரணங்கள்) அதிகப்படியாக இருக்கின்றன என்று கூறுகின்றார்கள். படிக்கும் நேரத்தில் படிக்கவும், விளையாடும் நேரத்தில் விளையாடவும் நன்றாகப் பழக்கப்படுத்திக் கொள்ளுதல்வேண்டும். அப்படிக்கின்றி அன்னியக் கல்வியிலும், அன்னிய நாகரீகத்திலும் அமிழ்ந்து கிடக்கும் சில பிள்ளைகள் சதா ஏடும் கையாகவும், கண்ணுங் கருத்தும் படிப்பின்மேலே பதிந்து கிடக்கவும் இருப்பதைக் காணலாம். கல்வியின் முன்னேற்றத்திற்கு உடல் பயிற்சி முக்கிய மென்பதை அப்பிள்ளைகள் அறிவதில்லை. பாவம்! ஆண்டு முடிவில் அந்தப் பிள்ளைகளில் சிலர் தேர்தவில் தவறிப் பரிதவிப்பதும் உண்டு. சிறுவர் முதற்கொண்டு வயோதிகர் வரை எல்லோரும் உடற் பயிற்சி அவசியம் எடுத்துக்கொண்டே தீர வேண்டுமென நம் நாட்டு மாபெருந் தலைவர்கள் அடிக்கடி வற்புறுத்தி வருதலை தவறாது பத்திரிகை படிக்கும் நண்பர்கள் அறிவர். ஆதலாலன்றோ பாரதியாரும்,

“சின்னஞ்சிறு குருவி போலே—நீ
பறந்து திரிந்துவா பாப்பா!”

என்று சிறுவர்களுக்குத் தம் பாட்டின் மூலம் தெரியக் கூறி யிருக்கின்றார்? செல்வம் பெருத்த சீமான்களில் சிலர் சதா உண்டு, உறங்கி, உருவம் பெருத்துத் தோன்றுவது தேகப்பயிற்சி யின்மையே! வழியில் செல்லும் நம் சகோதரரில் பலர் இளைத்த உடலுடனும் வளைந்த தோள்களுடனும், கூனிய முதுகுடனும் தோற்றமளிப்பதும் உடற்பயிற்சி செய்யாமையே என்று துணிந்து கூறலாம்.

உடற்பயிற்சி செய்யும் விதம் அநேக மிருக்கின்றன. தேக வலிமை பெறும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் தேகப் பயிற்சிக்காக தற்கால நாகரீகப் பிரியர் சிலர் வீணாக பொருளைச் செலவிட்டுத் திரிதல் மிக வருந்தத்தக்கதே! ஆனால் அப்பேர்க்கொத்த விளையாட்டுகளில் பங்கு கொள்ளக் கூடாதா வெனக் கேட்பின் சுய ஆட்சியோடு பொருளாதாரத்தில் மேம்பட்டிருக்கும் நாடுகளுக்கு அவை தகுமே யல்லாது நம் இந்தியாவைப் போன்ற அடிமை நாடுகளுக்கு ஒரு போழ்தும் ஏற்கமாட்டாது. அடிமைகளாகிய நாம் பொருளாதாரத்தைப் பொறுத்த வரையில் மிகச் சிக்கனமா யிருப்பது மிகமிக இன்றி யமையாததாகும். மேலும் நமக்கு சிறிதேனும் பொருள் செலவின்றி பல முறையில் வலிவைக் கொடுக்கும் உடற் பயிற்சி முறைகள் இருக்கின்றன. சூரிய நமஸ்காரம், தண்டால், பஸ்கி போன்றவைகளை நாம் ஏன் கையாளக் கூடாது? தண்ணீரில் நீந்துதல் மிகவும் நல்ல முறையெனப் பலர் கூறுகின்றனர். நம்முடல் தூய்மை பெறுவதுடன் நலல உறுதியும் நமக்கு நீச்சத்தால் கிடைக்கக்கூடும். சரியாக நீந்தக் கற்றுக் கொள்ளாதவர்கள் சற்று தூரம் நல்ல காற்றோட்டமுள்ள இடங்களில் உலவி வருதலும் நலமெனக் கூறத்தகும். இதைக் கருதித்தான் மகாத்மா காந்தியடிகளும் காலை மாலை உலவி வருகிறார் போலும்.

உடற் பயிற்சியை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.



(1) மனித உடலின் கீழ் அவயவங்களாகிய மார்பு, இருதயம், கை, கால் முதலியவற்றுக்குப் பயிற்சி யளித்தல்,

(2) தேகத்தின் மேலவயவங்களுக்குள் மிக முக்கியமான மூளைக்கு பயிற்சி யளித்தல், ஆகிய இவைகளே இரண்டு வகைகளாகும். (Physical Exercise & Mental Exercise.)

அதிக வேலையால், எல்லா அவ்யவங்களுக்கும் ஓய்வு வேண்டுவதே போல் நம் மூளைக்கும் ஓய்வு அவசியம். அப்படிக்கின்றி சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைச் சதா படிக்கும்படி தூண்டுவது மிக மோசமான செய்கையாகும். இதனால் சிலருக்கு மூளை குழம்புவதும் உண்டு.

தேகப் பயிற்சியால் நாம் எய்தும் பயன்கள் அநேகம். அவற்றுள் முக்கியமான சிலவற்றைக் கீழே நோக்கலாம்.

(1) உடர்பயிற்சி செய்வதால் நம்முடலின் ஒவ்வொரு சதையும் வேலை செய்கின்றது. அதனால் மிகுந்த வியர்வை நீர் வெளிப்படுகின்றது; வியர்வை வருதலால் நம்முடல் தூய்மை பெறுவதுடன் தடைபடாக் குருதியோட்டம் ஏற்படுகின்றது.

(2) மார்புக்கூடு நன்றாக உரம்பெற்று விரிவடைகின்றது.

(3) இருதயம் அதன் வேலையைச் செவ்வனே சீர்கேடின்றி செய்ய இயலும் ; ஆதலால் ஒவ்வொரு உறுப்பும் திறம்பட வேலை செய்ய ஏதுவாகின்றது.

(4) மூளை புதுமை பெறுவதுடன் நமது ஞாபக சக்தியும் கற்பனா சக்தியும் விருத்தி யடைகின்றன.

(5) உடற் பயிற்சி செய்யுங்கால் நாம் எல்லா கவலைகளையும் ஒழித்து மன வூக்கத்துடன் திகழ்கின்றோம்.

தேகப்பயிற்சி செய்வதால் நாம் அடையும் வேறு சில பயன்களுமுள. நமக்குள் ஒற்றுமை ஏற்படுகின்றது. கெட்ட பழக்கங்களாகிய புகை பிடித்தல், வீண் வம்பு பேசுதல், சச்சரவிடுதல் இவைகள் ஒருவாறு நீங்கப் பெறுகிறோம். இவைகளைத் தெரிந்துதான் நம் பண்டைத் தமிழர்களும், செண்டுகளை ஆடும்போழ்து, நிலைச் செண்டு, பரிச்செண்டு ஆகிய இந்த இரண்டு வகையாப் பிரித்து களித்தனர் போலும்!

நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு கருமமும் தடையின்றி நிறைவேற்றுவதற்கு நமக்கு மனோவன்மை வேண்டுவ தவசியம். மனோவன்மைக்கு ஆதாரமா யிருப்பது தேக வலிமைதான். தேக வலிமைக்கு உடற்பயிற்சி வேண்டுமென நாம் முன்னே கண்டோம். எவ்விதத்திலும் தேகப்பயிற்சி வேண்டப் படுகின்றதன்றோ ? எனவே நாமும் தேகப்பயிற்சியால் வலிமை மிகுந்து, வீரம் ஆர்ந்திருந்த நம் முன்னோர்களைப் போல் உலகின் கண்ணே நிமிர்ந்து நிற்போமாக !

---

# ★ கௌரியின் முடிவு ★

(சோ. கணபதி.)

"மண்பிறந்த மறிகடல் சூழ்
உலகத்தில் வாழ்பவரில்
பெண் பிறந்தார் யான்பட்ட
பெருந்துயரம் யார்பட்டார்."

வாழ்க்கையிலே அவளுடைய கடைசி நாள் அது. அவள் இந்த உலகத்தில் வசிப்பவள்தான்; எனினும் அவளுக்கும் உலக விவகாரங்களுக்கும் இனி யாதொரு சம்பந்தமும் கிடையாது. நறுமணம் வீசும் புஷ்பங்கள், குங்குமம், மஞ்சள், நல்ல ஆடையாபரணங்கள் எதையும் அவள் இனி கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது. 'பாவிப் பெண்ணே! உன் கரும வினையை நினைத்து நீ சாகும்வரையில் மூலையில் உட்கார்ந்து உருகிப்போ!' என்று சொல்லிவிட்டது ஹிந்து சமூகம். ஏனென்றால் கௌரி ஓர் விதவை.

பென்ஷன் வாங்கவேண்டிய வயதில் தாரம் தவறிய தனவந்த னொருவனுக்கு பதின்மூன்று வயதே நிரம்பப்பெற்ற கௌரியின் கண்ணைக்கட்டி கல்யாணம் செய்தான் பாவி கௌரியின் தந்தை. கல்யாண தினத்தன்று கௌரியின் ஹிருதயம் சுக்கு நூறாகச் சிதறுவதுபோல் இருந்ததை அவன் அறியமாட்டான். தன் மகளின் நன்மையைப் பற்றியாவது, அவளின் எதிர்கால வாழ்வைப் பற்றியாவது சிறிதளவும் சிந்தனை செய்தானில்லை. பணம் ஒன்றையே பிரதானமாகக் கருதினான். மணம் நடந்த அடுத்த எட்டாம் மாதத்தில் விதவையாகி வீட்டுக்கு வந்தாள் கௌரி. கணவனை இழந்ததற்கு, சாஸ்திரப்படி கௌரிக்கு தண்டனை விதிக்கப்பட்டது. கௌரியின் நிர்மலமான வதனம் வாடிவிட்டது. உலகில் இவளைவிட துர்ப்பாக்கியசாலி இல்லை என்று பிறர் சொல்லும் வார்த்தையைக் கேட்டு மனம் இடிந்தான் தகப்பன். விளையாட்டைப்போல் அவளின் விதவைப் பருவம் பன்னிரண்டு மாதங்களைக் கடந்து சென்றது.

மாதவன், கௌரியின் சகோதரன். சுதந்திர தாகத்தால் தவிப்பவன். தேச ஆசைகொண்டு விடுதலை வெறிக்கொண்டு தேசத்திற்கு உழைத்தான். சிறை சென்றான். ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டான். அதனாலென்ன? அவனையும், "சண்டாளன்! துரோகி! இனி என் முகத்தில் விழிக்காதே!" என்று கூவி நடாரென்று கதவைச் சாத்தினான் அந்தப் பாவித் தந்தை.

திடுக்கிட்டு வெளியே நின்றான் மாதவன். தன் தகப்பனின் மனப்போக்கை எண்ணிக் கண்ணீர்விட்டான். சிறிது நேரத்திற்கெல்லாம் கதவு மெல்ல திறக்கப்பட்டது. ஆவலுடன் ஓடிவந்தாள் கௌரி. "அண்ணா!



உள்ளே வா!" என்று கையைப் பிடித்து இழுத்து ரேழியில் நிறுத்தினாள். அவள் கண்களில் நீர்த்துளிகள் தத்தளித்தன. "அண்ணா! அப்பா என் வாழ்வில் கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டார்; என் வாழ்வு தொலைந்துவிட்டது; என் இன்பம் கெட்டது. பாழும் சமூகம் புயற்காற்றாகவும், பணப்பேய் ஊழிக்காற்றாகவும் வந்து என் வாழ்வை ஆட்டி அலைத்துவிட்டது; இனி இவ் வுலகில் எனக்கு என்ன வாழ்க்கை இருக்கின்றது. நீயோ நம் தேசத்தின் சுதந்திரமே பறிபோய் விட்டதென்று மாபெருங் கூட்டத்திலெல்லாம் ஓலமிடுகின்றாய்; என்னைப்போன்ற ஒரு தனிப்பட்ட ஜீவனின் சுயேச்சையைத் தடங்கலின்றி அனுபவிக்கச் செய்ய முடியாதவனாக நீ தேசத்திற்கு உழைக்கின்றாய்" என்று கதறினாள்.

மாதவனின் மனம் குமுறியது. தங்கையின் மனக் கொதிப்பிற்கேற்ற வார்த்தைகள் சொல்ல அவனால் முடியவில்லை. கௌரியின் கடந்த கால நிகழ்ச்சிகளில் அவன் மனம் ஊடுருவிச் சென்றது. அவனது ஹிருதயத்தில் தங்கையின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையின் இன்ப துன்பம் அவன் மனக்கண் முன் தோன்றியது. சுவரைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுதவண்ணம் அசைவற்று நின்றான்.

பெற்ற மனம் பித்து. மகனின் அழுகுரல் கேட்டு ரேழிக்கு ஓடிவந்தாள் தாய். இருவருடைய நிலைமையையும் நேரில் பார்த்த அவளால் சகிக்க முடியவில்லை. மாதவனை உள்ளே அழைத்துச் சென்று இலையில் அன்னமிட்டாள் அன்னை. பின்பு மாதவனை நோக்கி, "அப்பா மாதவா! எப்பொழுது தொட்டு தாலி கட்டிய கணவன் இறந்தானோ அன்றே உன் தங்கை விதவைதானே. நம் சாதிக்குத்தான் இரக்கமில்லை. கருணை என்பதும் இல்லை. பழைய நாள் பிடியை அது கைவிட மனமில்லாமல் இரும்பினும் கடினமாக இருக்கின்றது. அவள் அதிர்ஷ்டம் அப்படி. பாழும் சமூகம் சம்பிரதாயத்தை விடாது. அதற்காக நீ யொருவன் கவலைப்பட்டு என் செய்வது? காலப்போக்கினால் எல்லாம் அவளுக்கு ஆறிவிடும். நீ வருந்தாதே" என்று அவனைத் தேற்றினாள்.

தாயின் வார்த்தை மாதவன் மனதில் ஈட்டிபோல் பாய்ந்தது. சாப்பாட்டிலிருந்து கையை உதறிக்கொண்டு எழுந்தான். தாய்க்குத் தெரியாமல் தங்கையை அழைத்து அவளின் வருங்கால வாழ்க்கையில் நன்மையடைய யோசனை யொன்றை அவளுக்கு தெளிவாக எடுத்துரைத்தான். கௌரியும் அதைத் தன் முழுமனத்துடன் ஒப்புக்கொண்டு தன் அண்ணனையே அதை நிறைவேற்றி வைக்குமாறு மன்றாடினாள்.

சில நாட்கள் சென்றன. ஓர்நாள் இரவு நடுநிசி யிருக்கும். ஊரெல்லாம் அடங்கிவிட்டது. வானில் கருமேகங்கள் கவலையற்று ஊர்ந்துகொண்டிருந்தன. சந்திரன் அதற்கு இடை இடையே தோன்றி ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்தான். அந்த ஒளியின் உதவிகொண்டு மாதவன் யாரும் அறியா வண்ணம் தங்கையை அழைத்துக்கொண்டு வந்து ரயிலேறினான். மறுதினம் கிழக்கு வெளுக்கும் சமயம் சென்னையை வந்தடைந்தார்கள் அண்ணனும் தங்கையும்.

மாதவன் கிறிஸ்தவக் கல்லூரியில் வாசிக்கும்போது ஸ்ரீ ஸாரதா வித்தியாலயத்தைப் பற்றி நன்கு தெரிந்திருந்தான். நேரே கௌரியை வித்தியாலயத்தின் சிருஷ்டி கர்த்தாவிடம் அழைத்துச் சென்று தன் தங்கையின் விதியை கண்ணில் நீர்ததும்ப எடுத்துரைத்தான். அதைக்கேட்ட வித்தியாலய அன்னையும் மனமுடைந்த நிர்ப்பாக்கியவதி மாதவன் தங்கைக்கு வித்தியாலயத்தின் நிழலில் ஆதரவளித்து ஏற்றுக்கொண்டார். கௌரியின் உள்ளமும் மலர்ந்தது. மாதவன் மனம் மகிழ்ந்து, "அம்மா, பாரத தேவி! ஆதரவற்ற அபலை கௌரியைக் காப்பாற்றி உய்வித்தருள வேண்டும்" என்று மனதில் பிரார்த்தித்துக்கொண்டு தங்கையிடம் விடைபெற்றுக்கொண்டு வித்தியாலயத்தை விட்டு வெளியேறினான்.

கௌரி காணாமற்போன செய்தி தெரிந்து தாயின் நெஞ்சம் புண்பட்டது. சந்திகளிலும், திண்ணைகளிலும் வம்பளக்கும் வீண் மனிதர்கள் கௌரி பெண் தன்மை கெட்டுவிட்டாளென்று பழித்துரையாடினார்கள். அதனால் அப் பாபித் தந்தைக்கும் பித்து பிடித்தது. தங்கை ஸ்ரீ ஸாரதா வித்தியாலயத்தில் சேர்க்கப்பட்டாள் என்ற மாதவன் கடிதமும் மறுநாள் அவன் தந்தையை வந்தடைந்தது.

அப்பொழுது உப்பு சத்தியாக்கிரஹ இயக்கம் வெகு மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அதில் சேர்ந்து வேதாரண்ய குரு க்ஷேத்திரத்தில் சுதந்திரக் கொடியை தாழாது பிடித்து நின்றான் மாதவன். உடனே அதிகார வர்க்கம் அவனுக்கு மூன்று வருஷங் கடுங்காவல் தண்டனையை அளித்தது. அதை மாதவன் மகிழ்ச்சியோடு ஏற்றான். இவ் விஷயத்தை அடுத்த நாள் தினசரியில் கண்ட வித்தியாலய அன்னை மாதவன் தங்கையிடம் காட்டினார். அண்ணன் தாய்நாட்டுக்குச் சேவை செய்வதற்கு தான் சில காலம் இடையூறாய் இருந்ததை எண்ணி வருந்தினாள்.

தன் இரு செல்வங்களின் நிலைமையைக் கேட்ட தாய் படுத்த படுக்கையாய்விட்டாள். அன்று காலன் வரும் நாள். தன் புண்பட்ட இருதயத்திற்குச் சிறிதாவது ஆறுதலாக இருந்த தன் மனைவி தன்னை நிர்க்கதியாக விட்டு விட்டுப் போகப் போகிறாள் என்பதை அறிந்த அப் பாபித் தந்தையின் கண்களில் நீர் ததும்பிக் கீழே சிந்தியது.



# பாரதத்தாயின் மாண்பு

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

இறைவனது இன்னருட் படைப்பாகிய இந் நிலவுலகிலே, வளங்கள் மிகுந்த தேசத்தாய்களாக விளங்குவோர் மிகப் பலர். ஒவ்வொரு தேச மாதாவுக்கும் ஒவ்வொருவகைத் தனிச்சிறப்பு உண்டு. ஒவ்வொரு நாட்டன்னையும், சிற்சில செல்வங்களைத் தனக்கே உரிய தனிப் பெருஞ் செல்வங்களாகக் கொண்டு விளங்குகிறாள். அவ் வந்நாட்டு அன்னையின் மக்கள், தங்களது தாயின் செல்வங்களைப் பல வழிகளிலும் வளர்க்கும் முயற்சியில் இடையறாது ஈடுபட்டு உழைக்கின்றனர். ஆயினும், மானிட வாழ்வின் உன்னத லட்சியத்தை இனிது நிறைவேற்றிக்கொள்ளப் பெரிதும் உதவக்கூடிய எல்லாவகைப்பட்ட செல்வங்களையும், இறைவனது இன்னருட் படைப்பின் தனிப்பெருஞ் சிறப்பை ஆழ்ந்து சிந்திப்போர்க்கு இனிது உணர்த்துவனவும் இலௌகிகத் துறையிலும் ஆன்ம முன்னேற்றத் துறையிலும் தனது மக்களைச் சிறந்து வாழ முயல என்றும் தூண்டி நிற்பனவுமாகிய எல்லா வகைப்பட்ட சீரிய செல்வங்களையும் தன்னிடம் ஒருங்கே கொண்டு இன்னும் ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்புடன் விளங்கும் தேச மாதா, நமது பாரததேவி ஒருத்தியே ஆவள். இன்று, நமது பாரததேச பக்தர்களின் மகா மந்திரமாக விளங்கும் 'வந்தேமாதரம்' எனும் சொல்லை, நமது உள்ளம் சிந்திக்கும் ஒவ்வொரு கணத்திலும்—நாக்கு உச்சரிக்கும் ஒவ்வொரு முறையிலும்—நமது வீர பாரதத்தாயின் சீரிய செல்வங்கள் யாவும் நமது மனக்கண்முன் தோன்றி, நம்மை ஆனந்தக்கடலுள் ஆழ்த்தி விடுகின்றன. கீர்த்தி மிகுந்த கதாசிரியராகிய பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர், வங்காளி மொழியில் இயற்றி யிருக்கும் "ஸுஜலாம், ஸுபலாம், மலயஜ சீதலாம்"—என்று தொடங்கும் சிறந்த ஜாதீய கீதத்திலே, நமது பாரதத்தாயின் சிறப்பியல்புகள் பலவும் அற்புதமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த "வந்தே மாதர" தேசிய கீதத்தை, நமது தேசியக்கவி யரசராகிய சுப்பிரமணிய பாரதியாரவர்கள், "இனிய நீர்ப்பெருக்கினை! இன்கனி வளத்தினை!—தனி நறுமலயத் தண்கால் சிறப்பினை!—பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை!"—என்று தொடங்கும் நினைக்க இனிக்கும்—பாட இனிக்கும்—கேட்க இனிக்கும் அற்புதச் செந்தமிழ்ப் பூஞ்சோலையாக அமைத்தளித்திருக்கிறார்.

அத்தகைய சீரிய பாரதத்தாயின் செல்வமணி வயிற்றில் பிறந்து வளர்ந்து மகிழ்ந்து நிற்கும் சிறந்த பேறுபெற்ற பாரத சகோதரர்களே! எல்லோரும் வாருங்கள்! நாம், இன்று, நமது பாரதியார் படைத்து அளித்துள்ள அவ்வற்புதக் கவிதைப் பூஞ்சோலையிற் புகுந்து, அதனுள்

அமைந்துள்ள பூஞ்செடிகளில் மலர்ந்து கிடக்கும் மணமலர்களை மனமாகிய கையால் பறித்து, நமது பாரதத்தாயின் பாதமலர்களில் தூவியவாறு, அவ் வன்னையின் இணையற்ற தனிப்பெரும் புகழை நெஞ்சார நினைத்து—வாயாரப் போற்றிப் புகழ்ந்து—இன்புறத் தொடங்குவோம்.

“சல சலவென்ற இனிய ஒலி எழும்ப, இரு செவிகளுக்கும் பெருமகிழ்வளிக்கும் இன்பகீதம் பாடி, அலைத்துப் பரந்து சுழித்து விரைந்தோடிவரும் ஆறுகளாகிய தோழிகள் பலரைக் கொண்ட அன்னையே! உனக்கு வணக்கம்! பரந்து கிடக்கும் பசும் புலங்களில் பாய்ந்து—பலவகைப்பட்ட பயிர்களுக்கும் உயிரூட்டி வளர்த்து—பல வழிகளிலும் உனது மக்களாகிய எங்களுக்குப் பிழைப்பூட்டிச் சக்தியளித்து வளர்த்துவரும் சீரியநதித் தோழிகளைப் பெற்ற செல்வமணித்தாயே! உனக்கு வணக்கம்! தமது குளிர்ந்த புனித நறுநீரினால் தம்மைத் தீண்டினோரின் உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே தூய்மைப்படுத்தி, அவர்களது உள்ளத்திலே பலவகைப்பட்ட உன்னத எண்ணங்களையும் சிறந்த லட்சியங்களையும் எழுப்பி வளர்த்துவரும் புண்ணிய நதித்தோழிகள் பற்பலரைப் பெற்ற புனித பாரதத்தாயே! உனக்கு வணக்கம்!

தழைத்துச் செழித்து உயர்ந்து வளர்ந்து நிற்கும் பலவகைப்பட்ட மரங்களின் கிளைகளிலே, இரு விழிகளுக்கும் பெருமகிழ் வூட்டுவனவாகவும் கூர்ந்து நோக்குவாரின் நாக்கில் இன்பநீரைச் சுரந்து பெருகச் செய்விப்பனவாகவும் இளங்காற்றில் குலுங்கிக் கொண்டிருக்கும் செழுங்கனிகள் பலவற்றைக் கொண்டே செல்வவளம் மிகுந்த பாரதத்தாயே! உனக்கு வணக்கம்! தனக்கிணையாகத் தன்னையேயன்றி வேறு எதையும் கூற முடியாதவாறு தலைசிறந்த தனிப்பெருஞ் சிறப்புடன் தலைநிமிர்ந்து உயர்ந்து நிற்கும் மலயமா மலையினின்றும் எழுந்து, இடையில் குறுக்கிடும் பூஞ்சோலைகள் பலவற்றிலும் புகுந்து, விரிந்து மலர்ந்திருக்கும் மலர்களை அணைத்து, பிற எவராலும் பிரிக்க முடியாத அம் மலர்களின் நறு மணத்தைப் பிரித்து எடுத்து வாரிக்கொண்டு ஓடிவந்து மென்மையாக வீசிக்கொண்டிருக்கும் குளிர்ந்த தென்றற்காற்று, எமது அன்னையாகிய உன்னொருத்திக்கே உரிய தனிப்பெருஞ் செல்வமன்றோ? இரு விழிகளையும் பெரிதும் குளிர்விக்கக்கூடியனவாக எங்கு நோக்கினும் பச்சைப்பசேலென்று படர்ந்து வளர்ந்திருக்கும் பசும் புலங்கள் நிறைந்த பசுமை நிறக் காட்சியின் அற்புதத்தை, வெறும் சொற்களைக்கொண்டு வர்ணிக்கக்கூடிய சக்தி எங்களுக்கு இல்லையே! தாயே! பரந்து கிடக்கும் பசும் புலங்களின் வடிவில் நீ அளிக்கும் குளிர்ந்த காட்சி, எங்களது உள்ளத்திலே எத்தகைய ஆனந்தத்தையும் சாந்தியையும் பெருக்குகிறதென்பதை, எத்தகைய சொற்களைக்கொண்டு எவ்வண்ணம் உனக்கு உணர்த்த வல்லோம்?

எல்லையின்றிப் பரந்து கிடக்கும் நீலநெடுவான வீதியிலே, முல்லை மலர்ப்பந்தலின் கீழ் மோகன பவனிவரும் பூர்ண சந்திரன், தனது வெள்ளிக்கிரணங்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கும் நள்ளிரவுகள் பலவற்றில், நாங்கள் உனது உன்னத மாண்பை உன்னி உன்னி இன்ப வெறி மிகுந்து இன்னிசைபாடிப் பன்முறை மகிழ்ந்து நின்றதுண்டு. நீலவானக்



கடலிலே பாலொளிக் கதிர்களைப் பரப்பிச் சிரித்துலவும் வெண்மதியின் தண் கதிர்களைக் கண்ணுறுந்தோறும்—அக் கதிர்களின் குளிரொளி எமது உடலில் படுந்தோறும்—எங்களது உள்ளத்தினின்றும் பொங்கிப் பெருகிய ஆனந்தம் எத்தகையதென்பதை, வாய்விட்டுச் சொல்லக்கூடிய சக்தி எங்களுக்கு இல்லை. சிலைக்கரும்பு ஏந்திய மாரவேள் சிங்காரபவனி வரத் தொடங்கும் சிந்தைக்கினிய அந்தி வேளையிலே, உனது பலவகைப்பட்ட செல்வங்களுள் தலைசிறந்த தனிப்பெருஞ் செல்வமாக விளங்கும் மணம் மிகுந்த மலர்ச்சோலைகளிலே நாங்கள் பன்முறை புகுந்து பரமானந்தம் அனுபவித்ததுமுண்டு. தமது மெல்லிதழ்களை அழகுபெற விரித்துப் புன்னகைபூத்து நறுமணம் பரப்பி நிற்கும் பலவகை நிறங்கள் கொண்ட மலர்களைக் காணுந்தோறும், அம்மலர்கள் எங்களது மனமாகிய அரிய மலரையும் இனிது மலர்வித்து, எத்தனை எத்தனையோ இன்ப நினைவுகளை எழுப்பி, எங்களை நாங்களே மறந்து இன்பவுலகிற் புகுந்து உல்லாஸமாகத் திரிந்து கொண்டிருக்கும்படி புரிந்துவிடும். எமது அன்னையே! அந் நிலையிலே, எங்கள் மனம் அனுபவிக்கும் இன்பத்தை என்னென்று எடுத்துச் சொல்ல வல்லோம்? எத்தனை எத்தனை அழகிய வடிவங்கள்! எத்தனை எத்தனை அற்புத நிறங்கள்! எத்தனை எத்தனை விசித்திர மணங்கள்! எத்தனை எத்தனை இன்பக் காட்சிகள்! அத்தகைய அற்புதக் காட்சிகள் அளிக்கும் வளம்பெற வளர்ந்த பசுஞ்செடி கொடிகள் அமைந்துள்ள பூஞ்சோலைகள், எமது அன்னையாகிய உன்னொருத்திக்கே உள்ள தனிப்பெருஞ் செல்வமன்றோ? வெள்ளிதழ் விரித்து மெள்ளெனச் சிரிக்கும் வெண்மல்லிகை மலர்களும், செவ்விதழ் விரித்துச் செவ்வியில் மலர்ந்து நீலநீரின்மேல் நிமிர்ந்து நின்று இளந்தென்றற்காற்றில் அசைந்து அசைந்து உல்லாஸமாக ஊசலாடிக் கொண்டிருக்கும் செந்தாமரை மலர்களும், பச்சைவண்ணப் பட்டு மெத்தையின்மேல் நீலமணிகளை வரிசையாகப் பதித்து வைத்ததே போல் பசும்புல் தரையின் மீது படர்ந்து கிடக்கும் பச்சிலைகளின் இடையிடையில் மலர்ந்து கிடக்கும் நீலமலர்களும், பலவகை நறுமண மலர்ச் செல்வத்தில் தலைசிறந்த தனிப்பெருஞ் சிறப்புடையவளாக விளங்கி நிற்கும் அன்னையாகிய உன்னிடமன்றி, வேறு எந்த தேசத்தாயிடம் காணக் கூடும்? எமது தாயே! உனது சக்தியின் அம்சங்களாக—அருளின் புகலிடங்களாக—அன்பின் இன்ப ஊற்றுகளாக—அழகின் நிலையிடங்களாக எங்களது கண்களுக்கும் கருத்துக்கும் ஒருங்கே பெருங்களிப்பூட்டி நிற்கும் உனது செல்வப்புதல்விகளின் குறுநகை தவழும் குளிரொளி முகத்தில் குலவி நிற்கும் அற்புதப் பேரழகையும், செந்தேனருவியைப்போல் செவிகளில் பாயும் அச் செல்வியர் பேசும் குளிர்மொழிகளில் விளையும் இன்பத்தையும், உள்ளது உள்ளபடி உணரக்கூடிய சக்தியை எந்த ஒரு கவிஞனேனும் எளிதில் அடைய முடியுமோ? தாயே! இம்மையின்பங்கள் எல்லாவற்றிற்கும் மறுமையின்பங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணியாக விளங்குபவள் நீயே! உனது இன்னருளை வேண்டி நிற்கும் உண்மையன்பர்களுக்கு, நீ திருவுள்ளம் இரங்கி வழங்கியருளும் வரங்களின் சக்தியையும் பெருமையையும் அழகுபெற வர்ணிக்க முயலும் முயற்சியிலே, இது வரையில் எந்த ஒரு கவிஞரேனும் முழு வெற்றி பெற்றிருக்கின்றனரென்று துணிந்து கூற எவரேனும் முன்வரக் கூடுமோ?

அருளே உருவாகிய அன்னையே! தனது விசித்திரக் கூத்துகளினால் தான் விரும்பியவாறெல்லாம மற்றவர்களைப் பெரிதும் சின்னாபின்னப் படுத்திச் சிதைக்கும் காலதேவதையினாலே, உனது இயற்கைப் பேரழகை இன்றளவும் அழிக்க முடிந்ததோ? தாயே! அக்கால தேவதை, தனது இரக்கமற்ற கொடிய இயல்பினாலே, இன்று உனது கைகளில் இருப்பு விலங்குகளைப் பூட்டியிருப்பது உண்மையே. ஆயினும், இனி நீ அதைக் குறித்துக் கொஞ்சமும் அஞ்ச வேண்டுவதில்லை. அவ் விலங்குகளைப் பொடிப் பொடியாக உடைத்தெறிய முயலும் முயற்சியையே, நாங்கள் இப்பொழுது எங்களது வாழ்க்கையின் முழுமுதல் நோக்கமாக மேற்கொண்டு விட்டோம். விண்ணுலகில் அமரத்தன்மை பெற்று வாழும் தேவர்களைப்போல், முப்பத்துமுக்கோடி மக்களல்லவா இன்று எமது அன்னையாகிய உன்னை வாயார வாழ்த்திப் போற்றி நிற்கிறோம்! உனது இணையற்ற இன்னிசையை இன்று கம்பீரமான குரலில் முழக்கிக்கொண்டிருப்பவை, முப்பதுகோடி வாய்களல்லவா? உனது அருளுருவை நோக்கி நமஸ்கரித்த வண்ணம் இன்று குவிந்து கூப்பி நிற்பவை, அறுபது கோடி கைகளல்லவா? இத்தகைய புத்திரபாக்கியத்தைப் பெற்று நிற்கும் அன்னையாகிய உன்னை, 'திறமை யற்றவள்' என்று இகழ்ந்து பேச நெஞ்சு துணிந்து முன்வரக் கூடியவன் எவன்? 'சக்தி'-யின் வடிவினளாகக் காட்சி அளித்து நிற்பவள், நீ ஒருத்தியே அல்லவா? உனது உள்ளத்தில் பொங்கித் ததும்பிக் கொண்டிருப்பது போன்ற பெருங்கருணையும் சகிப்புத் தன்மையும், வேறு எந்த நாட்டன்னைக்கேனும் உண்டென்று கூற முடியுமோ? பகைவர்களைத் தமது தோற்றத்தினாலேயே பெரிதும் நடுநடுங்கச் செய்து நிற்பனவாகிய வெற்றித் திரிசூலப் படையும் வீரச் சிங்க வாகனமும், உனக்கே உரிய வீரச் செல்வங்க ளல்லவா?

தாயே! உயிர்களின் அறியாமையை அறவே அகற்றி, உண்மை, இன்பத்தை அளிக்கக்கூடிய உண்மைப் பொருள்களின் இயல்பை உள்ளது உள்ளபடியே உணர்த்தும் உண்மை வித்தையின் வடிவில் காட்சி தந்து நிற்பவள் நீயே! 'மானிட வாழ்க்கையின் மகோன்னத லட்சியம், நல்லறங்கள் வளர்ப்பதொன்றே'—என்பதை இனிது உணர்த்தி நிற்கும் தர்ம தேவதையும் நீயே! ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒளிந்து நிற்கும் இதயமும் நீயே! மானிடரின் சிற்றறிவின் சிற்றாராய்ச்சிக்கு எட்டாமல் ஒளிந்து நிற்கும் விசித்திர மர்மதேவதையும் நீயே! முப்பத்துமுக்கோடி மக்களாகிய எங்களது உடலில் ஒளிந்திருந்து, இன்றளவும், எங்களை ஆட்டுவித்து வரும் இன்னுயிரும் நீயே!

எமது தாயே! போர் முனையிலே, எதிர்த்து நின்ற பகைவர்களை வதைத்து வெற்றி மாலைசூடி வெற்றிச்சங்கு முழங்கி நிற்கும் சீரிய போர் வீரர்களின் தடந்தோள்களில் நடனமிடும் 'சக்தி' நீயே! எத்தகைய பிரதி பலனையும் எதிர்பாராமல், 'என்கடன் பணி செய்து கிடப்பதே!'—என்பதொன்றையே தமது வாழ்க்கையின் தனிப்பெரு நோக்கமாகக்கொண்டு—பரோபகாரப் பணிசெய்து கிடப்பதால் விளையக்கூடிய இன்பம் ஒன்றையே தமது வாழ்வில் அனுபவித்ததற்கு உரிய தனிப்பெரும் இன்பமாகக் கொண்டு—உயிர்வாழும் உண்மையன்பர்களின் உள்ளக்கோயிலிலே, என்றும்



அணையாத பக்தி ஒளிபரப்பி நிற்கும் ஞானச்சுடரொளி விளக்காகி நிற்பவளும் நீயே! உண்மையன்பர்களின் உள்ளம் பெரிதும் கசிந்து உருகுவதற்கு உரிய இடங்களாக அமைந்துள்ள திருக்கோயில்கள் தோறும், அவ்வன்பர்களின் அகத்திற்கும் கண்களுக்கும் ஒருங்கே பேரானந்தம் அளித்து நிற்கும் தெய்விகத் திருவுருவங்களெல்லாம், எமது அன்னையாகிய உன்னுடையவையே யாம்.

பத்து வகைப்பட்ட படைகளைப்பற்றி, வெற்றித் திரிசூலப்படையைச் செங்கையில் ஏந்தி, சிங்கவாகனத்தில் ஆரோகணித்து வீரக்காட்சி வழங்கி நிற்கும் வீரத் தாயாகிய மலைமகள் நீயே! செவ்விதழ்கள் விரித்துச் செவ்வியில் மலர்ந்துள்ள செந்தாமரைமலரின்மேல் சிங்காரமாக வீற்றிருந்து ஜகன்மோகனப் புன்னகை பூத்த மதிமுகத்துடன் அழகுக் காட்சி அளித்து நிற்கும் அருட்பெருந் தாயாகிய திருமகள் நீயே! இன்னிசை வீணை மீட்டி இன்பகீதம் பாடியவண்ணம் நீலமயில் மேல் ஏறி அமர்ந்து அறிவுக்காட்சி தந்து நிற்கும் ஞானத்தாயாகிய கலைமகள் நீயே!

இன்னருளே உருவாகி நிற்கும் அன்னையே! போற்றி! விண்ணுலக வாழ்வில் அனுபவிக்கக்கூடிய இன்பங்களை யெல்லாம், இம் மண்ணுலக வாழ்விலேயே இனிது அனுபவிக்கக்கூடிய வண்ணம், இன்னருள் சொரிந்து நிற்கும் அன்னையே! போற்றி! கருணையே உருவாகக்கொண்டு காட்சி தந்து நிற்கும் உன்னிடம், எவன்தான் எவ்விதக் குற்றத்தைக் காணக் கூடும்? இம் மண்ணுலகில் வாழும் எண்ணிறந்த நாட்டு அன்னைகளுக்குள்ளே, எல்லாவகைப்பட்ட செல்வங்களையும் தன்னிடம் ஒருங்கே கொண்டு சிறந்து விளங்கும் சீரிய வீர அன்னை, உன்னையன்றி வேறு எவர்? அறிவில் தெளிந்து அன்பால் குளிர்ந்து அறப்பெரும் பணிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கும் சான்றோரது உள்ளத்தைப்போல், தெள்ளத் தெளிந்து குளிர்ந்த நறுநீரைப் பெருக்கி ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று வளத்திலும், எண்ணினும் உண்ணினும் இனிக்கும் இனிய கனிவளத்திலும், இப் பூவுலகிலே உனக்கு நிகராக வேறு எவரைக் கூற முடியும்? நீலமாமேனி உடையவளாகி, பேரொளி வீசும் மணியணிகள் பூண்டு, அருள் ததும்பி நிற்கும் விழிகளுடன் எம்மைக் குளிர்ந்து நோக்கிப் புன்முறுவல் பூத்து நிற்கும் எமது வீர பாரதத்தாயே! எமது உடலுக்கு வீரசக்தி அளித்து, உள்ளத்தில் வீர உணர்ச்சியை வளர்த்து, எமது வாழ்க்கையைத் தூய்மைப் படுத்திக் காத்தருளும் பேரருள் வடிவினளாகிய பாரதத்தாயே! போற்றி! போற்றி!! உனது அருள் திருவுருவுக்கும் தனிப்பெருங் கருணைக்கும் பல கோடி நமஸ்காரங்கள்!"

வந்தே மாதரம்!



# வாழ்க்கையின் வண்டி மாடுகள்

(எஸ். குருஸாமி ஐயர்.)

வாழ்க்கை என்னும் வண்டியை ஓட்டுபவன் குடும்பத் தலைவன். அவன் மனைவியே வண்டிமாடு. வண்டியில் உட்கார்ந்திருப்பவர்கள் குழந்தைகள், வயோதிகர்கள், முதலான குடும்ப ஜனங்கள். இவர்களை பத்திரமாய் கொண்டு போய் சேர்க்கும் பொறுப்பு வண்டிக்காரனுடையது. வண்டிக்காரன் திருப்திக்கு நடக்க வேண்டியது வண்டி மாட்டின் கடமை. இத்தகைய வண்டி 'வண்டி பாரம் பூமியிலே' என்பது போல் கடவுளாகிய பூமியின் மேல் குடும்ப பாரத்தைப் போட்டு (குடும்பம்) நடத்தப்படுகிறது. வழியில் உள்ள மேடு பள்ளங்களால், மாடும் கஷ்டப்படுகிறது. வண்டிக்காரனும் கஷ்டப்படுகிறான். 'பாழும் ரோட்டை சர்க்கார் நன்றாக ரிபேர் செய்து வைக்கக் கூடாதா?' என்கிறான். நாம் போதுமான வரி கொடுத்தால் தானே போதுமான பணம் கிடைத்து வேலை நடக்கக் கூடும்? என்ற எண்ணம் இருப்பதில்லை. அது போலவே, வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் கஷ்ட சுகங்களே நாம் வழியில் காணும் மேடு பள்ளங்கள். இதைக் கண்டு வாழ்க்கையை வெறுத்துக் கொள்கிறோம். "பாழும் கடவுளுக்கு நான் படும் கஷ்டங்கள் தெரிய வில்லையா? கடவுளுக்குக் கண்ணில்லையா!" என்கிறோம். நாம் முன் ஜன்மத்தில் செய்த பாவ புண்ணியங்களுக்குத் தக்கபடி தானே வாழ்க்கை ரூபமடையும்? என்பது ஞாபகத்திற்கு வருவதில்லை. வண்டியை எங்கே ஓட்டுகிறோம்? குறிப்பிட்ட ஊருக்கு, குறிப்பிட்ட காரணத்திற்கு அல்லவா? அது போலவே, வாழ்க்கையின் பிரயாணமும் கடவுளை அடையத்தான். அவ்வாறு குறிப்பிட்ட ஊருக்குப் போனது, 'அத்தான் வந்து விட்டான். மாமன் வந்து விட்டான்,' என்று எல்லோரும் எதிர் கொண்டழைக்கிறார்கள். உபசரிக்கிறார்கள். ஆனால், நாம் வெறுங் கையோடு போகலாகாது. அவ்வாறே—நாம் போதுமான புண்ணிய மூட்டையைக் கட்டிக்கொண்டு சென்றால் தான் கடவுளும் நம்மை, 'பக்தன் வந்து விட்டான்' என்று வரவேற்பு கொடுப்பார்.

இப்படியாகச் செல்லும் வண்டிக்கு இடையில் பழுது ஏற்படுவதும் உண்டு. அதனால் வண்டியை பழுது பார்க்க கொல்லன் தச்சனை தேடவேண்டும். இது போலவே, நமக்கு உண்டாகும் பல வியாதிகளுக்கு டாக்டர்களைத் தேடுகிறோம். அப்போது செலவு ஏற்படுகிறது. வண்டியிலுள்ளவர்களுக்குப் பசித்தாலும், வண்டி மாட்டுக்குப் பசித்தாலும், வண்டிக்காரன் தான் ஆகாரம் கொடுக்க வேண்டும். வண்டியைக் கவிழ்த்து விடாமல் ஓட்ட வேண்டும். கவிழ்த்து போனால் வண்டிக்கு நஷ்டம், எல்லோருக்கும் சேதம், இவைகள் ஏற்படும். இதனால் ஏற்படும் லாப நஷ்டம் வண்டிக்காரனையே சாரும்.



வண்டி ஓட்டுபவர்கள் பலவிதம். சிலர் மாடுகளை அருமையாக வைத்துக் கொண்டு, நன்றாக போஷித்து அதன் சிரமமறிந்து வேலை வாங்குவர். சிலர் தீனி நிறையக் கொடுத்தாலும், வண்டி ஓட்டும் சமயத்தில் மட்டும் கடுமைப் படுத்துவர். மற்றும் சிலர் போஷிப்பில் கவனம் குன்றியவர்களாயிருப்பர். வேலை மட்டும் தொடர்ந்து கொடுத்துக் கொண்டேயிருப்பர். சிலருக்கு வேலை வாங்குவதிலும் கவனமிராது. இப்படியாக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம். இது போலவே, வண்டிமாடுகளும் சில எஜமான விஸ்வாசம் உள்ளனவாகவும், சில கடமையை உணர்ந்தும், தனக்கிடப்படும் வேலைகளை நன்றாகவும், கவனமாகவும், அன்புடன் வரவேற்றும், செய்வதுண்டு. சில வண்டிக்காரர்கள் தூங்கி விடுவார்கள். ஆனால் மாடுகள் வழியில் காணும் வண்டிகளுக்கு மாறி கொடுத்துக் கொண்டும், மேடு பள்ளங்களில் எச்சரிக்கை (Caution)யை எதிர்பாராமல் தானாகவே இந்த இடங்களில் சமாளித்து இழுத்துக் கொண்டும், உற்சாகமாக வழி நடத்தும், தான் வழக்கமாய் போய் சேர வேண்டிய இடத்திற்கு கொண்டு போய் சேர்க்கிறது. சில மாடுகள் தின்ன வேண்டிய தீனியை மட்டும் தின்று விட்டு வேலையில் கபடமாக நடந்து கொள்ளும். எஜமானன் தூங்கி விட்டால் அவைகளும் நின்று விடும். அவன் விழித்துக்கொண்டு தூண்டினால் தான் மேற்கொண்டு நடக்கும். சில சற்று அஜாக்கிரதையாய் இருந்தாலும் பாதையை விட்டு விலகி காடு முரடான பாதையில் இஷ்டப்படி ஓடி, வண்டியைக் கவிழ்த்து விடும்! இன்னும் சில, சமமான இடங்களிலேயே படுத்துக்கொண்டு சக்தியற்றிருப்பதாக பாசாங்கு செய்யும். மாடு இழுக்கா விட்டால் கொஞ்சம் கொஞ்சமாக வண்டியிலுள்ளவர்களை இறக்கி விட்டு சுமை குறையச் செய்கிறோம். வண்டியைத் தள்ளுகிறோம். மாடு இளைத்து விட்டதானால், முன்னிலும் கொஞ்சம் தீனியை அதிகமாகக் கொடுத்து புஷ்டி செய்கிறோம். இவ்வளவு தான் நாம் அந்த மாட்டிற்கு செய்யக் கூடியதாகும். இதற்குப் பின்னும் அந்த மாடு பின் வாங்குமானால், பாசாங்கு செய்யுமானால் அதன் மேல் முடிவாக வெறுப்படைகிறோம். கடைசியாக அதை விற்று விடத் தீர்மானம் செய்கிறோம். அதாவது, அது நமக்கு உதவாதது என்று முடிவு கட்டுகிறோம்.

நாம் அவைகளை போஷிப்பதற்கு நன்றியாக அவை எஜமான விஸ்வாசம் கொண்டு உழைக்க வேண்டும். வேலை வாங்காமல் கட்டி வைத்துத் தீனி போட நம்மால் முடியாது. அதில் ஒருவருக்கொருவர் அபிமானம் ஏற்பட வழியுமில்லை. அவைகள் உழைப்பதற்கே பிறந்தன. நாம் வேலை வாங்கவே பிறந்திருக்கிறோம். சில பெண்கள் வீட்டில் புருஷர்களுடன் சண்டையிடும்போது, "நான் உங்கள் வீட்டிற்கு மாடுபோல் உழைக்க வில்லையா?" என்று சொல்வதைக் கேட்டிருக்கலாம். இது அவரவர் வேலை. எனவே ஏற்றத் தாழ்வு இல்லை. ஒரு வீட்டிற்கு வந்த பின்னர், அந்த சுக துக்கங்களில் பங்கு எடுத்துக் கொள்ள பாத்தியதை ஏற்பட்ட பின்னர், "உங்கள் வீடு," என்று பிரித்துப் பேசும் கொள்கையிருந்தால், அக் குடும்பம் முன்னுக்கு வர மார்க்கமில்லை. இதை அவர்கள் மறந்து உண்மை உறவு பூண வேண்டும்.

இளமையிலேயே நன்கு பழக்கிய மாடுகளானால், அவைகளுக்கு நல்ல பாலியத்தில், வெறும் தீனி மட்டும் வைத்தால் போதாது. நன்றாக வேலை

கொடுக்க வேண்டும். இல்லாவிடில் அவைகளுக்கு உடம்பு வலி ஏறிவிடும். இந்த வண்டி யிழுப்பு அவைகளுக்கு தேகப் பயிற்சியாகவும், ஜீரண சக்திக்கு ஓர் மார்க்கமாகவும் இருக்கிறதெனலாம். அது போல இளமையில் நன்கு பழக்கப்படாத—வீட்டு வேலைகளை சரிவர செய்தறியாத பெண்களே புருஷன் வீட்டில் படுக்காங்குள்ளி மாட்டுக்கு ஒப்பாவது. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்றபடி நன்கு பழக்கிய பெண்மணிகள் புருஷனுக்கும் அவனைச் சார்ந்த பந்துக்களுக்கும், திருப்தியை உண்டாக்குவார்கள். புருஷனுக்கு மனைவியிடம் வெறுப்பு ஏற்பட்டால், "உன்னைச் சொல்வதில் பிரயோஜனமில்லையடி. உன்னை வளர்த்தவர்களைச் சொல்ல வேண்டும்" என்று தான் அதிகமாய் சொல்வார்கள். மனைவிமார்கள் புருஷர்களை வாழ்க்கையில் பற்றுள்ளவர்களாகச் செய்ய அவர்கள் குறிப்பறிந்து திருப்தியாக நடந்து கொள்ள வேண்டும்.

சில மாடுகள் வண்டியில் எஜமானன மட்டும் இருந்தால் தான் சரிவரப் போகும். இல்லாமல் அதிகமாக எவராவது இருந்தால் துன்பம் கொடுத்துக் கொண்டேயிருக்கும். இது ஒரு அதிசயம். இது போலவே, சில மனைவிமார்கள் தங்கள் புருஷர்களுக்கு மட்டும் ஏதோ தீராதென கடமைக்காக உழைப்பதாக காட்டிக் கொள்வர். மற்றும் வீட்டிலுள்ளவர்களிடமோ, அல்லது வருவார் போவார்களிடமோ அடிக்கடி ஏதாவது குரோதமான வார்த்தைகளை வீசி வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டிருப்பார்கள். இது தலைவனுக்கு விரோதமான செய்கை என்பதை உணர்வதில்லை. சில மாடுகள் வண்டி பின்னால் தான் போகும். தனியே விட்டால் பக்கங்களில் இழுக்கும். அது போல சில பெண்களுக்கு எவ்வளவு வயதானாலும் தனிக் குடித்தனம் செய்யத் தெரியாது. துணைக்கு ஒருவர் இருக்க வேண்டும். சில மாடுகளை வண்டிக்குப் பின் விட்டாலும். தானாகவே முன் செல்லும். இதைப் போல பெண்களில் சிலர், குடும்பத்தில் தகுந்த நிர்வாகஸ்தர்கள் இருந்தாலும், அவர்கள் திறமையை மீறின நல்ல நிர்வாகம் செய்து காட்டி, தன்னை மெச்சும்படி நடந்து கொள்வார்கள். சில மாடுகள் வண்டியை தள்ளிக் கொடுத்தாலும், நகர மாட்டா. சக்தியில்லாதது போல் பாசாங்கு செய்யும். படுத்துக் கொள்ளும். பெண்களில் சிலர் எப்போதும் தலைவலி என்று சொல்லி, புருஷன் வேலை செய்யப் பார்த்திருப்பார்கள். புருஷன் இல்லையென்றால், கதை பேசப் போய் விடுவார்கள். புருஷன் வருகிற சமயத்தில் மட்டும், தலைவலி என்பார்கள். இவ்வாறு ஸ்திரீகள் சொல்வது, புருஷர்களுக்குத் தலைவலியாகவும், செய்வது தலை விதியாகவும் இருக்கிறது. சில மாடுகளுக்குத் தொட்டித் தண்ணீர் குடித்தே வழக்கம். அது தான் பிடிக்கும். இதனால் வெளியில் பிரயாணம் செய்ய நேரும் தினங்களில் தண்ணீர் சரிவர குடிக்காமல் ஹடம் செய்வதுண்டு. இது போன்று, வீட்டில் ஒன்றிரண்டு தினங்களுக்கு காப்பிக்கொட்டை யில்லா விட்டாலும், காபி(த்தண்ணீர்)க் குடி பழக்கமுள்ள பெண்கள் சாப்பிடாமலும், வேலை செய்யாமலும், புருஷர்களை பெருத்த ஹிம்சைக்கு ஆளாக்கி விடுகிறார்கள். சில மாடுகளை எஜமானன் கட்ட மறந்து விட்டாலும், அவைகள் தன் இடத்தை விட்டு எங்கும் போகா. சில இதுதான் சமயமென திருட்டுத் தீனி தின்று வயிறு வளர்க்க ஓடிவிடும். அது போல, சில ஸ்திரீகளை சதா கண் காணித்து வரவேண்டும். இல்லா விட்டால், புருஷனுக்குக் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுத்து விடுவர்.



இல்லை யென்று ஜாப்தா கொடுக்க வேண்டியது மனைவியின் வேலை. அதைக் கொண்டு வந்து சேர்ப்பது கணவன் வேலை. வைக்கோல் இல்லை என்பதில் மாட்டுக்கும் கவலையுண்டு. வண்டிக் காரனுக்கும் கவலை யுண்டு. மாடு கவலைப்படுவது தன் பசியின் கொடுமையால். வண்டிக்காரன் கவலைப்படுவது மாடு இளைத்து விடுமே, முதல் குறைந்து விடுமே, வைக்கோல் போடா விட்டால், இன்னும் பல மைல்கள் தூரம் போக முடியாதே என்பவைகளால். ஆகவே, கவலை தனக்கு மட்டும் தான் இருப்பது போலப் பேசும் பெண்களுக்கு இந்த உதாரணம் தகுந்த பதிலாகலாம். சாதாரணமாக, ஒரு குடும்பத்தில் புருஷர்களை விட, பெண்களுக்கு செலவிடப் படுவதே அதிகம். உதாரணமாக கலியாணச் செலவை எடுத்துக் கொண்டால், பையனுக்கு செலவு செய்வதை விட பெண்ணுக்கே அதிகம் செலவிட வேண்டியிருக்கிறது. 'ஐந்து பெண்களைப் பெற்று விட்டால் அரசனும் ஆண்டியாவான்' என்று சொல்வதை இப்பொழுது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

புருஷனது வாழ்வில் ஸ்திரீயின் வாழ்வு அடங்கியுள்ளது. அவனது உயிரின் அறிகுறியே—அவனது உயிரை மேன்மையாகக் கருதுவதன் அறிகுறியே மாங்கல்யம். அந்த மாங்கல்யம், ஸ்திரீகளுக்கு ஓர் முக்கிய அணிகலம். அவர்கள் இன்ப வாழ்க்கையின் ஜீவன் இதில் தான் நிறைந்திருக்கிறது. 'மனம் போல் மாங்கல்யம்' என்றபடி மனம் சத்தியத்தையும், நியாயத்தையும், தன் கடமைகளையும் உணர்ந்து நடப்பதற்கொப்ப மாங்கல்யம் பலனைக் கொடுக்கும். "என்னடா எந்தாலி யறுக்கிறே?" என்கிறார்கள். அதாவது தாலியறுத்தல் என்பதால், அவனது சகல சுகங்களையும் பறிமுதல் செய்து கொண்டு, கடவுளே கதியென விட்டு விடுவதாகப் பொருள்; அவ்வளவு நிர்ப்பந்தம். அவ்வளவு கடுமையான தண்டனை. சாவித்ரியும் தன் புருஷன் உயிருக்காகத் தான் மன்றாடினாள். தன் மங்கல்யத்திற்கு உயிர் தேடினாள். இவைகள் நமது ஹிந்து மதத்தின் உன்னதக் கொள்கைகள். இவைகளைக் கடைப்பிடித்துத் தான் நமது முன்னோர்கள் வாழ்ந்தார்கள். ஆதலால் தான் நாம் அவர்களின் வாழ்க்கையை நமக்கு உதாரணமாக எடுத்துக்கொண்டு பேசிக் கொள்கிறோம். அதுபோல, நமது வாழ்க்கையும் நமது பின்னோர்களுக்கு உதாரணமாக, உபயோகமாக இருக்கும்படி நாம் நடந்து காட்டுவதே நமது கடமையும் கௌரவமும், அழகும் ஆகும்.



# நியூஸ் பேப்பர்

(கார்த்திகேயன்.)

பெரிய மனிதர்களுக்கு ஒருநாள் நியூஸ் பேப்பர் தெரியாவிட்டால் தலை வெடித்துப் போய்விடுமாம்;—இது நான் சொல்வதல்ல. அந்தப் பெரிய மனிதர்களே சொல்லி யிருக்கிறார்கள்.

என்ன வேலை யிருக்கட்டும், எவ்வளவு அவசரமான காரிய மிருக்கட்டும். பேப்பர் பார்த்தாலல்லாமல் அவர்களுக்குத் தூக்கம் வராது. ஒரு தேசத்தை ஆளும் அரசனுக்குக்கூட அத்தனைக் கவலையும், சிரத்தையும் இருப்பதில்லை. அவ்வளவு ஆவலுங் கவலையும் இந்தப் பெரிய மனிதர்களுக்கு பேப்பர் பார்ப்பதில்.

இல்லாவிட்டால் தபாலாபீசுக்கு மெயில் வந்ததும் வராததுமா யிருக்கையிலேயே ஏன் ஓடுகிறார்கள்? தபாற்கார சாயபுவுக்கு மனம் வரும் வரையில் அவன் தயவை எதிர்பார்த்த வண்ணம் ஏன் கால் கடுக்க நிற்கிறார்கள்? இந்தப் பெரிய மனிதர்களுக்கு மளிகைக்கடை பாக்கி, ஜவுளிக்கடை பாக்கி, பால்காரி பாக்கி, வேலைக்காரி சம்பளபாக்கி, வண்ணான் கூலி பாக்கிகூட இருக்கும். ஆனால் பேப்பர் சந்தா பாக்கி மட்டும் இருக்கவே யிருக்காது. இருந்தால் மறுநாள் பேப்பர் எங்கே வரும்?

வீட்டு விலாசத்துக்கு வழக்கப்படி பேப்பர் வரினும், சிலர் ரயிலில் போகிறபோது பேப்பரைக் கிரயத்துக்கு வாங்கிப் படிக்காம லிருப்பதில்லை. ஏனென்றால் அன்று மாலையோ, மறுநாளோ வீட்டிற்குப்போய் அந்தப் பேப்பரை உடைத்துப் பார்ப்பதற்குள் சமாச்சாரம் பழசாய்ப் போய்விட்டால்.........!

*   *   *   *

ரயில் வண்டியிலும் சரி, பிற பொதுவிடங்களிலும் சரி ஒருவருடன் ஒருவர் சினேகம் கொள்ள இந்த பேப்பர் எவ்வளவுதூரம் உதவுகிறது பாருங்கள்!

"என்னசார்! இன்று பேப்பரில் என்ன விசேஷம்? அந்த ஹைகோர்ட் கேஸ் என்ன ஆச்சு?"

"சார்! இப்படி ஒரு ஷீட் கொடுங்கள்! தமிழ் நாடுகளில் ஆலயப்பிரவேசம் எப்படி யிருக்கிறதாம்?"

"ஏன் சார்! இந்த புகையிலை வரிச் சட்டம் நிலைக்குமா என்ன?"



"இந்தக் காங்கிரஸ் கவர்ன்மெண்டால் நமக்குச் சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது என்னமோ வாஸ்தவந்தான்; என்றாலும்.........உம்வரி இப்படி........."

"உம்...ஹிட்லர் என்ன சொல்றாராம்?"

"யுத்தம் என்ற சப்தம் காதில் விழுந்ததும் விழாததுமா யிருக்கையிலேயே ஐயா!...இந்த வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கப்பார்த்தது........."

*   *   *   *

எனக்கு ஒரு தினசரி வருகிறது. எனக்கு மட்டும் ஏகதேசத்தில் அல்ல. நாங்கள் ஒரு அரை டஜன் பேர்வழி கூட்டாகச் சேர்ந்து வரவழைக்கிறோம். முதலில் என் நண்பன் ராமு தபாலாபீசுக்கு ஓடுவான். அவன் அதைக் கையில் வாங்கியதே சீனு ஓடிப்போய், 'இங்கே முதல் ஷீட்டைக் கொடுடா' என்று நிற்பான். ராமு "கொஞ்சம் பொறுடா" என்று கூறிவிட்டு ஹெட்டிங்கை (தலைப்புகளை) யெல்லாம் பிரமாதமாக ஒன்றும் விடாமல் படித்துத் தீர்ப்பான். பிறகு அயல்நாட்டு செய்திகளை யெல்லாம் ரொம்ப கவனமாகப் படிப்பான். இதற்குள் சீனு வாண்டெட் (wanted) காலத்தைப் (Column)ப் பூரா பார்த்துவிட்டு நமக்கு வேண்டியது ஒண்ணுமில்லேடான்னுட்டுப் போய்விடுவான்.

பிறகு மிஸ்டர் பாலுவிடம் பேப்பர் போகும். அவர் பெரிய காங்கிரஸ்வாதி. அதனால் அவர் உள்நாட்டு செய்தி பூராவும் படித்துவிட்டுத்தான் பேப்பரைக் கீழே வைப்பர். அதன் பிறகு வேலுவின் முறை வரும். அவன் லீடர் காலத்தை (ஆசிரியர் பத்தி)த் தவிர வேறொன்றையும் படிப்பதே யில்லை. அதைப் படித்து முடித்ததே எல்லாந் தெரிந்துகொண்டு விட்டதுபோலத் துள்ளிக் குதிப்பான். அப்பால் சந்துருவிடம் போகும். அவன் ஒரு பெரிய விளக்கெண்ணெய்ப்பேர்வழி. ஒரு முற்றுப்புள்ளி, கால் புள்ளி, ஆச்சரியக்குறி கூடப் படிக்காமல் விடமாட்டான். என்னடா என்றால் "காசு கொடுக்கிறேனா சும்மாவா?" என்பான்.

இதற்குப் பிறகு கடைசியாக இரவு 9-மணிக்கு என்னிடம் வந்து சேரும். சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கை யெல்லாம் போட்ட பிறகுதான் நான் அதைப் படிக்க வாரம்பிப்பேன். அதற்குள் என் மனைவி என்னருகில் வந்து நின்று "பவுன் என்ன விலை? வெள்ளி என்ன விலை? பாருங்கள்" என்பாள். நான் சவரன் சில்லரை 27-5-9 வெள்ளி ரூபாய் எடை 0-13-9 என்றதே "இதெல்லாம் எப்போதான் இறங்கப்போகிறதோ? முன்னே 22, 23 ஆக இருந்ததே, அப்போ வாங்கி ஏதானும் நகை கட்டுப்பண்ணி யிருந்தாலும் இப்போ விற்றால் நல்ல லாபம் கிடைக்கும்!" என்பாள். "ஆஹா, உன் யோசனை!" என்று எனக்குள் சொல்லிக்கொண்டு பேப்பரைப் புரட்டுவேன்.

அப்பால் நான் வெளியூர்ச் செய்திகள் என்ற தலைப்பில் வரும் காலநிலை, திருவிழாக்கள், கொலை, திருட்டு, கலகம், வெள்ளத்தில் மாண்டான்,

187550

ஒரு பெண்மணி தற்கொலை செய்து கொண்டாள், ரயிலும் மோட்டாரும் முட்டிக்கொண்டது, பிரபல விவாகம், பெரிய மனிதர்கள் ஸ்வர்க்கத்துக்குப் போன செய்தி என்று வரும் செய்திகளையும், சென்னையை விட்டுப் புறப்பாடு. சென்னைக்கு வருகை, கெஜட்டில் வெளியான விஷயங்கள்—யார் யாருக்கு எங்கெங்கே மாற்றல், உயர்ந்த பதவி, அல்லது ரஜா முதலிய விவரங்களுள்ள செய்திகள் இவற்றை யெல்லாம் நான் அக்கரையோடு படிக்கும்போது என் மனைவியும் ஆவலோடு கேட்பாள்.

ஒவ்வொரு தினங்களில் வரும் சினிமாக்கதைகளை என் மனைவிதானே படித்துப் பார்ப்பாள். பிறகு அந்தப் படம் எங்களூர்த் தியேட்டருக்கு வரும்போது அவள் அந்தக் கதையை எனக்குச் சொல்லி என்னைக் கூட்டிக்கொண்டு போவாள்.

அப்படியே நித்திரை வந்ததும் நாங்களிருவரும் உறங்கிப் போவோம். மறுநாட் காலையில் எங்கள் அம்பிப்பயல் அந்தப் பேப்பரை எடுத்து வைத்துக்கொண்டு அதிலுள்ள படங்களை யெல்லாம் காட்டி "அது என்ன ? இது என்ன ?" என்று கேட்டு என் பிராணனை வாங்கி விடுவான்.

* * * *

கடைசியாக இந்த பேப்பர்களை யெல்லாம் நாங்கள் ஆறுபேரும் பங்கு போட்டுக் கொள்வோம். என் பங்குக்கு வந்தவைகளைக் கொண்டு என் மனைவி சிறு காகிதக்கூடைகள் செய்து விடுகிறாள்.

## கட்டுரையாளர் கவனிக்க.

கட்டுரையாளர் தாங்கள் எழுதும் கதை கட்டுரைகளைப் புக்போஸ்டில் அனுப்பும்போது, ஸ்டாம்பைக் கவரின்மீது சரியாக ஒட்டி அனுப்பவேண்டும். தபால் அதிகாரிகள் கட்டுரைகளைப் பரிசோதிப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்படி கவரை ஒட்டவேண்டும். விகடனுக்கு வியாசம் அனுப்பும் நேயர்களில் பலர் கவரில் பாதியும் கட்டுரை யெழுதியுள்ள காகிதத்தின்மீது பாதியுமாக ஸ்டாம்பை யொட்டி அனுப்புகிறார்கள். மற்றுஞ் சிலர் கவரை மூடியும், அதன்மீது கயிற்றைக் கட்டியும் அனுப்புகிறார்கள். இது தற்போதைய தபாற் சட்டத்திற்கே விரோதமான தாகையால், மேற்குறித்த விதமாகவுள்ள கவர்களுக்கு இரட்டிப்பாகத் தபாற் கட்டணம் வாங்கிவிடுகிறார்கள். இதனால் நமக்கு கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகிறது. இதையெல்லாம் கவனித்து, கட்டுரையாளர் நடந்துகொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திராதிபர்.

# பொதுவியலும் சிறப்பியலும்

("சமூகத் தொண்டன்")

குற்றம் யாதென்ற சிந்தனை யுள்ளத்தி லெழும்போது மக்களைப் பற்றிய நினைவு தான் முன்வந்து நிற்கிறது. மக்களன்றோ குற்ற மியற்றுபவர் ? மக்கள் தாம் குற்றம், குற்றந்தான் மக்கள் என்று கூடச் சொல்லி விடலாம் போலும். எனவே குற்றத்தினின்றும் மக்களினின்றும் குற்றத்தையோ பிரித்துக் காண முயலுவது பெரும்பாடாக முடியும். பொதுவியல்புடைய மக்க ளெல்லாம் தவறியற்றுந் தன்மைய ரென்றே தான் கொள்ளக் கிடக்கின்றது. உலக மக்களனைவரும் பொதுவியல்புடையவர்கள் தாமே ?

என்றாலும், சிறப்பு வகையில் கொள்ளக்கூடிய மக்களும் இல்லாமலில்லை. ஆனால் இவர்க ளெல்லாம் மிகக் குறைந்த தொகையினர். பொதுவியல்புடைய மக்களைப் போன்றே இவர்கள் வாழ்விலும், செயலிலும் குற்றங்கள் மல்கிக் கிடக்கக் காண்கின்றோமில்லை. எனவே, இவர்கள் பால் குற்றங்கள் அடியுடன் இல்லை யென்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட முடியுமா ? குற்ற மிருக்கக் காணுங்கால் அங்ஙனம் அறுதி யிட்டு இல்லை யென முடிவு கட்டி விடுவதற் கியலாது தான். இவர்கள் பாலும் குற்றங்கள் காண்கின்றன. ஆனால், அவை அவர்களாற் செய்யப்பட்டன வன்று; எதிர்பாரா விதத்தில் நேர்ந்தவையே.

ஒருவன் தான் குடியிருக்கும் வீட்டைத் தீயிட்டெரித்துச் சாம்பராக்குகிறான். இன்னொருவன் இல்லமோ எவ்விதமோ தீப்பற்றி யெரிந்து படுகின்றது. முடிவில் இரு வில்லங்களும் எரிந்து சாம்பரான தென்னவோ வுண்மை. என்றாலும், அவை யிரண்டும் எரிவாய்ப் பட்டதற்குரிய காரணங்களோ மலைக்கும் மடுவிற்கு முள்ளது போன்ற மகத்தான பேத முடையன. பொது வியல்புடைய மக்களின் குற்றமெல்லாம் முதல் வீடு எரிந்ததற்கான காரணத்துடன் ஒப்பிடக் கூடியவை. பின்னது எரிந்ததன் காரணத்துடன் சிறப்பியல் மக்களின் குற்றங்களைச் சேர்த்து நோக்க வேண்டும். எனவே, குற்றங்கள் பொதுவியல், சிறப்பியல் புடைய இரு சாராரிடத்தும் இருக்கக் காண்கின்றன வானாலும், அவைகள் அவரவருடைய தன்மையுடன் ஒப்பிட்டு நோக்கற்பாலன.

இனி, முதற் கூறப்பட்ட பொது வியல்புடைய மக்கள் எங்ஙனம், தமது வாழ்வில் நாள் தோறும் குற்ற மியற்றுகின்றனர் என்று சற்று ஆராய்வோம்.

மக்களிடம் பொதுவாயுள்ள வெறுக்கப் படும் தன்மைகளில் தன்னல நாட்டமும் ஒன்று. கள்ளுண்டவன் எவ்விதம் உணர் விழந்து தான் செய்

வதையோ, சொல்வதையோ பகுத்தறியாது செய்கிறானோ அவ்விதமே, தன்னலப் பேயால் விழுங்கப்பட்டவனும் தன் செயலாலும், பேச்சாலும் உலகையே சமயங்களில் தவிக்கச் செய்கிறான். இன்னும் நன்கு, சீர்தூக்கிப் பார்ப்பின் முன்னவனை விடப் பின்னவனே பேராபத்து விளைவிக்கின்றான் எனத் தென்றென விளங்கும். கள்ளுண்பான் தன்னுணர்வை முழுதும் இழந்து விடுவதால், தன் பேச்சையும், செயலையும் பற்றிய ஏற்றத் தாழ்வுகளையும், அவற்றால் விளையும் நன்மை தீமைகளையும் அறியாது பேயின் சேட்டைபோல் செய்கிறான். ஆகவே, இவன் செயலை மாற்றவோ அல்லது இவனை அச் செயல் புரியா வண்ணம் தடுத்து விடவோ கூடும்.

ஆனால், தன்னல நோக்குடையான் தான் செய்யும், அச் செயலால் மற்றவர்கட்கு நேரும் தீங்கையும் நன்கறிந்தே செய்கின்றான். ஆனாலும், தன்னல வெறி கொண்ட அவன், தன் செயலால் மற்றவர்கள் எவ்விதம் பாதிக்கப் படுவார்கள் என்னும் விசனத்திற்கோ, வெறும் சிந்தனைக்கோ ஆட்படுவதில்லை! என்றாலும், தான் செய்வது குற்றமென்பதை மாத்திரம் அறியாமலிரான். ஆகவே, மற்றவர் தலையிட்டால் தன் காரியம் எங்ஙனமாயினும் தடைப்பட்டு விடுமே வென்னும் ஐயத்தால், தன்னோக்கம் ஈடேறுவதற்குரிய முயற்சியையும், சூழ்ச்சியையும் ஏனையோர் அறியா வண்ணம் இரகசியமாய்ச் செய்கின்றான். ஆதல் பற்றி, அவன் செயலால் பாதிக்கப்படக் கூடியவர்கள், அவன் சூழ்ச்சி யறிந்து தடுக்க முடியாதபடி, நிலைமை மிக்க நெருக்கடியாகவும், ஆபத்தானதாகவும் ஆய்விடுகின்றது.

இதற்குச் சான்று கூற யானறிந்துள்ள ஓர் நிகழ்ச்சியை ஈண்டு குறிப்பிடுவது இன்றியமையாததாகும். உடன் பிறந்த இரு சகோதரர்கள் வர்த்தகம் செய்து வந்தனர். அண்ணன் பேரிலேயே வர்த்தகம் நிகழ்ந்து வந்தது. வர்த்தகத்தின் இயல்பே போல் இலாபமும், நஷ்டமும் மாறி மாறித்தான் வந்து கொண்டிருந்தன வென்று இங்கே கூறுதல் அவசியமின்மையாகும். இந் நிலையில் உடன்பிறந்தா ரிருவருக்குள் இருந்து வந்த உறவுக்கு எவ்வித இடைஞ்சலோ, ஆபத்தோ நேரமற்றான் இருந்து வந்தது. ஆனால், பின்னர் எதிர்பாரா விதமாய் இலட்சத்தில் இலாபங் கிட்டியபோது அண்ணன் மனத்தில் அழிவுக்குரிய அதிர்ச்சி யேற்படலாயிற்று. அவர் என்ன செய்தாரென்று நினைக்கின்றீர்கள்? ஐயோ, கொடுமை; கொடுமை! தன் தாய் வயிற்றிற் பிறந்த தம்பிக்கு வர்த்தகத்தில் எவ்வித உரிமையும் இல்லையென அஞ்சாது கூறத் துணிந்துவிட்டார். பொதுக் குடும்பத்தின் ஆதரவிலேயே தான் வர்த்தகம் நிகழ்ந்து வந்தது. தம்பியோ இருபது ஆண்டுகட்கு மேலாகக் குடும்பத்திற் குழைத்து, உழைத்து, உடம்பும் உளமும் சோர்ந்துவிட்டவர். அண்ணன் சொன்ன அதிர்ச்சியான வார்த்தைகள் தம் வாழ்வென்னும் கோட்டையையே பிடித்துத் தகர்த்துவிட்டதென உணர்ந்தார். செய்வதறியாது திகைக்கலானார். முடிவில், தாம் இவ்வளவு காலம் உழைத்ததற்கேனும் ஏதேனும் கொடுக்கும்படி வேண்டினார், மன்றாடினார். எனவே, மூத்தவர் ஒரு தொகை கொடுப்பதாய் ஒரு மத்தியஸ்தர் முன் ஒப்புக்கொண்டார். ஆனால், யாது நிகழ்ந்தது? வடிகட்டிய அயோக்கியத்தனம்! ஒப்புக்கொண்ட தொகையையும் கொடுக்க மறந்துவிட்டார். அத் தொகையில் பின்னர் ஒரு பகுதியே கிடைக்கலாயிற்று, தமது உண்மையான வியல்பைக் காட்டுவதற்கு மேற்



குறித்தவொரு முறையை அனுசரித்ததோடு நின்றாரோ? அவர். இல்லை. தம்பியால் தமது வர்த்தகத்திற்கே கேடு நேர்ந்ததென்று வாய் கூசாமற் சொல்லித் திரிந்தார். தம்பி, தம்மைக் கலவாது வேறொரு கூட்டாளியுடன் வழக்குத் தொடர்ந்து பண விரயமும் தொல்லையும் கொணர்ந்துவிட்டதாய், எங்கும் பறை சாற்ற, எப்படித்தான் அவர் மனந் துணிந்ததோ? தமது பகைவருடன் சேர்ந்துகொண்டு, தம்பி தமக்குச் சதி செய்துவிட்டதாயும் பிதற்றினார். இன்னும் எவ்வளவோ! இவ்வளவையும், கண்மூடி யுலகும் நம்பி அழிவுக்கு ஆக்கந் தேடுகின்றது. என்னே, தன்னலப் பேயின் தாண்டவம்!

இது ஒன்று. இது போன்று இன்னும் இலட்சக் கணக்கான நிகழ்ச்சிகள் நாள்தோறும் உலகில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. இக் கொடுமை தனிப்பட்டோர் வாழ்வில் மாத்திரமன்றி சமூகம், பொருளாதாரம், அரசியலாகிய வற்றிலும் புகுந்துகொண்டு சமூக மக்களையே எரிவாயில் தள்ளித் தூடிக்கச் செய்கின்றது. இதற்குச் சான்றாக, பாரத மக்களாகிய நாம், நம்மில் ஒரு பகுதியை தீண்டாதார் என்று ஒதுக்கி, அவர் தம் உலக வாழ்வை துக்கமாக்கி வருவதும், மேலை நாட்டினர் நமது நாட்டில் உரிமைகொண்டு, இதன் செல்வ மெல்லாவற்றையும் சுரண்டிக்கொண்டு போவதையும், இப்போது உலகனைத்தும் நிகழும் நடுங்கத் தக்க போர் முறைகளையும் நினைவு கூர்வது, முறையே பொருந்தும்.

உலகப் பொதுவியல் இங்ஙனமாயினும் சிறப்பியலைப் பற்றிச் சீர்தூக்கிப் பார்ப்பது உவப்பளிப்பதாகும். சிறப்பியல்புடைய மக்கள்,

“எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன்றறியேன்.........”

என்பதின் கருத்தை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். அவர்கள், தாம் செய்யும் பணியின் மூலம் எவர்க்கேனும் இன்னல் விளைந்ததாய் அறிவாரேல், அனற் பட்ட மெழுகுபோல் அலமந் துருகுவர். எனவே, பொதுவியல் மக்களைப்போல் இவர்கள் மன மொழி மெய்களால் எவர்க்கும் தீங்கியற்ற மறந்தும் நினையார் என்பது தெளிவு. புத்தர் பெருமான் முதல் காந்தி யடிகள் ஈறாய்வந்த ஞானிகளெல்லாரும் இம் முறையையே மேற்கொண் டொழுகியவராவர். மேலை நாட்டிலும் இயேசு நாதர், மடையர்கட்காகவே தமது புனித மேனியை பொல்லாத துன்பம் விழுங்கட்டுமென்று விட்டாரன்றோ! அறிஞர் சாக்கரட்டீஸ் பதினெட்டாண்டுகள் மனத் தாங்கலால் தமது மனைவியுடன் பேச்சு வார்த்தையுமின்றி யிருந்தா ரென்றாலும் தாம், அவர் (மனைவிக்குச்) செய்யவேண்டிய கடமையை மறந்தாரோ? ரஷிய ஞானி டால்ஸ்டாய், பெருங் குடியில் வந்த சீமானா யிருந்தும் ஏழைபோல் ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தியது, அவர் மக்கள்பால் கொண்ட அளப்பரும் அன்பன்றோ காரணம்?

அறநெறி வழுவாது மக்கள் சீரிய வழியில் ஒழுக வேண்டுமென்று அறநூல்கள் அனைத்தும் சாற்றுகின்றன. ஆனால் பொதுவியல் புடையாரோ எதையும் மதியாது தம் குரங்கு மன வழிச் சென்று மீளாப் பழிக்கு ஆளாகின்றனர்.

மக்கள் பிழை புரியாது வாழ்தலே வேண்டும். அறியாது நேர்ந்துவிடும் பிழையை யுணர்ந்து விசனிக்கவாவது வேண்டும். அவ்வா றுணராவிடினும், தமது குற்றத்தை யெடுத்துக் காட்டித் திருத்த முன்வரும் மேலோர்களைப் போற்றவாவது வேண்டாமோ? அவர்கள் அங்ஙனம் செய்கின்றார்களில்லை. தங் குற்றத்தை யொப்புக்கொள்ள அவர்கள் ஒருபோதும் எளிதில் இணங்குவதே யில்லை. அன்பு காரணமாக, ஒழுக்கம் காரணமாக அறிவுரைகூற முன்வருவோரையே பழிக்கின்றனர். சில சமயத்தில் சதிசெய்து வஞ்சம் தீர்த்துக்கொள்ளற்கும் துணிகின்றா ரந்தோ!

அன்று அறவழி நின்ற பாண்டவர்களைச் சூதில் வென்ற துரியன் செருக்குற்றான். பத்தினித் தெய்வமான பாஞ்சாலியை அவைக்களம் கொணர்ந்து அவமானஞ் செய்யக் கருதி பணியாளனுக்கு ஆணை விடுத்தான். பணியாளனு விருப்பினும் இக் கொடியோன் ஆணையை யாற்றத் துணிவனோ? தயங்கினான். ஆனால், பாருள்ள மட்டும் பழி நாணாத் துரியன் அரி (சிங்கம்) யென்னச் சீறி யெழுந்தான். "ஐயா! விதுரரே, என்னே? வீணே பொழுது போக்குகின்றீர். நீரேனும் ஓடிப்போய் அவ் வெள்ளாட்டியை யிங்கே யிழுத்துவா" வென்று உறுமினான். ஆ! என்ன துணிகரம்? அவனுக்கு. விதுரர்! அதிலும் பேரறிவாளி; அவனுக்குச் சிறிய தந்தையா யிருந்தாலும் தந்தையின் இடம் பெற்றிருப்பவர்; எல்லோர் மதிப்பிற்கு முரியவர். அவன் கூறிய அடா மொழியை யெங்ஙனம் ஏற்பார்? அண்ணன் மகனுக்கு இதமாகச் சில அறிவுரை கூறலானார். என்னே அவம்! அவர் பொன் மொழி யென்னவாயிற்று? "புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்று." அவரைச் சீறினான் துரியன். என்ன ஐயா! நீர் உமது வாழ் நாளெல்லாம் எங்கள் வீட்டுச் சோற்றைத் தின்றுகொண்டு அந்தப் பாண்டவப் பயல்களுக்கே பரிந்து பேசுகிறீர். இப்படியே, உமது காலமெல்லாம் தொழிலாய் விட்டதே யென்று அம்பொத்த மொழிகளை அள்ளி வீசினான். இச்சுடுமொழி விதுரரோடு மற்றும் குழுமியிருந்த அறிஞருள்ளங்களையும் சுடலாயிற்று. இதை, தமிழகம் கண்ட தவமணி பாரதியார் தமது "பாஞ்சாலி சபதத்"தில்,

> "ஐவருக்கு நெஞ்சம்—எங்கள்
> அரண்மனைக்கு வயிறமோ விதுரா!"

என்று அவ்வளவு அழகாகத் துரியன் இழி மனப்பான்மையை இயல்பு கெடா வோவியமாய்த் தீட்டிக் காட்டுகின்றார்.

ஆனால், சிறப்பியலுடையார் பான்மையோ முழுதும் வேறாக மிளிர்கின்றது! திருவெண்காடர் வீடு திரும்பியபோது தமது பெருமனைக் கிழத்தியான சிவகலையம்மையார் கொணர்ந்து அளித்த பெட்டகத்தைத் திறந்து நோக்கினார். அதில், "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எழுதிய ஓலை நறுக்கும், ஓர் காதற்ற ஊசியும் இருக்கக் கண்டார்! அசைவற்று நின்றார் சிந்தனையில் ஒரு கணப் போது. மெய்யுணர்வு பெற்றார். பின்னர் "திருவருளிருந்தவா றென்னே?" யென்று அருளை வியந்து போற்றுவாராயினர்.

என்னே! பொதுவியலும் சிறப்பியலும் இருந்தவாறு.



# ஹாலிவுட்டின் ஜாலக் காட்சிகள்

★

(P. N. V.)

ஹாலிவுட் படங்களைப் பார்க்கிறோம். சில அருமையான காட்சிகள்; சில பயங்கரமான காட்சிகள்; நம் கண்களையும் நம்ப முடியாத சில காட்சிகள்—இவைகளெல்லாம் எப்படித்தான் எடுக்கிறார்கள் என்று ஆழ்ந்து யோசிக்கிறோம். உண்மையில் இவைகள்தான் மிக சுலபமான கட்டங்கள்; எளிதில் எடுக்கப்படும் இடங்கள். இதை நாம் அறியவில்லை. ஏன்? சில காட்சிகளைக் கண்டு பலரும் கொட்டகையிலேயே மூர்ச்சையாக விழுந்து விடுகிறார்களாம். இம்மாதிரி இடங்களை அகற்றிவிட வேண்டும் என்று சென்சார்களும் கட்டளை இடுகிறார்கள். இதெல்லாம் சுத்த பயித்தியக்காரத்தனமே. நம்மை மயக்க ஹாலிவுட்டில் இவ்வித காட்சிகளைப் புகுத்துகிறார்கள். அவைகளை எடுக்கும் விதத்தை அறிந்துகொண்டால் இதைக் கண்டுதானு பயந்தோம் என்று நாமே பிறகு வெட்கப் படுவோம்.

பெருங்கடல். படகு ஒன்றில் பெண் போகிறாள். பெரும் புயற்காற்று ஏற்பட்டுவிட்டது. கடலின் கொந்தளிப்பு. படகு அசைந்தாடுகிறது. பலமாக படகைவிட அதிகமாக அவள் மனமும் உடலும் துடிக்கிறது இவ்வித காட்சி யொன்றை எடுக்கவேண்டும். நமது நாட்டில் என்ன செய்வார்கள் தெரியுமா? கடலிலே படகை விட்டு அதில் அவளை இருக்கச் செய்வார்கள். கடும் புயற்காற்றில் எவ்வளவு ஆபத்தான காரியம் பாருங்கள். நடிகையின் தொல்லை எப்படி இருக்கும் என்பதை யோசியுங்கள். அவள் மறுத்துக் கூறமுடியாது. உடனே முதலாளியும் டைரெக்டரும் சீறி விழுவர். உயிருக்கு துணிந்துதான் அவள் நடித்தாகவேண்டும். நடிப்பாவது! இவ்வளவு மனக் கிலேசத்தோடு எப்படிதான் நடிக்க முடியும். ஏதோ படகில் நின்று தொலைந்து விட்டு வரவேண்டியதுதான். இதை எடுக்க வந்த கேமிரா மென்னின் பாடும் மிக கஷ்டம்தான். முதலில் அவரும் உயிருக்கு சிறிது துணிந்தாக வேண்டும். இக் காட்சியை எடுப்பதற்கும் மிகவும் திறமை சாலியாக இருக்கவேண்டும்.

ஹாலிவுட்டை எடுத்துக்கொள்வோம். "உண்மைக் கியாதி" (The Real Glory) என்றொரு படம். கிளாடட் கால்பர்ட் (Claudutte Colbert) நடிப்பது. மேலே குறிப்பிட்டுள்ள காட்சியொன்று அங்கே எவ்வ

ளவு சுலபமாக எடுத்தார்கள் என்பதை கவனிப்போம். மேடைமீது படகு. அதில் தொங்கிக்கொண்டு இருக்கிறார் கால்பெர்ட். பக்கத்தில் கொந்தளிக்கும் பெருங்கடல். படம் எடுக்கப்படுகிறது. படம் வெளிவரும் போது நாம் காண்பதென்ன? உண்மையாகவே புயற்காற்றில் படகில் போகும் பெண் அகப்பட்டுக்கொண்டதாக பார்க்க மயிர் சிலிர்க்கும் காட்சி தான். ஆனால் உண்மையில் எவ்வித ஆபத்தும் இல்லாமல் சுலபமாக எடுக்கப் படும் கட்டம்.

துப்பாக்கியில் சுடப்படும் காட்சி. நம் நாட்டில் இதை ஒருவிதமாக மழுப்பி விடுவார்கள். படத்தில் உண்மை தோன்றாது. துப்பாக்கியைப் படம் பிடித்து காட்டுவார்கள். வெடிக்கும் சப்தம் கேட்கும். சாவகாசமாக சுடப்பட்ட மனிதன் காயமில்லாமலும்கூட வீழ்ந்து மடிவான். இதைப்போல் ஏதாவதொரு மோசத்தைப் புகுத்தி விடுவார்கள்.

ஹாலிவுட்டில் இதைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டுகிறார்கள். துப்பாக்கி சுடப்படுகிறது. குண்டு வந்து பாய்கிறது. குண்டு என்ன? இரத்தம் போன்ற சிகப்பு சாயம் கொண்ட சிறு முட்டை. அவன்மேல் வந்து மோதிய வேகத்தில் உடைந்து சிறிது சாயத் தண்ணீர் வழியும். அப்பா என்று அந்த இடத்தைப் பிடிப்பான். முழு முட்டையும் உடைந்து போகும். அதிகமான இரத்தம் சொட்டும். பார்க்க பரிதாபம்; பயங்கரம்.

பளபளப்பான கூர்மை வாள். இதனால் அவன் வயிற்றில் குத்தப் படும். இரத்தம் பீறிட்டு அடிக்கும். பார்த்த மக்கள் கலங்குவார்கள். ஆனால் உண்மையில் நடப்பதென்ன? ஹாலிவுட்டில் கத்தி மின்னினபோதிலும் ரப்பர்தான். வயிற்றுக்கு முன் மடிந்து நின்றுவிடும். அதே சமயத்தில் பின் வைத்து பக்குவமாக கட்டியிருக்கும் மற்றொரு ரப்பர் கத்தி வெளி வந்து கொண்டிருக்கும். வயிற்றில் இரத்தம்போன்ற தண்ணீர் வைத்து ஒட்டி இருப்பார்கள். அதுதான் நம் கண்முன் பீறிட்டு அடிப்பது.

இவைகளைப் போன்ற ஜாலக் காட்சிகள் அநேகம் ஹாலிவுட்டில் எடுக்கப் படுகின்றன. இதை தமிழ்நாட்டிலும் பின்பற்றுவார்களா! இப்பொழுது இல்லை யென்றே தெரிகிறது. பாவம்! நமது டைரக்டர்களில் பலரின் விஷயம் தெரிந்துதானே, அவர்கள் ஏன் இதையெல்லாம் பற்றிக் கவலைப் படப் போகிறார்கள்! கவலைப்பட்டால்தான் என்ன பயன் ஏற்படப் போகிறது! என்னவோ எதிர்காலத்தையாவது நம்புவோம். விஷயமறிந்த கண்ணியமான பெரும் டைரக்டர்கள் தோன்றுவாராக! அவர்கள் மூளை விசாலமடையட்டும். ஹாலிவுட்டின் ஜாலக் காட்சிகள் இந்தியாவிலும் சர்வ சாதாரணமாக தோன்றுமாக!



# வித்தியார்த்தி

(K. சேஷகிரி அய்யா, பி. ஏ.,)

★

1. கழித்தேன் காலம் கழிந்தோர் மாட்டே!
எங்கு நோக்கினும் அங்கெலாம் பண்டைப்
புலவர்க ளென்னுடன் கலகல வென்று
அல்லும் பகலு மெல்லா நாளும்
என்னுடன் பேசும் அன்பர்க ளாவர்.

2. அன்னவ ரோடு எந்நேரமும் நான்
இன்ப மெய்துவேன்; துன்பம் வந்துற்றால்
அவரிடம் சென்றுஎன் கவலையைத் தீர்ப்பேன்;
இத்தனை யெல்லாம் நித்தமும் நினைக்க
நன்றியாற் கண்ணீர் சிந்திடு மெனக்கே.

3. மறைந்தவர் மாட்டே யுறையுமென் சிந்தனை;
வதிந்தே னவருடன் அதிக ஆண்டவர்
நற்குணம் வியந்து துற்குணம் கடிந்துநான்
கலந்து வாழ்வேன். நலத்திலும் நலிவிலும்
அடக்க மென்ற படிப்பினைக் கற்றேன்.

4. எஞ்சிய நாளுமத் துஞ்சியோருடன் தான்
அன்னவ ரிருப்பில் துன்னி யிருப்பேன்
வரும்நா ளெல்லாம் இருப்பே னவரோ
டுலகிலென் பெயரு மிலகிடும் படியாய்த்
துகளினி லழியாப் புகழெய் துவனே.

(Southey இயற்றிய 'Scholar' என்பதைத் தழுவி எழுதப்பட்டது.)

# அண்ணல் காட்டிய ஆண்மை

(மதி–ரா. நமசிவாயம்.)

## மலையின் மாண்பு

ஆ! எவ்வளவு உயரமான மலை! அதன் உச்சியில் கரிய மேகங்கள், எப்பொழுதும் படிந்து, உறங்கிக்கொண் டிருக்கும். பாலொத்த வெள்ளருவி, கற்பாறையினூடே பாம்பென வளைந்து, சல சல வென ஒலித்து, ஓடிக்கொண்டிருக்கும். இதைப் பார்த்தால் எவ்வளவு அழகாக இருக்குந் தெரியுமா? அவ் வருவியின் இரு புறத்திலும், மந்தியு மறியா மணிப் பூஞ்சோலைகளும், தீந்தேன் துளிக்கும் மலர்ப் பொங்கர்களும் நிறைந்திருக்கும். அச் சோலையிலுள்ள உருவத்தால் நீண்ட உயர் மரங்களெல்லாம், பருவத்தாலன்றியும் பழுத்துப் பழுத்து, விளங்குவதைப் பார்த்தால், இஃதென்ன வியப்பு! என்று எண்ணுவார்கள். இளந்தென்றல் மலர்ப் பொங்கரிற் புகுந்து, மலர்களிலுள்ள நறிய பராகத்தை அள்ளி வீசி விளையாடுவது, கலியாண காலத்தில் கந்தப்பொடி தூவுவதை ஒத்திருக்கும். சோலையின் பக்கத்தே உள்ள தினைப்புனங்களில் குறமகளிர் "ஆயோ" வென கிளி கடியும் மெல்லோசையும், புனத்தையழித்தென யானை முதலிய விலங்குகளைத் தெழித்தோட்டும் கொல், அடி, பிடி, துரத்து, குத்து, வெட்டு, எறி, எய், என்று கானவர் கூவும் வல்லோசையும், யானையென விளங்கும் கற்களினூடே கான்யாறு பாயும் கல்லோசையும், குறச்சிறுவர் தொண்டகம், துடி முதலிய பறைகளை முழக்கும் ஒல்லோசையும், மழை முழக்கொடு மாறுகொண் டொலிக்கும். மலையெங்கணும் இயற்கை யன்னை பச்சைப் பசேலெனப் புன்னகை புரிந்துகொண் டிருப்பாள்.

எங்கு பார்த்தாலும் பசிய தினைப்புனங்கள். எப் பக்கம் நோக்கினும் சோலைகள், எத் திசை திரும்பினும் பறவைகளின் இன்னிசை, எவ்வயினும் நீரொலி. அடடா! என்ன அழகு! என்ன அழகு!! தெரியாமலா புலவர்கள் மலையைச் சிறப்பித்துப் பாடுகின்றனர்! தமிழ்த் தெய்வமாகிய முருகன் ஒன்றுந் தெரியாமலா மலையைத் தனக்கு வாழிடமாகக் கொண்டான்! மலையின் அளக்கலாகா அளவும் பொருளும், அளக்கலாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையும், என்னவென்று சொல்லுவது! அழகன் வாழிடம் அழகில்லாமலா இருக்கும்? இதையெல்லாம் காணும்பொழுது நமக்கு இங்கேயே என்றும் இருந்துவிடலாமா என்று தோன்றுகிறதல்லவா!

இவ்வளவு சிறந்த இந்த மலையின் சோலையில் ஓர் சிறந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது. அதைக் கவனித்துக் கேளுங்கள்.

## செல்வியும் தோழியும்

பொதுவாக மலையின் சோலையில் விளையாடுவது யாவருக்கும் விருப்பம் அல்லவா! வேனிற் காலத்தில் பெண்கள், "இளமான் கன்று"போல்



துள்ளித் துள்ளிக் குதித்து விளையாடுவது, எவ்வளவு அழகு! ஆனாலும் செல்விக்கும் அவள் தோழிக்கும், சுனையாடல், பூக்கொய்தல், சோலையில் விளையாடல் இவைகளில் ஒரு தனி விருப்பம்! மட்டற்ற மகிழ்ச்சி!!

செல்வி, யாரென்று கேட்கின்றீர்களா? அவசரம் வேண்டாம் இதோ சொல்லிவிடுகிறேன். செல்வி இந்த மலையிலிருக்கும் ஓர் சிற்றூரிலுள்ள சிலம்பனின் மகள். அழகு. அறிவு, குணம் இவற்றில் யாவரினும் சிறந்தவள். செல்வி, தங்கட்கு ஒரே மகள்; ஆதலால் மிகச் செல்வமாக அவள் பெற்றோர் வளர்த்து வந்தனர். செல்வியும் அவள் தோழியும் இந்த மலைச் சோலையில் வந்து விளையாடுவது வழக்கம்.

வழக்கம் போலவே செல்வியும் அவள் தோழியும் இங்கு விளையாட வந்தார்கள். வண்டல், பொய்தல் முதலிய பற்பல விளையாட்டுகளை விளையாடினார்கள். பூக்கொய்தார்கள். ஒருவரையொருவர் பூக்களால் அடித்துக் கொண்டனர். ஆனால் அவ் விளையாட்டுகளெல்லாம் அவர்கள் மனத்திற்குக் கொஞ்சமும் மகிழ்ச்சியைத் தரவில்லை. சற்றும் களைப்பில்லாமல் விளையாடுபவர்கள், அன்று விளையாடிய சிறிது நேரத்திற்கெல்லாம் சோர்ந்துவிட்டனர். அன்று யார் முகத்தில் விழித்தார்களோ தெரியவில்லை! அவர்கள் மனம் விளையாட்டின்மீது செல்லாது, எங்கேயோ சென்றுகொண் டிருந்தது. அதற்கேற்றாற்போல் நிகழ்ச்சியொன்று நிகழ்ந்தது. கோள் நிலையோ, சகுன பலனோ, யார் அறிவார்?

## ஆபத்து

திடீரென்று ஓர் பெரிய இடி முழக்கம்போல் மதயானை யொன்றின் பிளிறல். மலை யதிர்ந்தது. திசைகள் கலங்கின. செல்வியும் தோழியும், நடுநடுங்கினர். இச் சமயம் அந்த மதயானையும், சினங்கொண்டு, வீறிட்டு, ஓடிவருகின்றது. பெண்பாவையர் இருவரும் பயந்து ஓடுகின்றனர். அவர்களைக் கண்ட யானையும் துரத்தத் தொடங்கியது. என்ன செய்வார்கள் பாவம்! புகலிடமின்றித் தவித்தார்கள். ஆ! எங்களை இப்பொழுது காப்பாற்றுபவர்கள் யார்? எனக் கதறுகின்றனர். பஞ்சினும் பதைக்கும் அப் பாவையரின் மெல்லடி, பாறகற்களில் படும்பொழுது என்ன பாடுபடும்! அதையும் கவனிக்காமல் ஓடுகின்றனர். அட! பரிதாபமே!

## அஞ்சேல்!

அஞ்சேல்! என்ற ஓர் தீரச்சொல். உடனே செல்வி அத் திசையை நோக்கினாள். கையில் வேலுடன் ஓர் வீரன் வந்துகொண் டிருந்தான். கால்களில் கழல் ஒலித்துக்கொண் டிருந்தது. ஆண் சிங்கம்போல் பெருமிதத்துடன் வந்துகொண்டிருந்த அக் கட்டழகன் செல்வியைப் பார்த்தான். செல்வி உடனே ஓடி அவனைக் கட்டிக் கொண்டாள். அவனும் அவளை தன் இடப்பக்கத்தில் அணைத்துக் கொண்டான். பயத்தால் அவள் கண்கள் கலங்கின. கண்ணீர் கண்ணிலுள்ள மையைக் கரைத்துக்கொண்டு வந்தது. இதற்குள் யானையும் அவனை நெருங்கிவிட்டது. தனக்கு முன்பின் அறியாத ஒருவனைக் கட்டித் தழுவுதல் கன்னிக்கு அழகா? என்று கேட்கின்றீர்களா! ஆம்! நல்ல கேள்விதான்! ஆனாலும், "ஆபத்திற்குப் பாவமில்லை யல்லவா!"

யானை, தன்னை நெருங்கி எதிர்ப்பதையும் பொருட்படுத்தாமல் அடைக்கலம் புகுந்த கன்னியைக் காக்க எண்ணித் தன் வலக் கையில், வேலை வாங்கி அஞ்சாமல் அதன் மத்தகத்தில் குத்தினான். குத்திய புண்ணிலிருந்து செந்நீர் வேலின் வழியாக மிக விரைவாய் அவனுடம்பின் வலது பக்கத்தில் பாய்ந்தது. அதனால் அழகனின் உடம்பு வலப் பக்கத்தில் சிவந்தும், செல்வி யழுதலால் அவள் கண்களிலிருந்து உண்டான மையுண்ட நீர் பட்டு இடது பக்கம் கருமையாகவும் தோற்றியது. அக் காட்சியை நீங்கள் பார்த்திருப்பீர்களானால், நிச்சயமாய் * திருச்செங்கோட்டை ஒரு முறை நினைத்துத்தான் தீரவேண்டும்! யானையும் வீறிட்டுக்கொண்டு கீழ் வீழ்ந்திறந்தது. யானை இறந்தாலும் செல்விக்கு மாத்திரம் பயத்தால் நெஞ்சு துடித்துக்கொண்டுதான் இருந்தது.

### வணக்கம்!

வணக்கம்! உங்கள் நன்றியை என்றும் மறவோம். சென்று வருகின்றோம்! என்று தோழி நன்றி கூறினாள். பின்னர் அக்கன்னியர் இருவரும் தங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டனர். ஆனால் அந்த அழகனை செல்வி தன் குறும்பு நிறைந்த கண்களால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு சென்றாள்!

உம்........! என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு அங்கேயே நின்றுகொண்டிருந்தான் அழகன்.

### உற்றது உரைத்தல்!

அன்று மாலை சோலையில் செல்விக்கு நிகழ்ந்ததை தோழி தாயிடம் சொல்லத் தொடங்கினாள்.

அன்னையே!

இம் மலைச் சோலையில் யானும் செல்வியும் விளையாடிக்கொண்டிருக்கையில் மதங்கொண்ட யானை யொன்று பாய வரும்போது, நின் மகள் அலறிக் கூவ, அப்போது அவ்வழி வந்த ஓர் வேந்தன், விரைந்து வந்து, அஞ்சேல்! என்று அவளை இடப் பக்கத்தில் அணைத்துக்கொண்டு, வலது கையால் வேலை வாங்கி மேல்வந்த கையோடு கூடிய யானை முகத்தில் அழுத்திப் பொருதபோழ்து, யானைப் புண்ணிலிருந்து அலைபோல் பெருகும் இரத்தம், வலப்பால் நனைத்தலால் வலப்பால் சிவந்தும், அவள் அழுதபொழுது, கண்ணீர் மையைக் கரைத்துக்கொண்டு வருவதால், இடப்பால் கறுத்தும், தோன்றியதால் அவ்வண்ணலை ஆணுருவும் பெண்ணுருவுங் கொண்ட சிவனென்று பயந்தேன்! என்று கூறுகின்றாள். அவள் அவ்வாறு கூறும்பொழுது

"மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்"றென் மாறை வெற்பின் அரசனின் அன்பும், அந்த வார்த்தைகளோடு உறவாடுகின்றதல்லவா! வாணன் தன்னாட்டை எவ்வளவு அன்புடன் காக்கின்றான்! அவன் ஆளுகையில் ஒருவருக்கும் குறை யொன்று மிருக்காது! "ஒரு குலத்துக் கொரு

* "திருச்செங்கோடு" தலத்தில் சிவபெருமான் அர்த்தநாரீசுரர் என்னும் வடிவுடன் விளங்குகின்றார்.



நீதி" செய்யும் அரசர்களைப் போலாது, பழி, பாவம் முதலியவற்றிற் கஞ்சி அரசு நடாத்துவான். தன்னுயி ரென்னவே மன்னுயிர் தமை யெண்ணும் நல்லியல்பினன் என்பவைகளை யெல்லாம் சொல்லாமற் சொல்லிச் சுட்டுகின்றாள். அரசன் மாத்திரமல்ல, "அவன் குடிகளும் அத்தகையரே" என்பதை குறிப்பினால், தங்களைக் காப்பாற்றிய அழகனின் வீரச் செயல்களையும் ஒருவாறு உணர்த்துகின்றாள். அடுத்தபடியாக மொழிகையில்,

"அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சினம்......"

என்று தான் கொண்டுள்ள சிவபெருமா னன்பையும் சேர்த்துக்கொள்ளுகின்றாள். இதனால் இவளுடைய தெய்வ அன்பும் புலனாகின்றதன்றோ! அரசனின் அன்பு முதல், இரண்டாவது கடவு ளன்பு பிறகு வெகு சாந்தமாக,

"..........................................அஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந்தோயப் பொருதவன்றே"

என்று நடந்தவைகளைக் கூறுகின்றாள் பாருங்கள்! இப்பொழுது மேற்கூறியவைகளை யெல்லாம் புலவரின் மூலமாகப் பார்ப்போம்.

மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென் மாறை வெற்பின்
அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதவன்றே.

எவ்வளவு அழகான பாட்டு! என்னே பண்டைப் புலவரின் மாட்சி! இதைப் போல் இன்னொரு பாடலையுங் கேளுங்கள்.

நீர்மை யிடம்வே னெடுவலத்தி னார்குருதி
நீர்மை *சிகிக்குன் றன் னின்றட்டங்—கேர்மை
ஒளிவிஞ்சு மம்மையப்ப னொத்தான் றாத்து
களிர்ஞ்சு கன்னியுடைக் கண்.

பண்டைத் தமிழ் மகளிரின் தன்மைகளை எவ்வாறு கூறுகின்றார். தோழி முதலில் அரச னன்பு, அடுத்தபடி "தென்மாறை வெற்பு" என்று கூறும் தனது நாட்டன்பு, பிறகு கடவுளன்பு, முடிவாக அன்று நடந்தவைகள், இவைகளை யெல்லாம் முறையாகவும், சுருக்கமாகவும், நயமாகவும் கூறுகின்றாள். திடீரென்று செல்விக்கு நிகழ்ந்த துன்பத்தைத் தெரிவித்தால், தாய் ஒருவேளை திடுக்கிட்டாலும் திடுக்கிடுவாள். அதனால், அதை முதலில் கூறாமல் முதலில் சொல்லவேண்டியவைகளை, முறையாகச் சொல்லிப் பின்னர் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகின்றாள். எவ்வளவு முன் யோசனை!

அரசன், ஆளுந்திறனைக் கூறும்பொழுது காக்கின்றான் என்று சொல்லாமல் "வளர்க்கின்றான்" என்று சொல்லுகின்றாள். வளர்ப்பது தாய் தந்தையரின் கடமையல்லவா! அதனால் அரசன், ஆளுகை மாத்திரம் செய்வதல்லாமல் தாய் தந்தையு மாகின்றான் என்று கூறுவதில் எவ்வளவு உள்

* சிகிக்குன்று = மயிலமலை.

# சாதிப்பேய்

(அ. அரங்கராஜன்.)

ஒரே இனமாய் இருந்த மக்கள் தங்களையுந் தங்கள் நாட்டினையும் பகைவர்களினின்றுங் காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தம் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு வருணத்தார்களாகப் பிரிந்து தங்கள் தங்கட்குரிய தொழிலியற்றி வந்தார்கள். அக்காலத்து அவர்களுக்குள் வேற்றுமையே கிடையாது. ஒரு தொழிலாளருக்கும் மற்றொரு தொழிலாளருக்கும் நெருங்கிய நட்பு உண்டு. பிற்றை நாளிலே கலியின் கொடுமையாலோ—கடவுளின் திருவிளையாடலாலோ—தொழிற் பிரிவு பிறப்புப் பிரிவாக மாறிற்று. தொழில்பற்றி எழுந்த பிரிவு பின் பொய்யர்களின் கூற்றால் பிறப்புபற்றி எழுந்ததாயது. ஒவ்வொன்றிற்குள்ளும் நாளடைவில் உட்பிரிவுகள் பல எழும்பின. இச் சமயத்து எத்தனைச் சாதிகள் உள்ளன? எண்ணவும் முடியா. ஒவ்வொன்றுந் தலைவிரித்து தானே பெரிய சாதி எனக் கூவி யாடுகிறது. இதனால் அவைகட்குள் ஏற்படும் வாய்ச்சண்டை முற்றிப் பின்கைச் சண்டையாய் மாறுகிறது. அத்துடன் முடிவுறாது நீதிஸ்தலம் செல்கிறது. பட்டம் பெற்ற வக்கீல்கட்கும், சட்டம் கற்ற குமாஸ்தாக்கட்கும், நியாயம் வழங்கும் மன்றத்திற்கும், நெற்றி வியர்வை நிலத்திற் சொட்டச் சொட்ட விரைந்து நடந்தோ குனிந்து வேலை செய்தோ சம்பாதித்த ஊதியத்தை—ஈட்டிய பொருளைக்—கொட்டிக் கொடுக்கச் செய்கிறது. அந்தோ! ஒரு காலத்து அந்நிய நாட்டினின்று இங்குற்ற இஸ்லாம் மதத்தார்களுடன் நட்புகொண்டு எள்ளளவும் எவ்வித வேற்றுமையுமின்றி யிருந்த நாடு இன்று அடைந்துள்ள நிலைமை தான் என்னே! என்னே!! "சாதியிலே மதங்களிலே சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்! அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே! நன்கலவே! இருட்சாதி தத்துவச் சாத்திரக்குப்பை இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப்

---

ளுறை பொதிந்திருக்கின்றன! இதனால்தான் அடுத்த அடியில் அம்மையப்பரைக் கூறுகின்றாள் போலும்!

செல்வியை இடப்பக்கத்தில், அணைத்துக்கொண்டு அழகன் யானையுடன் பொருதபொழுது, உண்டாய தோற்றத்தைக் கண்டவுடன் அக்காட்சிக்கு வேறு உவமானங் கூறாமல் "அண்ணல் காட்டிய அம்மையப்ப வடிவம்," அவள் நினைவுக்கு வந்ததென்றால் தம் தமிழ் மகளிரின் சிவ அன்பை என்னவென்று கூறுவது! மேற்கூறியவற்றால் தமிழ் மகளிர் அரசனன்பும், நாட்டன்பும், கடவுளன்பும், சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மையு முடைய ரென்பதூஉம், "அண்ணல் காட்டிய ஆண்மை"யை நம் தமிழர் பெற்றிருந்தனர் என்பதூஉம், வெள்ளிடைமலைபோல் தெள்ளிதின் விளங்குகின்றதல்லவா!



போடுங்கள்; மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கு எல்லாம் குழிக்கொட்டி மண் மூடிப்போடுங்கள்" பட்டாங்கிலுள்ளபடி சாதி இரண்டே. இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர். எனவே பிறப்பால் சாதி கற்பிக்கப்படவில்லை என்பதை யாவரு மறியுங்கள். எல்லோரும் ஓர் இனம்; எல்லோரும் ஓர் குலம்.

## தீண்டாமை

தெய்வத் திருவருள்பெற்ற பெரியோர் நூலில் தீண்டாமை என்பதே இல்லை. இடை நடுவில் பொய்யர்களாற் கற்பிக்கப்பட்டுள்ளது. தாங்கள் உயர்ந்த வகுப்பார் என எண்ணுபவர் உள்ளத்தூடேதான் அத் தீண்டாமையெனும் மாசு படிந்துள்ளது. 'பாபத்தை வெறு; பாபியை நேசி' என்பது இயேசுநாதர் வாக்கு. தீண்டாமையை—பொய் களவு கள் காமம் கொலை முதலிய தீக்குணங்களை—நீக்கு; வெறுத்துத் தள்ளு. ஆயின் அத் தீக்குணமுடையோரை நேசி. காலதேச வர்த்தமானங்களை யுத்தேசித்து தீண்டாமையை அறவே நீக்கவேண்டும். கோவில் குளம் தெரு முதலிய பொதுவிடங்களிலும் அவர்கட்கிடங் கொடாதது என்? எறும்புஞ் சிலந்தியும், பாம்பும் யானையும், எலியும் புலியும் வழிபட்ட கடவுளை நம்போன்ற மனிதர் வழிபடக் கூடாதெனின் அவர்கள் எறும்பினுஞ் சிலந்தியினும், பாம்பினும் யானையினும், எலியினும் புலியினுங் கீழ்ப்பட்டவர்களா? கடைப்பட்டவர்கள் கொல்! "இலங்குயிரனைத்தும் உடலனைத்தும் ஈசன் கோயில்கள்" எனும் பெரியோர் வாக்கிற் கிணங்க யாவரிடத்தும் ஒத்த அன்போடு தீண்டாமையைத் தீயிலிட்டுக் கொளுத்தி யொழுகுமின். ஒருவர்க்கொருவர் அன்போடு ஒழுகின் உரிமை வாழ் வெய்தல் திண்ணம். 'மனிதர் யாரும் சரி நிகர் சமானமாக வாழ்கவே!'

பெண் அடிமை பெரிதும் விசனிக்கத் தக்கதே. பெண் இன்றி ஆண் இல்லை; ஆண் இன்றி பெண் இல்லை. இவ்விரு பாலருக்கும் உள்ள தொடர்பு நகத்திற்கும் தசைக்கும் உள்ள தொடர்புபோன்று அவ்வளவு அந்நியோன்யமானது. இருபாலருங் கருத்தொருமித்தே வாழ்வெனும் வண்டியை இழுத்தனரென பைந்தமிழ் நூல்கள் பகரா நிற்கின்றன. அவ் வண்டியை அவர்கள் சேய்களும் பின்னின்று தள்ளி வண்டி ஓட உதவினர். அக்காலத்துப் பெண் தனக்குரிய மணவாளனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தாள். இதனையே சுயம்வரமெனச் செப்பினர். இதனால் என்ன புலப்படுகிறது? பெண்டிர், தன் வாழ்க்கைக்குரிய கணவனைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ள போதுமான புத்தி விசாலத்தை—கல்விப் பெருக்கைப் பெற்றிருந்தனர் என்ற சூட்சுமம் புலப்படுகிறது. ஒத்த வயதும் ஒத்த செல்வமும், ஒத்த கல்வியும் ஒத்த உடல்நலமும் உடையவர்களே அக்காலத் தம்பதிகள். அக்காலப் பெண்மகளிர் புலமை மிக்கவர்கள்; கற்பினுக்கரசிகள்; தீரர்கள்; தியாகிகள்; ஞானிகள். ஆடவர்கள் தற்போது பெண்களைச் சமையலறையில் அடிமைப்படுத்திக் கொள்வதில் கருத்தைச் செலுத்தாது ஆடவர்கட்கு எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமையையும் அவர்கட்குச் சமமாக வழங்கவேண்டும். ஆடவர்களே! பெண்டிரைப் பழிக்காதீர்கள்; இழிக்காதீர்கள்; பெருமை படுத்துங்கள். 'ஆண்களோடு பெண்களும் சரிசமானமாக வாழ்கவே!'

நம் நாட்டில் அகப்படும் பருத்தியை நூல்நூற்று நெய்து உடுத்துவதே தலையாய—சுத்த சுதேசியம். நம் நாட்டுப் பஞ்சு கடல் கடந்து அந்நிய நாடுற்று நூலாக்கப்பெற்று பின் நம் நாடடைந்து ஆடையாக நெய்யப்பெறுதலை ஆதரித்தல் இடையாய சுதேசியம் நம் நாட்டுப்பஞ்சு அயல் நாட்டிற்குக் கொண்டு போகப்பட்டு ஆடையாய் ஆக்கப்பெற்று இங்கு உபயோகத்திற்கு வரின் அதை ஆதரித்தல் கடையாய சுதேசியம். இங்ஙனமே நம் நாட்டில் அகப்படும் மூலப் பொருள்களையும், தாதுப் பொருள்களையும், அவைகளைக்கொண்டே நம் நாட்டில் செய்யப்பட்டவைகளை ஆதரித்தல் சுத்த சுதேசியம் எனப்படும். அன்னிய நாட்டுப் பட்டாடை உடுத்துப் பஸ்ஸில் செல்வதைவிட நம் நாட்டுக்கந்தை-கதர் அணிந்து கால்நடையாகச் செல்வதே சாலச் சிறந்ததாகும். தன்னைப்பெற்ற தாயும் உற்ற பல்லாயிரக்கணக்கான சகோதர சகோதரிகளும் பசிவாய்ப்பட்டிருக்க பொருளை அள்ளி அள்ளி அந்நியனுக்குத் தானம் வழங்கும் மூடச் செய்கை போற்றற்குரியதா? தான் பெற்ற வருவாயைக்கொண்டு ஈன்ற தாயையும் தமையன்மார்களையும் ஓம்பிவரும் வாழ்வு போற்றற் குரியதா? நீங்களே சொல்லுங்கள். அடிமை வாழ்வெய்திய எவனும் ஆடம்பரத்தால் தன்னை அலங்கரித்துக்கொண்டாலும் அடிமை அடிமைதானென்பதை மறவாதீர்கள். சாராப்புக் கடையிலிருப்பினுஞ் சாணியில் கிடப்பினுங் குண்டுமணி குண்டுமணிதான். எனவே ஆடம்பரத்தை அறவே அகற்றி எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டு சுத்த சுதேசியத்தை ஆதரியுங்கள்.

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

100-பக்கங்கள் கொண்ட விக்கிரம வருஷத்திய

(நேத்திர ஜீவ நட்சத்திராதி சாந்திர ஸௌரமான) சர்வ முகூர்த்த

"ஆனந்தபோதினி"

சுத்த திருக்கணித பஞ்சாங்கம்.

நமது வானசாஸ்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாஸ்திரக் கணிதத்திலும் திறமைவாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன், பி. ஏ. (B. A. Mathematics) அவர்களால் சுத்தமாக இப்பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

தனிப் பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபாற்கூலி 1¼-அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

6-பஞ்சாங்கங்கள் அணா 11½. 12-பஞ்சாங்கங்கள் ரூபா 1—6—0.

25-பஞ்சாங்கங்கள் ரூ. 2—10—0.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ, 167, மதராஸ்.

# ஞானசிந்தாமணி

—(o)—

(காசி-ஸ்ரீ. நீலகண்ட சுவாமிகள்.)

★

## சட்சமாதி.

அந்த வுபாதிக்கநுசாரிகளான திரிசியாநுவித்த, சத்தாநுவித்த, நிர்விகற்பமெனப் பாஃகியாப்பியாந்தரங்க பேதத்தால் சட்சமாதிகளுண்டு. அவற்றுள் கடாதி விஷய சமூகத்துள், ஒன்றனைக் குறித்து அதனுடைய நாமரூபமான மாயாங்கிசங்க ளிரண்டையும் பிரித்து அதனுள் அஸ்திபாதிப்பிரிய மென்னும் சச்சிதாநந்தப் பிரம்மாங்கிசத் திரயங்களை, அநுசந்தாநஞ் செய்வதே பாஃகிய திரிசியாநுவித்த சவிகற்ப சமாதி. அகண்ட சச்சிதாநந்தாத்துவிதிய சுவரூபம் பிரம்மமென்று தியானிப்பதே பாஃகிய சத்தாநுவித்த சவிகற்பசமாதி. இந்தச் சமாதி துவயாப்பியாச பலத்தால் பிரம்மாநந்தஸ்தாநத்தில், மநோமக்கிநமாய் நிஸ்தரங்க சமூத்திரம்போல நிச்சலாத்துமகமா யிருப்பதே பாஃகிய நிர்விகற்ப சமாதி. மநோகத காமசங்கற்பாதிகளே திருசியம். நான் இதற்குச் சாக்ஷிகனென்னும் அநுசந்தானமே அப்பியந்தர திருசியாநுவித்த சவிகற்ப சமாதி. அசங்க சச்சிதாநந்த சுவயம் பிரகாசமே நானென்று சிந்தனை செய்வதே அப்பியந்தரசத்தாநுவித்த சவிகற்ப சமாதி. அந்தச் சுவாநுபூதிசுகாவேசத்தால் திருசிய சப்த மிரண்டும் விட்டு, நிவாத தீபம்போல நிச்சிந்தரூபமா யிருப்பதே அப்பியந்தர நிர்விகற்பசமாதி. இந்தச் சட்வித சமாதிகளினின்று கழித்த யோகீச்சுரன் மநம் எங்கெங்கே சஞ்சரித்ததோ அங்கங்கே சமாதியாம்.

## ஞாநபல சதுஷ்டயம்.

துக்காபாவ, சர்வகாமாப்தி. கிருதகிருத்தியத்துவம், பிராப்தப்பிராப்பியத்துவமென ஞாநபல சதுஷ்டயமுண்டு. அவற்றுள் துக்காபாவம் இகபரலோக பேதத்தால் துவிதமாம். அவற்றுள் தூலசரீரத்தில் வியாதி துர்க்கந்தத்துவ குரூபத்துவாதிகளும், சூக்ஷமதநுவில் காமக்குரோதாதிகளும், காரணதேகத்தில் அந்த வியாதியாதிகளுக்குப் பீசபூதமான சமஸ்காரங்களென்னும் திரிவிதசந்தாபமே, இகலோகதுக்கம். மித்தியாத்மக மாயாகாரியமான தூலசரீராதிகளை வேறு செய்விக்கப்பட்ட அத்துவிதியனை பிரத்தியேகாத்தும ஞாநத்தின்மேலே பரமார்த்தமான போக்கிய போக்துருக்க ளில்லாமையால், அந்தத் துக்கத்திரய சம்பந்தமில்லா திருப்பதே, இகலோக துக்காபாவம். சுகிர்த மெப்படி வருமோ, துஷ்கிருத மெப்படிப் போமோ வென்னு மிந்தச் சிந்தனையே பரலோக துக்கம். சம்மிய ஞாநாநந்தரம் கமல பத்ரோதகம்போல அந்தக் கர்மத்துவயங் கூடுவதில்லை. எப்படியெனின் காஷ்டத்தில் நெருப்பிருக்கும். அந்நெருப்பில் காஷ்டமிராததுபோல கர்மத்துவய விவகாரத்தில் விவேகியிருப்பன். அவனுள் அந்தக் கர்மத்துவய விவகாரமில்லாமையாலும், தாவாநலம் பொருந்தப்பட்ட பர்வதத்தை ஒரு பக்ஷி மிருகங்களும் சேரா

ததுபோல ஞானாக்கினி சொரூபனை அச்சுகிர்தாதிகள் பொருந்தாமையாலும், அந்தச் சிந்தனை தோன்றாதிருப்பதே பரலோக துக்காபாவம். சர்வைச்சுவரிய சம்பந்நனான சார்வபௌமாதி யிரணியகர்ப்பாந்தம் உத்தரோத்தரமாயிருக்கத் தக்க சதகுணோத்தரானந்தங்களெல்லாம் நிவர்த்தனான விவேகிக்குண்டாயினும், அந்த வானந்தங்களெல்லாம், பிரம்மாம்சங்களாய் அகண்டானந்தம் சித்திக்கையால், அதுவே சர்வகாமாப்தி. அந்த விவேகிக்குத் தத்துவ ஞானமாகிறதற்கு முன் இகலோக சம்பந்தமான இஷ்டப்பிராப்தி அநிஷ்ட நிவர்த்திப் பொருட்டாகக் கிருஷிவாணிச்சியாதிகளும், சுவர்க்காதி சித்திப் பொருட்டாக யாகோபாசனாதிகளும், மோக்ஷ சாதந ஞான சித்திப் பொருட்டாகச் சிரவணாதிகளுமென்னும், திரிவித கர்த்தவ்வியமாயிருக்கும். இந்தத் தத்வ ஞானமான பின் சமுசார இகபோக இச்சையில்லாமையால் கிருஷி முதலான வியாபாரமுமில்லை. கவாக்ஷகத சூரிய கிரணத்தில், காண்பிக்கிற பரமாணுக்கள், வெளியிலிருக்கிற பிரகாசத்திற் காண்பியாததுபோல, அஞ்ஞானிக்கு விஷயமான கர்மமெல்லாம், சம்யக் ஞானமத்தியையில் தோன்றாமையால், யாகோபாசனாதிகளும், அநுஷ்டிக்கத் தக்கதில்லையாய்ப், பிரம்மானந்த சாக்ஷாத்காரமாகையால் சிரவணாதிகமெல்லாம் கிருதப்பிராயமாம். இதுவே கிருதகிருத்தியத்துவம், தனக்கு விசிஷ்ட புண்ணிய பரிபாக முமுக்ஷுத்துவ குருபாத சாஸ்திர சிரவண ஆத்துமானாத்தும் விவேக அஞ்ஞான நிவர்த்தி, ஆத்துமசாக்ஷாத்கார சமுசார துக்க நிவர்த்தி, நிசானந்தாதிசித்திகளே பிராப்தப் பிராப்பியத்துவம்.

வித்தியாத்துவயம்.

ஜீவன்முத்தி, விதேக கைவல்லியமென, வித்தியாத்துவயமுண்டு. அவற்றுள் விவேகிக்கும் அகமாத்துமருக்கும், அந்நியோந்நிய சம்பந்த லக்ஷணம், சமானமா யிருந்தாலும், விவேகிக்கு இதயகிரந்தி யெல்லாம், சிதைந்தமையால், பரசரீர மெப்படியோ, அப்படியே சுவயசரீரத்திற்கூட அபிமானமில்லை. பிராரத்தபோகம் அநுபவ சாம்மியமாகையால், சாக்ஷாத்கார மற்ற பாலராதிகள்போல, மந்தாநு சந்தானத்தால், போகநிரபிமானமுமாய்க் கடமுற்பத்தியானதற்குமேல் குலாலன் சக்கரம் பிரமிக்குமாபோலப் பிராரத்தவாசனா பலத்தால், சஞ்சரிக்கிறதே ஜீவன்முத்தி.

பிரம்மக்ஞானோதயமானபின், சூரியோதயத்தால், இருள் கெடுவதுபோல, ஞானத்தால் அஞ்ஞான காரியமான சரீராதிகமழிந்து, விதேக கைவல்லியமாகாமல். மத்தியையில், ஜீவன்முத்தி கற்பனை யெப்படியெனில் விவேகத்தால் ரச்சுசர்ப்பப் பிராந்திகெட்டாலும் தற்காரியமான பயகம்பிதமிருப்பதுபோல, ஞானத்தால், அஞ்ஞான மழிந்தாலும் தற்காரியமான சரீராதிகளுக்கு ஸ்திதி யுண்டாமாகையால், பிரம்மவித்தியோற்பத்திசமகாலத்தில் நிஸ்ஸேஷமாய், அஞ்ஞானத்துடன் கூடின தேகபதனமானாலல்லது, பிரம்மவித்தியா சம்பிரதாயம் விச்சித்தியாம். ஆயினப்படியாயிற்றென்பையாயின், ஈச்சுரனால் பிரம்மன், பிரம்மனால் பிரசாபதி, பிரசாபதியால் மநு, மநுவால் சகலருமறிந்தாரென்று பிர்ம்ம வித்தியா சம்பிரதாயஞ் சொல்லுகிற சாந்தோக்கிய சுருதிக்கு விரோதமாம். ஆயினும், அஞ்ஞானிக்குச் ஜீவன் முத்தி சித்திக்கும் பொருட்டாய்ப் பிராரத்த கர்மவாசனாஞ்ஞான லேச சத்பாவம் அங்கீகரிப்பதனால், தேகஸ்திதியும், சிஷ்யோபதேசாதிகமும் சித்தித்திருக்கும்.

# ஆசிரியர் குறிப்புக்கள்

## குற்றவாளிகளும் தண்டனைகளும்

இயற்கையில் மனித சுபாவம் குற்றமுடையதன்று. எல்லாருமே பிறக்கும்போதே கெட்டவர்களாகவோ, குற்றத்தைச் செய்யும் சுபாவ முடையவர்களாகவோ பிறப்பதில்லை. ஆதலின் மனித சமூகத்தைச் சேர்ந்த சிலர் பலவிதமான கிரிமினல், சிவில் குற்றங்களைச் செய்யும்போது பற்பல சமய சந்தர்ப்பங்களை யொட்டியே அவற்றைச் செய்துவிடுகிறார்கள். ஆகவே குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டித்து விடுவதால் மட்டும் பயனில்லை. அக் குற்றத்திற்குக் காரணமாக இருந்தவைகளையும் போக்கிச் சமூகத்தைச் சீர்திருத்தவேண்டியது அவசியம். மேலும் குற்றவாளிகளுக்கும் சமூகத்துக்கும் சம்பந்தமே இல்லாமற் போய்விடவில்லை. பரஸ்பரம் பாதகம் ஏற்படுகிறது. ஆதலின் குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுத்தாலும் அவர்களும் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் முறையில் சில உரிமைகளைப் பெறத் தகுதியுடையவர்களாகவே இருக்கிறார்கள். அன்றியும் குற்றவாளிகளுக்குத் தண்டனை விதிப்பதன் நோக்கமே அவர்களைத் திருத்தி எதிர்கால வாழ்க்கையில் அவர்கள் நல்ல பிரஜைகளாக இருக்கும்படி செய்ய வேண்டுமென்பதுதான். இவ்வித உயரிய நோக்கங்களெல்லாம் சமீப காலமாகத்தான் ஏற்பட்டுவருகிறது. குற்றவாளிகளின் சுபாவம், சமூக அந்தஸ்து, குற்றம் செய்த காரணம் சமூகத்திற்கு ஏற்படும் பாதகம் முதலியவற்றை யெல்லாம் கவனித்தே தண்டனையை விதிக்கவேண்டுமே யொழிய எல்லாருக்கும் ஒரே விதமான தண்டனையை விதித்து விடுவதென்பது தவறு. மேலும் இப்பால் அரசியல் காரணங்களாலும் சிறைக்குச் செல்லும் நிலைமைகள் ஏற்பட்டுவிட்டிருப்பதால் சிறைச்சாலை சீர்திருத்தம் முக்கியமாகவும் அவசரமாகவும் கவனிக்கப் படவேண்டிய விஷயமாகி விட்டது. நமது தேசத்தில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்ட பிறகு, அதிகாரத்துக்கு வந்தவர்களிலேயே பலர் சிறைத் தண்டனையை அனுபவித்துத் தக்க அனுபவம் பெற்றவர்களாக இருந்ததால் சிறைச்சாலை சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தினார்கள்.

ஆனால் இப்போது அரசியல் நிலைமை மாறி இருக்கிறது. எனினும் அரசியல் நிலைமைகள் எப்படி யிருந்தாலும் சிறைச்சாலை சீர்திருத்தம், குற்றவாளிகளைத் தண்டித்தல் முதலிய விஷயங்கள் எல்லா கட்சியினரும் சர்க்காரும் கவனிக்கவேண்டியவை யாகும். இந்த உணர்ச்சி இப்போது நாட்டில் அதிகரித்திருக்கிறது. ஆதலின் சென்ற வாரத்தில் இது சம்பந்தமாகக் கவனிக்க பம்பாயில் ஒரு மகாநாடு கூடியது. பம்பாய் சீப் ஜஸ்டிஸ் அதன் வரவேற்புக் கமிட்டி தலைவராக இருந்தார். சமஷ்டி கோர்ட் பிரதம நீதிபதி மாரிஸ் க்வையர் அம் மகாநாட்டைத் திறந்துவைத்தார். பம்பாய் மாஜி உள்நாட்டு இலாகா மந்திரி ஸ்ரீ கே. எம். முன்ஷி அதில் தலைமை வகித்தார். தலைமை வகித்த ஸ்ரீ முன்ஷி காங்கிரஸ் தலைவர் என்னும் முறையில் சிறைத் தண்டனை பெற்று சிறை அனுபவம் உடையவர். மற்ற இருவரும் பெரிய அதிகாரிகள். ஆதலின் இம் மகாநாடு அதிக முக்கியத் தன்மை வாய்ந்ததென்பதில் சந்தேகமே இல்லை. அம் மகாநாட்டில் அகில இந்திய சிறைத் தண்டனை சீர்திருத்த லீக் என்று ஒரு சங்கத்தை யமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. மகாநாட்டைத் திறந்துவைத்த

சர். மாரிஸ் க்வையர் தமது பிரசங்கத்தில், 'எவ்வளவு கேவலமான காரியங்களைச் செய்துவிட்டாலும் ஒவ்வொருவருக்கும் சில உரிமைகள் உண்டு. குற்றவாளிகள் தொல்லையிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பதிலும், சமூகத்தின் அநீதிகளிலிருந்து குற்றவாளிகளைக் காப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்' என்று கூறியதையும், மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ. முன்ஷி, 'குற்றவாளிகள் செய்யும் குற்றங்கள் அவர்கள் அவ்வப்போது சம்பந்தப்படும் நிலைமைக்குத் தக்கபடி மாறுகிறது. ஆகவே குற்றத்துக்காக மட்டும் தண்டிப்பது போதாது. அது குற்றவாளிகளின் போக்கையும் அனுசரித்ததாக இருக்கவேண்டும்' என்று கூறியதையும் கவனிக்கவேண்டியது அவசியம்.

அம் மகாநாட்டைக் கூட்டிய ஐக்ய மாகாண மாஜி பார்லிமெண்டரி காரியதரிசி ஸ்ரீ. ஸ்ரீவத்ஸவா படித்த அறிக்கையில், ஜனநாயக மந்திரிகள் தான் முதன்முதலில் சிறை சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தினரென்றும், எனினும் சிறை அதிகாரிகளின் மனோபாவம் இன்னும் மாறவில்லையென்றும், சிறை நிர்வாகம் பூராவையுமே திருத்த வேண்டுமென்றும், குற்றவாளிகளுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிக்கவும், சிறையிலிருக்கையில் அவர்களுக்குத் தொழில் துறையில் பயிற்சி யளிக்கவும், இக்காலத்துக்கேற்றவாறு சிறைச் சட்டங்களைத் திருத்தவும் உழைக்க ஒரு லீக் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார். அவரது விருப்பத்துக் கிணங்கவே அம்மாதிரி ஒரு அகில இந்திய ஸ்தாபனம் ஏற்படுத்துவதென்றும் தீர்மானிக்கப் பட்டுவிட்டது. குற்றவாளிகளின் தண்டனை, சிறை வாழ்க்கை ஆகியவற்றின் சரித்திரத்தில் இனி புது யுகம் தோன்றுமென்றே நம்புகிறோம். எந்த விஷயத்திலும் கட்சிச் சண்டைகளையும், சொந்த மனஸ்தாபங்களையும் ஜாதிக் கூச்சலையும் கிளப்பி அதைக் கெடுத்துவிடுவதில் நாம் வல்லவர்களாக இருக்கிறோம். இதுவும் நாட்டின் துரதிர்ஷ்டமே. சிறை சீர்திருத்தம், குற்றவாளிகள் தண்டனை ஆகிய இதிலேனும் அவ்வாறெல்லாம் செய்யாமல் இந்திய மக்களனைவரும் ஒத்துழைத்து இச்சங்கம் நன்றாக வேலை செய்யும்படி கவனித்துக் கொள்ளவேண்டியது அவசியம். குற்றவாளிகளைத் தண்டித்து விடுவதால் மட்டும் பயனில்லை. அவர்களைச் சீர்திருத்தவும், தண்டனையின்போது அவர்கள் அநாவசியமாகக் கஷ்டப்படாதபடி கவனிக்கவும் வேண்டியது சர்க்கார் கடமையாகும். பொதுவாகவே இதுவரை நம் நாட்டில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், தாங்கள் பொதுஜனங்களின் ஊழியர்களென்பதை உணராமல் எஜமானர்களென்று நினைத்துக்கொண்டிருந்ததால் சிறை அதிகாரிகளும் அவ்வாறே தங்களை நினைத்துக்கொண்டு குற்றவாளிகளை நடத்தி வந்தார்கள். இனி அக்காலம் மலையேறி விட்டது. உத்தியோகஸ்தர்கள் பொதுஜனங்களின் ஊழியர்களே என்று நினைத்துக் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆதலின் போலீஸ், சிறை இலாகா அதிகாரிகளும் உத்தியோகஸ்தர்களும் குற்றவாளிகளும் சில உரிமைகளையேனும் உடைய பிரஜைகளே என்பதை உணர்ந்து அவர்களிடமும் நியாயமாகவும் கௌரவமாகவும் நடந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். சிறைத் தண்டனை சீர்திருத்த லீக் நல்ல வேலைகளைச் செய்யுமென்றும் அதற்கு நாட்டில் தக்க ஆதரவு கிடைக்குமென்றும், இதனால் சமூகம் விரைவில் சீர்திருத்தமடைந்து குற்றவாளிகளின் தொகை குறையுமென்றே நம்புகிறோம்.



## முஸ்லிம் ராஷ்டிரபதி ஆஸாத்

மௌலானா அபுல்கலாம் ஆஸாத் ராம்கார் காங்கிரஸ் தலைவராக மிகப் பெரும்பான்மையினரான காங்கிரஸ் வாதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தேசத்தின் இந்த நெருக்கடியான சமயத்தில் காங்கிரஸ் வாதிகள் மௌலானாவிடம் தலைமைப் பதவியை ஒப்படைத்திருப்பதிலிருந்து சில அரிய உண்மைகள் வெளியாவதை யாவரும் கவனிக்க வேண்டியது அவசியம். ஹிந்து முஸ்லிம் பிரச்னையைத் தாறுமாறாகக் கிளப்பித் தேசீய ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் முட்டுக் கட்டையாக ஜனாப் ஜின்னா போன்றவர்கள் தேசமே இரு தனி ஜாதியினரைக் கொண்டது என்னும் விஷமப் பிரசாரம் செய்துவரும் சமயத்தில், அக் கொள்கையை ஒப்புக் கொள்ளாமல் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தனித்தனி மதத்தினராயினும் ஒரே சமூகத்தினர் என்று வற்புறுத்தும் மௌலானா ஆஸாத் அவர்கள் தலைமை வகிப்பதால் அந்த முக்கிய பிரச்னை நன்முறையில் தீர்க்கப்படுமென்று நிச்சயமாகக் கூறலாம். காங்கிரசைச் சேராதவரும், முஸ்லிம்லீக் ஸ்தாபகர்களில் ஒருவரும், பம்பாயின் மாஜி கல்வி மந்திரியுமான சர். ரபியுத்தீன் அகமத் வெளியிட்ட அறிக்கையில், 'துரதிர்ஷ்டவசமாக ஜனாப். ஜின்னா சாதிக்கத் தவறிவிட்ட ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமையையும் வகுப்புச் சமரசத்தையும் மௌலானா ஆஸாத் சாதிப்பாரென்றே நான் நம்புகிறேன். காங்கிரஸ் மகுடத்தை இச்சமயத்தில் தரிப்பதற்கு அவரே தகுதியானவர். முஸ்லிம்களல்லாதாருக்கு முஸ்லிம்களின் மனோபாவத்தை எடுத்துரைக்க மௌலானாவை விடச் சிறந்தவர் கிடையாது' என்று தெரிவித்திருப்பது குறிப்பிடத் தக்கது. உண்மையிலேயே மௌலானா அபுல்கலாம் ஆஸாத் சிறந்த வைதிக முஸ்லிம் அறிஞர், இஸ்லாமிய ஒழுக்கங்களையும் மதக் கோட்பாடுகளையும் கட்டளைகளையும் தினசரி வாழ்க்கையில் ஒழுங்காக அனுசரித்துவரும் உத்தம முஸ்லிம் பெரியார், இஸ்லாம் சமய சம்பந்தமான ஞானம் நிரம்பப் பெற்றவர். இப்படிப்பட்ட மகான் இந்த வருஷம் காங்கிரஸ் தலைவராக இருப்பது தேசத்தின் அதிர்ஷ்டமேயாகும். ஹிந்துக்கள் தேசீய முஸ்லிம்களிடம் கொண்டுள்ள நம்பிக்கைக்கும் இது சிறந்த அத்தாட்சியாகும்.

மௌலானா ஆஸாத் காலஞ்சென்ற ஹக்கீம் அஜ்மல்கான், டாக்டர் அன்சாரி ஆகியவர்களுக்குப் பின் காரியக் கமிட்டியில் தொடர்ச்சியாக அங்கம் வகித்து மகாத்மாஜிக்குப் பெருந்துணையாக இருந்து வருகிறார். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் எங்கேனும் தகராறோ, பிணக்கோ ஏற்பட்டால் மத்தியஸ்தத்துக்கு அவரையே நியமிப்பது வழக்கம். அவர் பாரபக்ஷமின்றி விசாரித்துச் சமரசத்தை உண்டாக்கி விடுவார். பாஞ்சால காங்கிரசில் சமீபத்தில் அவர் ஒற்றுமையை ஏற்படுத்தியது மறக்க முடியாத விஷயம். மௌலானா அவர்கள் வலதுசாரியினர் என்று பொதுவாகக் கருதப்பட்டாலும் அவர் உண்மையான தீவிரவாதிகளையும் மதித்து நடப்பவர். காங்கிரஸ் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பதில் அவருக்கும் ஆர்வமுண்டு. அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் வெளியிட்ட அறிக்கையில், 'ஐரோப்பிய யுத்தத்தால் காங்கிரஸ் மாகாண நிர்வாகப் பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு திட்டமானதொரு போராட்டத்தில் இறங்க ஏற்பாடு செய்கிறது. இந்த நிலைமை ஏற்பட நான் விசேஷ

முயற்சி செய்தேன். இதிலுள்ள பொறுப்பையும் நான் நன்குணர்ந்திருக்கிறேன். 1935-ம் வருஷத்திய இந்தியா சட்டப்படி இனி காங்கிரஸ் பதவி ஏற்காது' என்று கூறியிருப்பதிலிருந்து அவர் தீவிரவாதத்தின் பக்கம் எவ்வளவு தூரம் சாய்ந்திருக்கிறார் என்பது தெரிகிறதல்லவா! ஆதலின் அவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் இடது சாரியினர்கள் பலர் ஒத்துழைத்ததில் தவறு ஏதுமில்லை. மௌலானா தமது செய்தியில், 'காங்கிரஸ் எல்லோருக்கும் பிரதிநிதி சபை, அதில் எலோரும் சேரலாம்; ஆதலின் முஸ்லிம்கள் சந்தேகத்தை விட்டு காங்கிரஸ் கொடியின் கீழ் வந்து சேரவேண்டும்' என்று வெளியிட்டுள்ள வேண்டுகோளை நாம் தேசமக்களனைவர்களிடமும் சமர்ப்பிக்க விரும்புகிறோம்.

*

## தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் இவ்வருஷத் தலைவராக ஸ்ரீ. கே. காமராஜ நாடார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஸ்ரீ. நாடார் நீண்டநாளைய காங்கிரஸ் ஊழியர்; ஒரே கொள்கையுடன் தலைமைப் பதவிக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகச் சேவை செய்துவருபவர்; ராமநாதபுரம் ஜில்லாவில் நல்ல செல்வாக்குள்ளவர்; சென்னை அசெம்பிளி மெம்பராகவும் இருக்கிறார். பிரம்மசாரி; அடக்கமான சுபாவமுடையவர். இப்படிப்பட்ட ஒரு சிறந்த ஊழியர் தலைவராக இருப்பது தமிழ்நாடு காங்கிரசுக்குப் பலத்தையே அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. அவர் எத்தகை மனவேறுபாடுகளும், சுயநலமும் இல்லாமல் சிரத்தையுடன் உழைத்துக் காங்கிரசின் செல்வாக்கையும் நற்பெயரையும் உணர்த்துவாரென்பது திண்ணம். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலுள்ள பலர் அவருடன் ஒத்துழைத்துக் காங்கிரசின் கட்டுப்பாட்டையும் பலத்தையும் பெருக்குவார்களென்றே நம்புகிறோம். இம்முறை தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் தேர்தலில் ஒரு நல்ல மாறுதல் ஏற்பட்டது வரவேற்கத் தக்கதே. ஸ்ரீ. நாடாருடன் போட்டி போட்ட ஸ்ரீ. சி. பி. சுப்பையாவும் ஸ்ரீ. காமராஜைப் போலவே சிறந்த காங்கிரஸ் ஊழியர். மாகாணத் தலைமைப் பதவியில் செல்வர்களும் தலைவர்களும் அதிகம் படித்தவர்களுமே இருப்பதென்பது மாறி இப்படிப்பட்ட ஊழியர்கள் தலைமை தாங்க முன்வந்திருப்பது காங்கிரஸ் ஊழியர்களுக்கு உற்சாகத்தையே அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. மேலும் காங்கிரஸ் எளியார்களுடைய சபை என்பதற்கும், ஜனநாயக முறையில் நடப்பதென்பதற்கும் இது ஒரு சிறந்த அத்தாட்சியாகும்.

நமது தமிழ்நாட்டில் காங்கிரசின் எதிரிகளுக்கு மகா ஜனங்களிடையே செல்வாக்கில்லையென்பது உண்மையேயாயினும் விஷமப் பிரசாரம் அதிகமாக நடைபெறுவதால் அதை எதிர்த்துப் பிரசாரம் செய்து காங்கிரசின் செல்வாக்கைப் பெருக்க வேண்டியிருப்பதுடன், காங்கிரஸ் ஸ்தாபனத்திலேயே ஒற்றுமையின்மையும், இதர குறைகளும் இருப்பதால் அவற்றைப் பரிசுத்தப் படுத்தவேண்டியதாகவும் இருக்கிறது. இத்தகைய கடமைகளையெல்லாம் ஸ்ரீ. காமராஜ நாடார் பொறுப்புடன் செய்து முடிப்பாரென்றே ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

*



## சுயராஜ்யத்திற்குத் தூண்கள்

சமீபத்தில் மகாத்மாஜி எழுதிய ஒரு கட்டுரையில், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை ஸ்தாபித்தவர்கள், அதை நிலை நிறுத்தும் பொருட்டு பிரிட்டிஷார் நலம், ராணுவம், சுதேச சமஸ்தானம், வகுப்புப் பிரச்னை ஆகியவற்றை நான்கு தூண்களாக அமைத்து விட்டார்களென்றும் இப்போது பிரிட்டிஷார் ஏகாதிபத்ய உணர்ச்சியை விட்டொழித்ததும், இந்தியாவில் ஜனநாயக அரசியலை நிறுவ முயற்சிப்பதும் உண்மையானால், ஏகாதிபத்ய தூண்களாக இருக்கும் அவற்றைத் தகர்க்கப் பிரிட்டிஷாரே முன்வர வேண்டுமென்றும் தெரிவித்திருந்தார். அதுபோலவே மகாத்மாஜி இப்போது இந்தியாவில் சுயராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டால் அது நிலையாக இருப்பதற்கு அஸ்திவாரமாக நான்கு தூண்களை நிறுத்தியே தீரவேண்டுமென்பதை வற்புறுத்தி காந்தி சேவா சங்க மகாநாட்டில் கூடிய ஊழியர்களிடையே பேசியிருக்கிறார். ஆனால் அவர் இந்த யோசனையை இப்போது புதிதாகக் கூறவில்லை. சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னர் அவர் இந்திய அரசியலில் தலையிட்டபோதே சுயராஜ்யத்துக்குரிய தூண்களான சமூக ஒற்றுமை, மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, கதர் சுதேசியம் ஆகிய நான்கு விஷயங்களையும் வற்புறுத்தினார். அதுமுதல் இந்த நான்கு விஷயங்களும் காங்கிரசில் நிர்மாண திட்டங்களாக இருந்து வருகின்றன. காங்கிரஸ் மகாசபை அப்போதைக்கப்போது நேரடியான போராட்டத்தை நடத்தினாலும் அல்லது அதை நிறுத்தி வைத்துச் சட்டசபை முதலிய 'பார்லிமெண்டரி' வேலையில் இறங்கினாலும், எப்போதும் விடாமல் செய்துகொண்டிருக்கவேண்டிய வேலை, இந்த நிர்மாண திட்டத்தைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதேயாகும். ஆனால் காங்கிரஸ்வாதிகள் சிலர் நேரடியான போராட்டத்திலும், பலர் 'பார்லிமெண்டரி' வேலையிலும் தான் அதிக கவனத்தைச் செலுத்தி உற்சாகத்தைக் காண்பிக்கிறார்களேயொழிய சுயராஜ்யத்துக்கு அஸ்திவாரமான இந்த முக்கிய வேலையில் சிரத்தை குறைவாகவே இருக்கிறார்கள். இதற்கு அதன் மகத்துவத்தை அவர்கள் இன்னும் சரிவர உணராததே காரணம்? மேலும் நிர்மாண திட்டத்தைப் பூர்த்தி செய்யும் வேலையில் இறங்கி உழைப்பது மிக்க சிரமமான காரியமாகும். எனினும் மகாத்மா அன்று முதல் இன்று வரை விடாமல் நிர்மாண திட்டத்தை மட்டும் வற்புறுத்தியே வருகிறார். இது காங்கிரசினாலும் காந்திஜியினாலும் வகுக்கப்பட்டதென்றாலும், தேச மக்களனைவராலும் ஜாதி, மத, கட்சி பேதமின்றி அனுஷ்டிக்கப்படவேண்டிய தேசிய நிர்மாண வேலையாகும். சுயராஜ்யத்தை எவர் ஸ்தாபிப்பதாயினும் அதற்கு அஸ்திவாரம் வேண்டாமா? தூண்களில்லாமல் கட்டடம் நிற்குமா? ஆகவே நாட்டு மக்கள் அனைவரும் நிர்மாண திட்டமாகிய சுயராஜ்யத்தின் தூண்களை நிறுவுவதில் கவனம் செலுத்தவேண்டியது அவசியம். அப்போதுதான் ஏகாதிபத்யத்தின் தூண்கள் தானாகவே தகர்க்கப்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை.

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

பிரமாதி௵ பங்குனி௴—கலியுகாதி 5041; சாலிவாகனம் 1862,
பசலி 1349, கொல்லமாண்டு 1115, ஹிஜரா 1358-59,
இங்கிலீஷ் 1940௵ மார்ச்சு௴—எப்ரல்௴

| பங்குனி௴ | மார்ச்சு௴ | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | வியா | பஞ்32-40 | ப✲11-35 | சி11-35ம | கிருத்திகை, சம்பத் கௌரி விரதம், காரடையான் [நோன்பு |
| 2 | 15 | வெள் | சஷ்35-23 | கிரு16-18 | சி16-18ம | சஷ்டி |
| 3 | 16 | சனி | சப்36-28 | ரோ19-18 | அ19-18சி | யாத்திரை, பிரயாணம் |
| 4 | 17 | ஞா | அஷ்35-35 | மிரு 20-10 | சித்60 | மருந்துண்ண |
| 5 | 18 | திங் | நவ32-48 | திரு 19-53 | சி19-53அ | வித்தியாரம்பம் செய்ய |
| 6 | 19 | செவ் | தச28-8 | புன17-20 | சித்60 | கரிநாள், எருவிட |
| 7 | 20 | புத | ஏகா21-53 | பூச13-18 | சித்60 | சர்வ, மத்வ ஏகாதசி |
| 8 | 21 | வியா | து14-15 | ஆயி7-45 | சித்7-45அ | பிரதோஷம், ஆயுதம் பழக |
| 9 | 22 | வெள் | திர5-43 | மக1-8 | மர1-8சித் | அவமாகம், மாடு வாங்க |
| | | | சது56-28 | பூர53-48 | | |
| 10 | 23 | சனி | ○47-0 | உத்46-25 | மர60 | பௌர்ணமி, ஹோளிகா பண்டிகை,பங்குனி உத்ரம் |
| 11 | 24 | ஞா | பிர37-58 | அஸ்39-20 | அ39-20சி | |
| 12 | 25 | திங் | துதி29-28 | சித்32-50 | பி32-50அ | |
| 13 | 26 | செவ் | திரி22-10 | சுவா27-28 | சி27-28ம | |
| 14 | 27 | புத | சது16-8 | வி23-30 | சித்60 | |
| 15 | 28 | வியா | பஞ்11-45 | அனு21-13 | சி21-13பி | |
| 16 | 29 | வெள் | சஷ்9-18 | கே20-50 | ம20-50அ | |
| 17 | 30 | சனி | சப்8-45 | மூல22-23 | சித்60 | |
| 18 | 31 | ஞா | அஷ்10-13 | பூரா25-43 | சி25-43அ | |
| 19 | 1940௵ ஏப்ரல் 1 | திங் | நவ13-23 | உத்30-43 | ம30-43அ | |
| 20 | 2 | செவ் | தச18-0 | திரு36-55 | சித்60 | |
| 21 | 3 | புத | ஏகா23-40 | அவி44-5 | பி44-5சித் | சர்வ, மத்வ ஏகாதசி |
| 22 | 4 | வியா | துவா30-8 | சத51-35 | மர51-35சி | வருணி திரயோதசி |
| 23 | 5 | வெள் | திர36-35 | பூர59-35 | சித்60 | மாச சிவராத்திரி |
| 24 | 6 | சனி | சது43-10 | உத்60 | சித்60 | திருதினஸ்பிருக் |
| 25 | 7 | ஞா | ●49-18 | உத்7-18 | அமி60 | சர்வத்திர அமாவாசை |
| 26 | 8 | திங் | பிர54-45 | ரே14-25 | சித்60 | யுகாதி பண்டிகை |
| 27 | 9 | செவ் | துதி59-28 | அஸ்20-58 | சித்60 | சந்திர தெரிசனம் [ளில்) |
| 28 | 10 | புத | திரி60 | பர26-38 | சி26-38அ | (கிருத்திகை சில விடங்க |
| 29 | 11 | வியா | திரி3-5 | கி✲31-13 | மர60 | கிருத்திகை, மாச சதுர்த்தி |
| 30 | 12 | வெள் | சது5-35 | ரோ34-33 | ம34-33சி | மேஷரவி நா-55-38 |
| 1 | 13 | சனி | பஞ்6-35 | மிரு36-38 | சித்60 | விக்கிரம வருஷப் பிறப்பு |

| | | | |
|---|---|---|---|
| கே-பு கு-கு | சுக் ச-செ | | |
| சூரி புத | 4கும்-வ-புத 9-ரிஷ-செ 16-ரிஷ-சுக் 28-மீன-புத | | |
| | | | |
| | | | ராகு |

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISAWMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

# ஞானசெல்வாம்பாள்

அல்லது

## இரண்டு சகோதரிகள் (5-பாகங்கள்.)

ஞானம்பாள் செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளே இந்த நாவலில் கதாநாயகிகள். இந்த கன்னிகைகள் மேலதிகாரமின்றித் தங்கள் பிரியப்படி நடக்குமாறு விடப்பட்டனர். அன்னிய வாலிபரிடம் தாராளமாய்ப் பழக்கப்பட விடப்படுவதே நல்ல நாகரீகமென்று கருதுவது முதலிய ஆசாரங்களால் விளையும் தீங்குகள் அனுபவமாய் விளக்கப்பட்டிருக்கின்றன. அதோடு பெரும்பாலான கன்னிகைகள் உலக அனுபவமில்லாத அந்தப் பருவத்தில் தங்களுக்குத் தகுதியான கணவர்களைத் தாங்களே தேர்ந்தறிந்துகொள்ளச் சக்தியற்றவர்களென்பதும், அயோக்கியர்களது வஞ்சக வலையில் அவர்கள் எளிதில் சிக்கிக்கொண்டு தங்கள் வாழ்நாள் முழுவதையும் பெருந்துன்பத்தை யனுபவிக்க நேருமென்பதும் இக்கதையால் நன்கு விளங்கும்.

இக்கதாநாயகிகளின் நடக்கைகளால் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் குணங்களைக் கைவிடாமல் நன்னெறியைக் கடைப்பிடித் தொழுகும் கன்னிகை முடிவில் நல்ல பலன்களையும், மேலான பதவியையும் அடைவாளென்பதும், அற்ப போகங்களிலும் படாடோப வாழ்க்கைகளிலும் இச்சை வைப்பவள் துன்பத்தையே யடைவாளென்பதும் தெளிவாய் நிருபிக்கப்படுகிறது.

இக்கதையில் சம்பந்தப்பட்ட முக்கியமான ஆடவனாகிய தேவராஜு என்பவனுடைய சரித்திரத்திலும், கிருஷ்ணராஜு மச்சாநதன் என்பவர்கள் சரித்திரத்திலும் மிக்க ஆச்சரியமும் மனதை யடியோடு கவர்ந்து கொள்ளத்தக்க அபூர்வ சம்பவங்களும் நிறைந்திருப்பதோடு பல அரிய நீதிகளும் நன்னெறிகளும் அனேகம் பொதிந்து கிடக்கின்றன என்பது வாசிப்போர்க்கு நன்கு புலப்படும். 5-பாகங்கள் விலை ரூபா 9–10–0.

# மின்சாரமாயவன்

இது ஓர் மிக்க அபூர்வமான திருடன் சரித்திரம்; இதன் கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் திருடன் கல்வியும் மிக்க புத்தி சாமர்த்தியமும் தீரமும் உடையவன். ஆதலால் அவன் செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும். அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒவ்வொருவரும் கருதார்கள். அப்படியிருந்தும் அவன் தப்பிக்கொள்வான். இது அறிவாளிகளுக்கு மிக்க விருப்பத்தை யுண்டாக்கத்தக்கது. மனிதர் உலக அனுபவம் பெற அறிந்துகொள்ளவேண்டிய பல விஷயங்களை பலர்க்கு அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம்வரை மனதைக் கவர்ந்துகொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண் பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம். இது நல்ல காகிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. சுமார் 350-பக்கங்களுக்கு மேலுடையது. இதன் விலை ரூபா 1—8—0.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# மதன கோலாகல தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா, அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தாலும், வரம்பற்ற போக நுகர்ச்சியாலும், இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒருவிதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும். இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம்மருந்தினால் நீங்கும். இரத்த விருத்தியை யுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.



இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த கைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒருமுறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

# நாக்குப்பூச்சியை நாசமாக்கும் பில்லை

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அரை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லை விலை அணு 6.



# சீதபேதி (டிசென்டரி) பவுடர்

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடிவயிற்று நோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணு 8.

# குழந்தை கக்கிருமல் நிவாரணி

இம்மருந்து கக்குவானால் கஷ்டப்படும் பிள்ளைகளுக்கு ஓர் ரக்ஷிணி. இது வெகு நேர்த்தியாகவும், சுகமாகவும், குழந்தைகள் சாப்பிடுவதற்கு இனிப்பாக இருக்கும். இரண்டு மூன்று நாட்களில் கக்கிருமல் நேரம் பொறுத்து கொஞ்சம் கொஞ்சமாக வந்து சில நாளைக்குள் பூர்த்தியாக குணத்தைத் தரும். இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0. தபாற்செலவு பிரத்தியேகம்.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

### மானிடர்க்கு மகிழ்ச்சியைத்தரும்

# மகா சந்தனாதித் தைலம்

அன்பர்களே! வெயிற்காலத்திற்கு இன்பந்தரும் இந்த மகா சந்தனாதித் தைலம், சிறந்த பல மூலிகைகளாலும், உயர்ந்த சந்தனக்கட்டைச் சத்தினாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான கற்க வகைகளினாலும் சித்த ஆயுர்வேத முறைப்படி பெரும் பிரயாசையின்மேல் செய்யப்பட்டு இப்போது வெளிவந்திருக்கிறது.



நூற்றுக் கணக்கான பணச் செலவின்மேல் தீர்க்க வேண்டிய வியாதிகளை யெல்லாம், இந்த சந்தனாதித் தைலத்தினால் தீர்த்துக்கொள்ளலாம்; இதற்குப் பல கனவான்கள் அநேகம் நற்சாக்ஷிப் பத்திரங்கள் அனுப்பியிருக்கின்றனர்.

இத்தைலத்தை வாரத்திற்கு இரண்டு முறையாக, சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் ஸ்நானஞ் செய்து வருவதால் கண்ணெரிச்சல், கண்களில் நீர் வடிதல், காதுநோய், தலைப்பாரம், மூளைக் கொதிப்பு, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, சாலேச்வரம், பித்த பாண்டு, காமாலை, அஸ்தி சுரம், நாவரட்சி, கைகால் எரிவு, தேக வெளுப்பு, மேக ரோகங்கள், அதிக வெட்டையினாலுண்டான துர்நாற்றங்கள், சொறி, சிரங்குகள், நமைச்சல், பீனிசம், கபால சூலை முதலிய வியாதிகள் நீங்கித் தேகத்திற்குச் சுகமுண்டாக்கும்; ஞாபக சக்தி அதிகப்படும்; கண்ணிற்கு நல்ல ஒளியுண்டாகும்.

இதைத் தேய்த்து நீடித்து ஸ்நானஞ் செய்து வருவதால் மூளையில் கொதிப்பு நீங்கிக் குளிர்ச்சி யுண்டாகும்; மூளை அதிர்ச்சி, துடி துடிப்பு, தலை நமைச்சல் முதலியவைகளும் நீங்கும்; மற்ற ரோகம் அறவே ஒழிந்துவிடும்; பித்தத்தினால் நரைத்த உரோமங்கள் கருமை யடையும்.

இத்தைலம் தேய்த்து ஸ்நானஞ்செய்த தினத்தன்று சீதள பதார்த்தங்களையும், தயிர் மோர் முதலியவற்றையும், பகல் நித்திரை, ஸ்திரீ சம்போகம் முதலியவைகளையும் நீக்கவேண்டும்.

இதன் விலை 1 சேர் தைலம் அடங்கிய டின் ரூபா 1–12—0
,, ½ ,, ,, 1—0—0

# இமயகிரி சஞ்சீவித் தைலம்

இது உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கக்கூடிய சிறந்த ஔஷதம். ஜலதோஷம், தொண்டை நோய், தலைவலி, கழுத்து நோய், ஜுரம், ஜன்னி, பிடிப்பு, வாந்திபேதி, ஈழை இருமல், இரைப்பு, அஜீர்ணம், வயிற்றுவலி முதலான வியாதிகளை உடனே கண்டிக்கும். இதன் சிறந்த குணத்தை அனுபோகத்தில் தெரிந்துகொள்ளலாம்.

புட்டி 1-க்கு விலை அணு 8. புட்டி 3-க்கு விலை ரூபா 1—4—0

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## அயக்காந்த சத்தின் திராவகம்

இந்தத் திவ்ய ஔஷதம், விஷ சுரம் முதலிய எத்தகைய ஜுரத்தினுலும் தேகம் மெலிந்து வெளுத்துப்போனவர்களுக்கும், வேறு பல வியாதிகளால் தாக்கப்பட்டுப் பலமற்றுப் போனவர்களுக்கும், தாது விருத்தி நாட்டங்கொண்டு பல மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாதவர்களுக்கு இது ஒரு அமிர்தமாகும் என்றே நிச்சயமாகக் கூறுவோம். இம்மருந்தை உட்கொள்வதால் மல ஜலம் தாராளமாய்க் கழிந்து பசியின்மையைப் போக்கி ஜீர்ண சக்தியைக் கொடுத்துப் பரிசுத்த இரத்தத்தைப் பெருக்கும். தாது விருத்தி உண்டாகும். தேகம் சிவப்படைந்து முகம் வசீகரமாகும்.



இம்மருந்தைச் சாப்பிடுகிறவர்கள் தேக திடத்தைப் பெற்று, வலிவுள்ள மக்களைப் பெறுவார்கள். சகல இன்பங்களையும் அனுபவிக்கலாம். ஆண்பெண் இருபாலரும் எப்பொழுதும் உபயோகிக்கலாம்.

பெரியவர்கள் ஒரு அவுன்ஸ் தண்ணீர் அல்லது பசும் பாலில் 10, 12 துளி வரையிலும், சிறியவர்கள் 2-முதல் 6, 7 துளிகள் வரையிலும் காலை மாலை இரு வேளையும் சாப்பிடவேண்டும். இதற்கு யாதொரு பத்தியமுமில்லை. எல்லா ஏழைகளும் வாங்கி உபயோகிக்கும்பொருட்டே மிகக் குறைந்த விலைக்கு விற்கிறோம். ஒரு மாதம் சாப்பிடக்கூடிய மருந்தின் விலை அணு 12. தபாற் செலவு வேறு.

## சிவப்பிரகாச பல் பொடி

இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல்பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும், பல்வலி, பல்லில் சொத்தை, ஈறு வளர்ந்திருத்தல், வாய் ரணம், வாய் நாற்றம், பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவதுமல்லாமல், பல் நன்றாய்த் துலங்கும்படிச் செய்யும். வாயில் சதா கம கம வென்னும் மணத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய பல் பொடி டப்பி 1-க்கு விலை அணு 2.

6 டப்பிகள் அணு 10.



தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## ஜீவாதார சஞ்சீவி திராவகம்

இது தங்கம், அயம், மற்றும் சில சத்துப் பொருள்களைச் சேர்த்து அனுபோக முறையில் தயார் செய்யப்பட்டதாகும். சரீரத்திலுள்ள நசநாடிகளும் தளர்ந்து பலங் குறைந்து அகால மரணத்துக் குள்ளாகும் கொடிய விபத்துக்கு இத்திராவகம் கைகண்ட சஞ்சீவியைப் போன்றது. இது சரீரத்திற்கு சுகத்தைக் கொடுத்து, ஆயுளை விருத்திசெய்து, பலவீனம், கைகால் ஓய்ச்சல், சோம்பல், தேகம் மெலிதல், ஜீரணக் குறைவு, புளியேப்பம், பசியின்மை, ஞாபகக் குறைவு, தைரியமின்மை, தாது நஷ்டம், கண்டமாலை, மலச்சிக்கல், நரம்புத் தளர்ச்சி, மார்நோய், சரீரம் வெளுத்தல் முதலிய வியாதிகளை ஒரு வாரத்திற்குள் மாந்திரீகம்போல் குணப்படுத்தும். இது வரையில் எந்த வைத்தியர்களாலும் கண்டுபிடிக்கப்படாத அவுஷதம் இதுவே என்பதை இதை உட்கொண்ட ஐந்து நிமிஷத்தில் தெரிந்து கொள்ளலாம். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரையிலும் உபயோகிக்கலாம். புட்டி 1-க்கு விலை ரூ. 1. புட்டி 3-க்கு விலை ரூ. 2—8—0.



## மோஹினி பரிமள

## கூந்தல் தைலம்

5-வித இனும் சாமான்கள்
சேர்த்தனுப்பப்படும்.




இந்தத் தைலத்தை கூந்தலில் தடவிக கொண்டால் அன்று மலர்ந்த புஷ்பங்களின் வாசனைக்கு நிகராயிருக்கும். கூந்தலுக்கு வளர்ச்சியைத் தருவதுடன் தலைக் கொதிப்பையும் அடக்கி தேகத்திற்கு ஆரோக்கியத்தைத் தரவல்லது. இதன் விலை அணு 13.

இனும் சாமான்கள்:—1-செண்டு புட்டி, 1-புருச், 1-தந்த சீப்பு, 1-கலர் சாந்து, 1-சிறிய கண்ணாடி.

## வாத ஜீர்ணபி லேகியம்

இந்த லேகியத்தை கெச்சைக்காய் பிரமாணம் காலை, மாலை சாப்பிட்டால் அக்னி மந்தம், வயிற்றுவலி, குன்மம், வாதம் முதலிய அநேக ரோகங்கள் தீரும். பத்திய விவரம் மருந்துடன் சேர்த்து அனுப்பப்படும்.

டப்பி 1-க்கு விலை ரூபா 1. தபால் செலவு வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## காப் கியூர் என்னும் க்ஷய அரி



கப இருமல், இரைப்பு அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டை யெரிச்சல், தொண்டைக் கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதி கொண்டிருந்தவரை தூங்கச் செய்யும். புட்டி 1-க்கு விலை ரூபா 1.

## கள்ள நோய் நிவாரணி

### இது 3-தினத்தில் குணப்படுத்தும்

மேக உஷ்ணம் என்பது வரம்பற்ற ஸ்திரீ போகத்தினால் தாது கெட மூலத்தில் அக்னி அதிகரிப்பதனால் ஏற்படும் கள்ளநோய். நீரடைப்பு, சதையடைப்பு, பவுத்திரம், அரையாப்பு முதலியன இந்த நோயின் மூலமாய் ஏற்படும். நீர்க்கடுப்பும், குத்தலும், எரிச்சலும் காண்பதுண்டு. இவைகளை நீக்கி நல்ல சுகத்தைக் கொடுக்கக்கூடிய அநுபவ மருந்து இது. பத்தியம் கிடையாது. இதனை உபயோகிக்கும் விவரம் மருந்துடன் அனுப்பப்படும்.

புட்டி 1-க்கு விலை ரூபா 1. தபாற்கூலி வேறு.

## மயிர் போக்கும் சூரணம்

இந்த சூரணத்தை ஜலத்தில் கலந்து, மயிர் போக்கவேண்டிய யிடத்தில் தடவி உலர்ந்த பின் உடனே 5-நிமிஷம் பொறுத்து கழுவினால் மயிர் போய்விடும். புட்டி 1-க்கு விலை அணா 8.

## மயிர் போக்கும் சோப்



இது ஒவ்வொருவருக்கும் மிக்வும் அத்தியாவசியமானது. சரீரத்தின் எந்தப் பாகத்திலுமுள்ள மயிரை இந்த சோப்பின் உதவியால் பிரயாசையின்றி வெகு சுலபமாய் போக்கிவிடலாம். மயிரைப் போக்கவேண்டிய இடத்தில் கொஞ்சம் ஜலத்தைப் பூசி, அதன்மேல் இந்த சோப்பைத் தேய்த்து ஐந்து நிமிஷம் கழித்து காகித கார்டினாலாவது, ஓலைத் துண்டினாலாவது வழித்தால் அவ்விடத்திலுள்ள மயிர் யாவும் கழிந்து போகும். அந்த இடம் பிறகு மழமழப்பாக விருக்கும். இந்த சோப்பில் துர்நாற்றம் முதலியவை இரா. 3-சோப் கொண்ட பாக் 1-க்கு விலை அணா 14.

---

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.



## அமெரிக்கன் ரிங்வொரம் கிரீம்

சரீரத்திலும், இடுப்பிலும் மற்றப் பாகங்களிலும் தோன்றி அதிக கமைச்சலையும், தொந்திரவையும் உண்டுபண்ணும் சகல படைகளுக்கும் இது கைகண்ட அவுஷதம். முகத்தில் தோன்றும் தேம்பல், வங்கு முதலியவற்றை உடனே போக்கும். இதற்கு நிகரான மருந்து வேறே கிடையாது. சரீரத்தை மிருதுவாயும், அழகுடையதாயும் செய்வதில் இது இணையற்றது. புட்டி 1-க்கு விலை அணா 8. 3-க்கு விலை ரூ. 1—4—0.

## ப்ரெஞ்சு லெட்டர்ஸ் என்னும்

### ரப்பர் பெஸ்ஸாரிகள்



கருதரித்தலைத் தடுக்கும் பொருட்டுப் புருஷர்கள் உபயோகப் படுத்துவதற்கான ரப்பர் கருவிகள் யாவரும் உபயோகிக்கலாம். நெ. 1. ஜீத் 1-க்கு ரூ. 1—12—0. நெ. 2. ரூ. 1. நெ. 3. அணா 12. நெ. 4, விலை அணா 8.

### பெண்களுக்கேற்ற கருவி

சாஸ்திர ஆராய்ச்சி செய்து கர்ப்பத் தடைக்கு இன்றியமையாததென்று கருதப்படுவதும் டாக்டர் மேரிஸ்டோப்ஸ் முதலானவர்களால் சிபார்சு செய்யப்படுவதுமான இந்த மெல்லிய பெஸ்ஸாரியை எந்த ஸ்திரீயும் கருத்தடைக்காக உபயோகப்படுத்திக்கொள்ளலாம். உபயோகிக்கும் விதம் சேர்த்து அனுப்பப்படும். சிறியது விலை ரூபா 2. பெரியது விலை. ரூ. 2—4—0.

கருணாநிதி டிபோ, நெ. 1/6, வெங்கடேசமேஸ்திரி தெரு, மதராஸ்.

---

## புதிய கொக்கோக வசனம்

### (உண்மையான இன்ப நூல் இதுவே.)

இதைப்போன்ற பலவித புஸ்தகங்கள் வெளிவந்திருப்பினும், அவைகளின் விஷயங்கள் மனதிற் பதியுமாறு எழுதப்படவில்லை. ஆனால் இச்சிறு நூலில் ஆண் பெண் இருபாலரும் சிற்றின்ப சம்பந்தமாகவும், இல்வாழ்க்கை சம்பந்தமாகவும் அறியவேண்டிய பல விஷயங்களும், மர்மங்களும் தெளிவான நடையில், சுருங்கச்சொல்லி விளங்கவைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஆறும் பதிப்பு வெளியானதாலேயே இதை மக்கள் எவ்வாறு விரும்புகிறார்களென்பது தெரிகிறது. சட்டைப் பையில் அடங்கும்படியான அளவு புஸ்தகம் விலை ரூபா 1.

**பழைய கொக்கோகம் விலை ரூபா 1.**

**மன்மதன் திருவிளையாடல் விலை ரூபா 1.**

வி. பி. சார்ஜ் வேறு.

---

ஆரியன் புக் டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

## நூதன தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்-

| ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை. | ரூ. | அ. |
|---|---|---|
| ஞானசெல்வாம்பாள் 5பாகம் | 9 | 10 |
| கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ... | 1 | 4 |
| கடற்கொள்ளைக்காரன்2பாகம் | 3 | 4 |
| மதனாம்பாள் 2-பாகம் ... | 3 | 0 |
| லோகநாயகி ... | 1 | 0 |
| விளையாட்டுச் சாமான் ... | 1 | 6 |
| பவளத்தீவு 2-பாகங்கள் ... | 3 | 0 |
| தபால்கொள்ளைக்காரர்கள் ... | 0 | 14 |
| அமார்வதி 2-பாகங்கள் ... | 4 | 0 |
| மஞ்சள் அறையின் மர்மம் ... | 1 | 8 |
| கற்கோட்டை ... | 2 | 0 |
| பூங்கோதை ... | 0 | 10 |
| வீரநாதன் ... | 0 | 12 |
| கனகபூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 |
| கமலசேகரன் ... | 1 | 12 |
| தினகரசுந்தரி ... | 1 | 0 |
| ரத்தினபுரிரகசியம் 9பாகமும் | 18 | 2 |
| சந்திராபாய் ... | 2 | 0 |
| இராஜாமணி ... | 2 | 0 |
| இரத்தினாபாய் ... | 1 | 12 |
| மதனபூஷணம் ... | 1 | 0 |
| சுவர்ணாம்பாள் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 |
| குணசுந்தரன் ... | 0 | 12 |
| பத்மாஸனி ... | 0 | 14 |
| ஆனந்தலிங் ... | 2 | 0 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 |
| ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள் | 1 | 12 |
| ஆரூர் இலக்ஷ்மணன் ... | 2 | 0 |
| கைவல்லிய நவநீத வசனம் ... | 1 | 8 |
| [illegible]தோதராவிஞ்சை ... | 0 | 7 |
| தத்வசங்க்ரஹ ராமாயணம் ... | 4 | 0 |
| ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் [illegible]பதேசங்களும் | 1 | 12 |
| விவேகா[illegible] ... | 4 | 0 |
| [illegible]மிழ [illegible]ரியா மெடிகா ... | 3 | 0 |
| [illegible]தவி மாதவன் 2-பாகம் ... | 2 | 0 |
| மலையாள பகவதி ... | 1 | 0 |
| அற்புத நவநீத ரமபை ... | 1 | 0 |
| அகட விகட விலாச விநோதம் | 0 | 10 |
| தங்கக் குகை இரகசியம் ... | 0 | 12 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| துயராளன் கதை ... | 0 | 10 |
| பூலோக லக்ஷ்மி கதை ... | 0 | 12 |
| கனகரத்தினம் ... | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் ... | 0 | 12 |
| நளின சுந்தரி ... | 0 | 10 |
| கம்பராமாயண வசனசங்கிரகம் | 2 | 0 |
| குசேலோபாக்கியான வசனம் | 1 | 0 |
| ஸ்ரீபாலன் ... | 0 | 8 |
| உதயணன் ... | 0 | 7 |
| தசக்கி[illegible]வன் ... | 0 | 14 |
| போஜ சரித்திரம் ... | 0 | 5 |
| சதானந்தர் ... | 1 | 4 |
| ஜீவகன் வசனம் ... | 1 | 0 |
| கர்ணன் சரிதை ... | 0 | 12 |
| பீஷ்ம விஜயம் ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் ... | 0 | 8 |
| முப்பெருந்தாசர் ... | 0 | 10 |
| அரிச்சந்திரன் சரிதை ... | 0 | 8 |
| நீலக்கொடி ... | 0 | 5 |
| மணவாளன் ... | 0 | 3 |
| பரசுராமன் ... | 0 | 3 |
| சிசுபாலன் ... | 0 | 8 |
| அங்கதன் ... | 0 | 4 |
| தசாவதாரம் ... | 0 | 6 |
| கிருஷ்ணன் தூது வசனம் ... | 0 | 8 |
| சண்டோபாக்யானம் ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | 0 | 8 |
| சத்தியவசனி | 0 | 4 |
| விமலன் ... | 0 | 4 |
| கண்ணபிரான் ... | 0 | 4 |
| செய்புட்பாடத்திரட்டு ... | 0 | 4 |
| நாலுமந்திரி கதை ... | 0 | 4 |
| மங்களேசுவரன் ... | 0 | 6 |
| தக்கன் ... | 0 | 6 |
| சீமந்தனி ... | 0 | 8 |
| நான்குகோடி ... | 0 | 4 |
| மதிமோசவிளக்கம் ... | 1 | 0 |
| மெய்க்காதலி ... | 0 | 8 |
| மேனாமினுக்கி கதை ... | 0 | 8 |
| வீணாகானன் ஞானேந்திரி ... | 0 | 8 |
| மனோன்மணி கதை ... | 0 | 8 |
| கோமளவல்லி கதை ... | 0 | 8 |
| விகடவல்லி கதை ... | 0 | 6 |
| தாலிகட்ட மறந்த கதை ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நே. 167, மதராஸ்.